P.G.S. Kms

உ

முருகவேள் துணை

# புகழேந்திப்புலவர்

## முதல் அத்தியாயம்

### இளமைப்பருவம்

நாம் வசிக்கும் பாரதகண்டமாகிய இவ்விந்திய நாடு, பல்லாயிரம் வருடங்களுக்கு முன்னரே, இப்போது நாகரிகத்தில் தலைசிறந்து விளங்குகின்ற ஏனைய தேசங்களினும் மேலாகப் பலவகைகளிலும் சிறந்து விளங்கியதென்பது அறிவாளர் அறிந்ததேயாம்.

இத்தகைய இந்நாட்டின் பெருமைக்கு ஆதாரமாக இங்கு அக்காலத்தில் பல்வகைத் துறைகளிலும் அறிவு நிரம்பிய பல பெருமக்களும், புலவர்களும், கொடையாளரும் நிரம்பியிருந்தனர். ஆனால், அக்காலத்தில் நம் நாடு இருந்த நிலையையும், நம் நாட்டினர் பெற்றிருந்த பெருமையையும், உள்ளன உள்ளவாறே அறிய நமக்கு உதவுவன அக்காலத்துப் பெரும் புலவர்கள் இயற்றியருளிய நூற்களேயாம். அந் நூற்களையும், அவைகளை இயற்றிய புலவர் ளைப் பற்றியும் நாம் ஆராயத் தொடங்குவோமானால் அவர்கள் லத்து நம் நாட்டின் நிலைமை எவ்வாறிருந்ததென் ஒருவாறு புலனாம். இக்கருத்துப்பற்றியே ஈண்டு நாம் லாவதாகப் புகழேந்திப்புலவர் என்னும் பெரியாரின் த்தை ஆராய்ந்து எழுதத் தொடங்கினோம். நிற்க.

* "செந்தமிழ் மொழிக்கலைச் செல்வர்கூட் டுண்ண
நளன்மடை போல வுளம்மகிழ் வுறுத்துஞ்
செம்பாக மாகவச் சீர்நளன் காதையை
வெண்பாவின் யாத்த வியத்தகு கவிஞர்' (1)

புகழேந்திப் புலவர் என்பவர். இப்பெரியார்,

"கயிலையுங் கச்சியும் விற்கோ லமுநற் கழுக்குன்றமும்
பயில்வலி தாயமும் பாசூரு மச்சிறு பாக்கமுநல்
லயிலையும் வல்லந் திருவொற்றி யூரு மாசிலிய
மயிலையு மீசன் மகிழ்ந்ததன் றேதொண்டை மண்டலமே'(2)

என்றும், இன்னும் பலவாறாகவும் புகழ்ந்து கூறப்பட்ட தொண்டை மண்டலத்தில் உள்ள செங்கற்பட்டுக்கு அருகில் இருக்கும் பொன்விளைந்தகளத்தூரில்,† "வேளாளன் என்பான் விருந்திருக்க உண்ணாதான்," என்றும், "எந்நாளும் காப்பாரே வேளாளர் காண்," என்றும்,

"வியனுறு மெதிரதூஉம் வீழாக் கொடையும்
பயனுறூஉந் தொழிலும் பழியாப் பண்பும்
வாய்மையு மறிவு மாஅன்பு மாண்மையுந்
தூய்மையும் பொறையுந் தோற்றமு மன்பு
முளங்கோ ளிரக்கமு மொழுக்கமு முதலா
விளங்கு விழுக்குடி வேளாண் குடியே" (3)

என்றும், அறிஞர்களால் புகழ்ந்துகூறப்பட்ட வேளாளர்களில் ஒரு வகுப்பினராகிய தொண்டைமண்டலத் துளுவ வேளாளர் குலத்திலே, சுமார் ஆயிரம் வருடங்களுக்கு முன்னர் அவதரித்தனர்.

அறிவிற் சிறந்தாராவர் எனத் தோன்றிய புகழேந்தியாரை அவர் அன்னையும் பிதாவும் பெரிதும் அன்புடனும் ஆர்வத்துடனும் மிக அருமை பெருமையாக வளர்த்து

---

* திருவாளர் வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார் பாடியது.

† இவ்வூர் செங்கற்பட்டுக்குத் தெற்கே உள்ள 'ஒத்திவாக்கம்' இரயில்வே ஸ்டேஷனுக்குச் சமீபத்தில் இருக்கிறது.

வந்தனர். நாட்கள் கடந்தன; வாரங்கள் சென்றன; மாதங்கள் மறைந்தன! குழந்தையாகிய புகழேந்தியார் பிறந்து ஐந்து வருடங்கள் பூர்த்தியாயின. ஆறுவது வருட ஆரம்பத்தில் புகழேந்தியாரின் அன்னையும் தந்தையும் அவரை அக்காலமுறைப்படி செய்வனசெய்து தக்க வோர் ஆசிரியரிடத்துக் கல்வி பயில விடுத்தனர். அவ்வாசிரியர்,

“குலனருள் தெய்வங் கொள்கை மேன்மை
கலைபயில் தெளிவு கட்டுரை வன்மை
நிலமலை நிறைகோல் மலர்நிகர் மாட்சியும்
உலகிய லறிவோ டுயர்குண மினையவும்
அமைபவன் நூலுரை யாசிரி யன்னே” (4)

என்னும் இலக்கணத்துக்கு ஒத்து விளங்கினர். இத்தகைய அறிவிற் சிறந்த ஆசிரியரிடத்தில் புகழேந்தியார்;

“அழலி னீங்கா னணுகா னஞ்சி
நிழலி னீங்கா னிறைந்த நெஞ்சமொ(டு)
எத்திறத் தாசா னுவக்கு மத்திறம்” (5)

நடந்து ஆசிரியரைக் களிப்பித்துப், பின்னும் அவர் உள்ளம் மகிழும்படி ஒவ்வொருதினமும் அவரிடம்,

“பொழுதொடு சென்று வழிபடல் முனியான்
குணத்தொடு பழகி அவன் குறிப்பிற் சார்ந்து
இருவென இருந்து சொல்லெனச் சொல்லிப்
பருகுவ னன்ன ஆர்வத்த னாகிச்
சித்திரப் பாவையி னத்தக வடங்கிச்
செவிவா யாக நெஞ்சுகள னாகக்
கேட்டவை கேட்டவை விடாதுளத் தமைத்துப்
போவெனப் போதல்” (6)

என்னும் முறையினின்று ஒரு சிறிதும் தவறாது நடந்து வந்தனர். அன்றியும்,

“......................வழக்கறிதல்
பாடம் போற்றல் கேட்டவை நினைத்தல்

ஆசாற் சார்ந்தவை யமைவரக் கேட்டல்
அம்மாண் புடையோர் தம்மொடு பயிறல்
வினாதல் வினாயவை விடுத்த லென்றிவை
கடனாக்கொண்டு" (7)

ஒழுகி வந்தனர். அதனால் அவர் கல்வியிலும், அறிவிலும், அனுபவத்திலும், நன்னடக்கையிலும் வளர்பிறைபோல் வளர்ந்து வருவராயினர். அது கண்ட அவர் ஆசிரியரும் ஏனையோரும் அவரைப்போற்றலாயினர். அவரது தந்தை அளவிலா மகிழ்ச்சியடைந்தனர். அவரது தாயோ,

"ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோ னெனக்கேட்ட தாய்" (8)

என்னும் திருவாக்குப்படியே தமது அருமருந்தன்ன புத்திரரின் பெருமையைக் கண்டு மனம் பூரித்தனர். "விளையும் பயிர் முளையிலே தெரியும்" என்னும் பழமொழிப்படி புகழேந்தியார்,

"நூலார் கலைவல்ல செம்பியன் கேட்க
நொடித்துமிக்க
கோலா கலனொட்டக் கூத்தனை யென்றுதற
கோலியென்று
மேலார் கவிசொல்லி நெய்த்தானத் தேசென்று
வென்றுகொண்ட
மாலார் களந்தைப் புகழேந்தி" (9)

என்றும்,

"நளனைப் புகழ்கின்ற வெண்பாவைப் பாடிநன்
றூட்கவிதைக்
கழகந்தின் மிக்க புகழேந்தி யாங்கவி ராசன்" (10)

என்றும் பிற்காலத்தார் போற்றத்தகுந்த புகழை அடைவார் என்று அக்காலத்திலேயே அநேகர் கூறும் படியான அறிவு நிரம்பியவராகத் தோன்றினார்.

# இரண்டாம் அத்தியாயம்

## மதுரைக்குச் செல்லல்

ஆசிரியரிடத்துக் கற்க வேண்டியவைகளை யெல்லாம் நம் புகழேந்தியார் கற்றுத்தேர்ந்தனர். கற்றகல்வியைக் கலாசாலையோடு ஒழித்துவிடும் மாணவர்களைப்போல் அல்லாமல், நமது புலவர் பெருந்தகையாரான புகழேந்தியார், தாம் ஆசிரியரிடத்துக் கற்ற விஷயங்களை ஆதாரவாகக் கொண்டு, பின்னும் தாமே முயன்று அரிய பெரிய விஷயங்களை ஆராய்ந்தறிந்து கல்விக்கடலாய் விளங்கினர். சிறு தொகையை முதலாகக்கொண்டு பெரும் பொருளைச் சேகரிக்கும் திறமுடையானைப்போல, ஆசிரியரிடம் தாம் கற்ற விஷயங்களை ஆதாரவாகக் கொண்டு கல்வித்துறைபோய நம் புலவர் பெருமகனாரைக் கொண்டாடாதவர் ஒருவருமிலர். அக்காலத்தில் அவரைச் சூழ்ந்திருந்தவர்கள் எவரேயாயினும், தங்களுக்குள் கல்விசம்பந்தமாக ஏதேனும் சந்தேகம் வந்துவிடின், அவரையே கேட்டுச் சந்தேகம் தெளிவார்கள். அதிகமேன், நம் புகழேந்தியாரின் ஆசிரியரே ஒவ்வொரு காலத்தில் வித்தியாசம்பந்தமாகத் தமக்குத் தோன்றும் சந்தேகங்களைப் புகழேந்தியாரிடம் கேளாமற் கேட்டுத் தெரிந்து கொள்ளுவாரென்றால், மற்றவர்களைப்பற்றிக் கேட்பானேன்?

பின்னும் சிறிது காலத்திற்கெல்லாம் நமது புலவர் பெருந்தகையின் புகழ் நாடெங்கும் பரவ, அதனால் அவர் புகழேந்தியாராயினார்! அதுவே அவர் பெயராக நிலைக்க அதனால், அவரது இயற்பெயர் இன்னதென இக்காலத்தில் அறியமுடியாதவாறு மறைந்தது!

கல்வியிற் சிறந்த புகழேந்தியார் "கற்றது கைம்மண்ணளவு; கல்லாதது உலகளவு" என்னும் கருத்தை உன்னி, தாம் கற்றது மிகக் கொஞ்சம் என்றெண்ணி, அடக்கமே ஓர் உருவெடுத்துவந்தாற்போல் விளங்கினர்! அன்றியும், "யானையின் பலம் யானைக்குத் தெரியாது" என்பதுபோலத்

சங்கப் புலவருந் தழைத்தினி திருக்கு
மங்கலப் பாண்டி வளநாடு" (11)

சென்று, அந்நாட்டிற்குத் திலகம்போல் விளங்கும் மதுரையை அடைந்தனர்.

## மூன்றும் அத்தியாயம்

### சமஸ்தான வித்துவானுதல்

**கல்வியாலும்** அறிவாலும் சிறந்த புலவர் புகழேந்தியார்,

"மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்டுஞ்சார்
எவ்வெவர் தீமையு மேற்கொள்ளார்—செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்பும் கொள்ளார்
கருமமே கண்ணாயினார்." (12)

என்னும் கருத்திற்கிணங்கத் திருவாலவாயை அடைய வேண்டுமென்னும் அவா மேலீட்டினால், வழிநடப்பதால் உண்டாகும் சிரமத்தைச் சிறிதும் பொருட்படுத்தாது சென்று, கூடல் நகரையடைந்ததும், அங்கோரிடத்துத் தங்கி, அப்போது அங்கு அரசனாய் இருந்த வரகுணபாண்டியன் இரண்டாவன் என்பவனைச் சமயமறிந்து சென்று கண்டனர்.

கண்டதும், கல்வியாலும் நற்குணத்தாலும் சிறந்தவனாகிய அவ்வரசன் அவரை அங்கோராசனத்திருக்கச் செய்து 'பெரியீர், நீவிர் யாவர்? எம்மிடம் வந்த காரணம் யாது?' என்று வினவினன்.

இவ்வாறு அவன் கேட்டவுடன் நமது புகழேந்தியார் தம்முடைய வரலாற்றைக் கூறித் தாம் கூடலம் பதிக்கு வந்த காரணத்தையும் எடுத்துரைத்து,"தம்முடையாற்றல் உணரா ரிடையினும் தம்மைப் புகழ்தல் தகும் புலவோர்க்கே" என்பதற் கேற்பத் தமது பிரதாபத்திலும் சிறிதெடுத்தியம்பினர்.

புகழேந்தியார் கூறியவற்றையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த அரசனாகிய வரகுணன் இன்ப மெய்திப் பின்னும் அவர் கல்வித்திறம் எத்துணைத்தென்றறிய அவரோடு அளவளாவினான். அவ்வாறு பேசியதற்கு இடையே அவன் தனக்கும் தன்னாட்டுப் புலவர்களுக்கும் தெரியாத பல விஷயங்களைப் பற்றி அவ்விடம் கேட்டான். அக்கேள்விகளுக்கெல்லாம் புகழேந்தியார் சர்வ சாதாரணமாகப் பதில் கூறி வந்தனர்.

முடிவாக வரகுணன் அவர் கல்வித்திறத்திற்கு மெச்சி "அருந்தமிழ் வல்லீர் இந்நாட்டில் கல்வியில் உமக்கு ஒப்பாரும் மிக்காரும் இலர். ஆதலின் நீர் இங்குக் கற்றுக்கொள்ளக் கூடியது ஒன்றுமில்லை. நீவிர் நமது சமஸ்தான வித்துவானாக அமர்ந்து நமது சபைக்குப் பெருமை தோன்ற வாழ்ந்துகொண்டிரும்'' என்று வேண்டிக்கொண்டான். புகழேந்தியாரும் அவ்வேண்டுகோளை மறுப்பதற்கியலாது, அரசன் இஷ்டப்படியே, அவனது சமஸ்தான வித்துவானாய் இருப்பதாக ஒப்புக்கொண்டார்.

> "ஒன்றை நினைக்கின் அதுஒழிந்திட் டொன்றாகும்
> அன்றி அதுவரினும் வந்தெய்தும்—ஒன்றை
> நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும்
> எனையாளும் ஈசன் செயல்''

என்னும் வெண்பா புகழேந்தியாரின் விஷயத்தில் எவ்வளவு பொருத்தமுடையதாகக் காணப்படுகின்றது பாருங்கள். 'மதுரையில் தம்மினும் சிறந்த புலவர் எவரேனும் இருப்பர்; அவரிடம் பின்னும் பல விடயங்களைக் கேட்டறியலாம்' என எண்ணி மதுரைக்கு வந்த புலவர் தம் எண்ணப்படி அத்தகையார் அங்கொருவருமில்லாது போகவே, அரசன் அவரைச் சமஸ்தான வித்துவானாக ஏற்றுக்கொண்டமையை உன்னிப்பாருங்கள். மக்களுக்கு இன்பதுன்பங்கள் எதிர்பாராது வருவது இப்படித்தான்.

"இக்கூட்டலை யடைந்ததும் நமதுநிலை இப்படிமாறு

மென்று நாம் கனவிலும் நினைத்தோமில்லை. இமை கொட்டுமுன் மக்களின் இன்பதுன்பங்கள் மாறுகின்றன. ஆம், உலகத்தில் மக்களின் வாழ்க்கை வெகு விநோதமானது. தாழ்ந்தோர் உயர்வதும், உயர்ந்தோர் தாழ்வதும் இயல்பேயன்றோ? 'ஆறிடுமேடு மடுவும் போலாஞ்செல்வம்' என்பதற்கென்ன தடை; செல்வமும் செல்கின்றது; தரித்திரமும் ஒருவனிடத்திலேயே தரித்திருப்பதில்லை. கல்வி கற்றவர்களுக்கு எந்நாடும் தந்நாடே என்பதும் உண்மையே. 'மன்னனிற் கற்றோன் சிறப்புடையன்' என்பதும் மெய்யே. அது பற்றியன்றோ நாம் மேன்மேலும் கற்கவேண்டுமென்று இங்கு வந்தோம். நாம் எண்ணியபடி நமக்குப் பல அருமையான விஷயங்களை உரைப்பார் இங்கு ஒருவரையும் காணோம். ஆயினுமென்? இதுகாறும் நாமே முயன்று பல விஷயங்களை அறிந்ததேபோல் இனியும் செய்வோம்'' எனப் பலவாறு தம்முள் எண்ணினார் புகழேந்தியார்.

## நான்காம் அத்தியாயம்

### குமார குலோத்துங்கன்

மூன்றாம் அத்தியாயத்தில் கூறப்பட்ட சம்பவம் நடந்த காலத்தில்,

தண்ணீரும் காவிரியே தார்வேந்தன் சோழனே
மண்ணாவதும் சோழ மண்டலமே''

என்றும், "சோழவளநாடு சோறுடைத்து'' என்றும் ஆன்றோரால் புகழ்ந்து கூறப்பட்ட பெருமையையுடைய சோழ நாட்டின் அரசனாகிய விக்கிரமசோழன் என்பான் திரிசிராப் பள்ளிக்குச் சமீபத்தில் இருக்கும் உறையூரைத் தனக்கு இராஜதானியாகக் கொண்டு சோழ இராச்சியத்தை ஆண்டு வந்தான். அவ்வரசன் அறநெறி தவறாது தன் இராச்சியத்தை ஆண்டு வந்ததோடு, தன்னாலாவது, தன்னைச் சார்ந்தவர்

களாலாவது, தன் பகைவர்களாலாவது, கள்வர்களாலாவது புலி முதலிய துஷ்ட மிருகங்களாலாவது தன் குடிகளுக்குத் துன்பம் நேரிடாவண்ணம் தன்னுயிரே போல் பாதுகாத்து வந்தான். அதனால் அவனைக் குடிகள் வாயாரா வாழ்த்தினர்.

அந்த அரசனுக்குக் குமார குலோத்துங்கன் என்ற பெயரினையுடைய பிள்ளை ஒருவன் இருந்தான். அவனுக்கு அவ்வரசன் தன் சமஸ்தான வித்துவானாயிருந்த ஒட்டக்கூத்தர் என்னும் பெயரினையுடைய பெரும் புலவரைக்கொண்டு கல்வி கற்பித்து வந்தான். குமார குலோத்துங்கன் தன் ஆசிரியராய ஒட்டக்கூத்தரிடம் விதிப்படி கல்வி கற்று, அதில் வளர்பிறைபோல் விருத்தியடைந்து, அழகிலும் ஆண்மையிலும் சிறந்து அரசுரிமை வகிக்கத் தகுந்த பருவத்தை அடைந்தான்.

குமார குலோத்துங்கன் அரசுரிமை வகிக்கத் தகுந்த வயதையடைந்தபோது, அவன் தந்தை கூன் வளைந்த கிழவனாகி, உரோமம் வெளுத்துக் காலன் வரும் நேரம் 'இப்பகலோ? பின்னையோ? சற்றுநேரத்திலோ? இராவிதான்படு நேரமோ?' என்று கணக்கிட வேண்டிய நிலையில் இருந்தான். அதனால் அவன் தன் மைந்தன் குமாரகுலோத்துங்கனுக்குத் தன்னரசுரிமையைக் கொடுத்துப் பட்டாபிஷேகம் செய்து வைக்க முடிவு செய்துகொண்டான்.

அதனால் அவன் ஒரு தினம் தன் சபையில் உள்ளவர்களை நோக்கிப் "பெரியீர்! நான் என்மகன் குமார குலோத்துங்கனுக்கு என் அரசுரிமையை அளித்துப் பட்டாபிஷேகம் செய்துவைக்க முடிவு செய்திருக்கின்றேன்! உங்கள் கருத்தென்ன?' என்று கேட்டான்.

அவ்வார்த்தையைக் கேட்ட சபையோர் உளம் பூரித்து அரசனைப் பார்த்து, 'அரசே! இந்த விஷயத்திற்கு எங்களைக் கேட்கவும் வேண்டுமோ! தக்க வயதும் சேர்ந்த அறிவும் வாய்ந்த தங்கள் புத்திரனுக்குத் திருமுடி சூட்ட நினைத்தது

எங்கள் மனத்தை ஆனந்தப் படுத்துகின்றது. தங்கள் கருத்து எங்களுக்குச் சம்மதமே' என்று கூறினர்.

உடனே அரசன் தன் அருகிருந்த உத்தம புரோகிதர்களைப் பார்த்து,'பெரியீர்! நம் மைந்தன் குமார குலோத்துங்கனுக்கு முடி சூட்ட ஒரு நன்னாள் பார்த்துக் கூறுங்கள்' என்று கேட்டான்.

அங்கள் தொழிலில் தேர்ந்த அந்தப் புரோகிதர்கள் அரசனாணைப்படி முடி சூட்டுவதற்கு அக்கணமே ஒரு நன்னாளைக் குறித்தார்கள். அந்நாள் இந்நாள் என்பதை அரசன் வள்ளுவர் மூலமாகத் தன் நகரத்தார்க்குப் பறையறைவித்துத் தெரிவித்தான். அது கேட்டுக் குடிகள் அக மகிழ்ந்து சந்தோஷ ஆரவாரம் செய்தார்கள். பட்டாபிஷேகதினத் தன்று குடிகள் தத்தம் வீடுகளை மண வீடுகளைப் போல் வாழை கமுகு முதலியவைகளால் அலங்கரித்தார்கள். வீதிகளில் உள்ள தூசு குடிகள் வாரி இறைத்த சந்தனக் குழம்பால் பூமியிற் படிந்தன. எங்குப் பார்த்தாலும் மங்களகாரமே நிறைந்திருந்தது.

அரசன் அரண்மனையோ அற்புதமாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. நகர் சிங்காரிப்போர் எங்குப் பார்த்தாலும் அற்புதமான காட்சிகளே தோன்றும்படி சிங்காரித்திருந்தனர். குறித்த காலம் குறுகியது. குமார குலோத்துங்கனுக்கு அவன் தந்தையாகிய விக்ரமன் [illegible] புண்ணிய நதிதீர்த்தங்களைக் கொண்டு மங்கள ஸ்நானஞ் செய்வித்து, விலையுயர்ந்த பீதாம்பர முடுத்தி மகரகுண்டல முதலாகிய சர்வாபரணங்களும் பரிமள புஷ்பமாலைகளும் தரித்துச், சிங்காதனத்தில் ஏற்றுவித்து, சந்திரவட்டக் குடை கவிக்க, கவரி வீச, மங்கலச் சங்க முதலிய பற்பல வாத்தியம் முழங்க, அந்தணர் ஆசி கூற, மகா சம்பிரமத்துடனே நவரத்தின மகுடஞ்சூட்டி ராஜ முத்திரை மோதிரத்தை அவன் விரலில் இட்டுச், செங்கோலைக் கையிற் கொடுத்து, அப்போது, சபையில் குழுமியிருந்த அரசர் அமைச்சர் முதலானவர்களுக்கும், "இனி இவனி

ட்ட கட்டளைப்படி அனைவரும் நடத்தல்வேண்டும்'' என்று கட்டளையிட்டான். அவர்களெல்லோரும் பட்டத்தரசனாகிய குமார குலோத்துங்க சோழனுக்குப் பாத காணிக்கை வைத்து உபசரித்தார்கள். வித்வஜனங்கள் பாமாலை தொடுத்துச் சூட்டினார்கள். 'அவர்கள் யாவருக்கும் முன்னே ஒட்டக்கூத்தர் குமாரகுலோத்துங்கனுக்கு க்ஷேமமுண்டாக.

"ஆடுங் கடைமணி நாவசை யாம லகிலமெங்கும்
நீடுங் குடையைத் தரித்த பிரான்..." (15)

இரண்டடி வரையிற் பாடினது அறிந்து, அவ்வரசன் தனக்கு அவர் கல்விகற்பித்த ஆசிரிய ராகையால் தன்னைத் துதிசெய்வது தகாது என்று நினைத்து

"....................இந்த நீணிலத்தில்
பாடும் புலவர் புகழொட்டக் கூத்தன் பதாம்புயத்தைச்
சூடுங் குலோத்துங்க சோழனென் றேயெனைச்
சொல்லுவரே" (16)

என மாற்றிரண்டடிகளையுந் தானே பாடி அப்பாடலைப் பூர்த்திபண்ணிவிட்டு, அந்தணர்களுக்கு அன்னதான முதலிய தானங்களும், மன்னர் மந்திரிமார் முதலானவர்களுக்கு நாடு நகரம் யானை குதிரை முதலிய வரிசைகளும், கவிபாடிய புலவர்களுக்குச் சொர்ணம் வஸ்திரம் பூஷண முதலிய பரிசுகளுந் தன்கையாற் கொடுத்து அவர்களை உபசரித்தான்.

பிறகு அவன் தந்தை அவனை அந்தப் புரத்திற்கு அழைத்துப்போய் அரசு நடத்தவேண்டிய முறைமையைக் குறித்துச் சொல்லவேண்டிய புத்திமதிகளைச் சாஸ்திரீயமாகவும் லோகாசாரமாகவுஞ் சொல்லி, அனந்தரம் தன் சமஸ்தான வித்துவானாகிய ஒட்டக்கூத்தரையும் பக்கத்தில் வைத்துக்கொண்டு புதல்வனைப் பார்த்து, 'அப்பா குலோத்துங்கா! இப்பொழுது உனக்கு மகுடாபிஷேகஞ் செய்து வைத்தது போல விவாகமுஞ் செய்வித்து, அவ்விவாக மகோற்சவத்தைக் கண்களிக்கப் பார்க்கிறதற்கு நான் தவஞ்செய்யாமற் போனேன்! ஆயினும் உனக்கொன்று

சொல்லுகிறேன் கேள்: எனக்குப் பிற்காலம் நீ வேறெந்த வழியிலும் பிரவேசிக்கவேண்டாம். நமது சூரிய குலத்திற்கும், சந்திர குலத்திற்குமே தொன்றுதொட்டுச் சம்பந்தம் நடந்துவருகிறது. அந்த முறையைக் கைவிடாதே. பழங் கால் தூர்த்துப் புதுக்கால் வெட்டவேண்டாம். பாண்டியன் மகளையே மணந்துகொள்' என்று வற்புறுத்தி ஒட்டக்கூத்தரை நோக்கி, 'என் மனோரதத்தை நிறைவேற்றுவது உமது தலைமேல் வீழ்ந்த பாரம்' என்று சொல்லித் தன் மகனை அவர் கையில் ஒப்புவித்துப் பிறகு தன் புத்திரன் தொடைமேல் தலை வைத்துச் சயனித்த வண்ணமாய்ப் பிராண வியோகமானான்.

அதற்குமேல் நடக்கவேண்டிய யாவும் முறைப்படி நடந்தேறின.

# ஐந்தாம் அத்தியாயம்

## மணப்பேச்சு

ஒருநாள் மாலை மணி ஆறிருக்கும். ஆகாயம் நிர்மலமாய் இருந்தது. குளிர்ந்த காற்றுச் சில்லென்று சுகத்திற்கு வேண்டிய அளவு வீசிக்கொண்டிருந்தது. சிவனார் செஞ்சடை விரித்தாற்போல் மேற்றிசையில் செவ்வானமிட்டிருந்தது.

இத்தகைய நேரத்திலே அரசன் குமார குலோத்துங்கனும், புலவர் ஒட்டக்கூத்தரும் அரண்மனையைச் சார்ந்த நந்தவனத்தில் மெல்ல உலாவினவண்ணமாகச் சம்பாஷித்துக் கொண்டிருந்தனர்.

அப்போது, புஷ்பக்கொத்துக்களையுடைய கிளைகளில் பஞ்சவர்ணக்கிளிகள் கொஞ்ச, பூங்கொடிகள் பொற்றொடி மாதர்போல் அசைய, கிளைவிளக்கேற்றினாற்போலச் சண்பகங்கள் பொன்னிறமாகிய அரும்பெடுக்க, குடமல்லிகைகள்

வெள்ளிக்காளாஞ்சி ஏந்துவதுபோலத் தளையவிழ்ந்து மலர, அம்மலர்களிலிருந்து மடைதிறந்தாற்போலக் குபுகுபுவென்று குமிழியிட்டுப் பாயும் இனிய தேனையுண்டு சுருதி கூட்டுவது போல் வண்டுகள் ஒலிசெய்ய, மத்தளமுழங்குவதுபோல அங்குள்ள தடாகத்தின் அலைகள் குமுறிச் சப்திக்க, பாடினிகள்போல் மாங்குயில்கள் கிங்குரலாய்க் கூவ, நடனமாதர்போல அழகிய கலாபத்தை விரித்து மடமயில்கள் ஆட, குளிர்ச்சி பொருந்திய மந்தமாருதமானது கமகமவென்று பரிமளிக்கின்ற மிருதுவான மகரந்தப் பொடிகளை வாரிக் கொண்டு வந்து கதம்ப மிரைப்பது போல் வீசிக்கொண்டிருந்தது.

இவைகளையெல்லாம் கண்ட குமார குலோத்துங்கன் மனம் சற்றே மாறியது. அவன் மன மாறுதலுக்குக் காரணத்தை அறிந்துகொண்ட ஒட்டக்கூத்தர், அரசன் அரண்மனையை யடைந்ததும், தாம் அரண்மனையை யடுத்துள்ள தம் இல்லத்தை யடைந்து ஓராசனத்தில் அமர்ந்து சிந்தித்துக் கொண்டிருந்தனர்.

அப்போது கற்புக்கரசியாராகிய ஒட்டக்கூத்தரின் மனைவியார் அங்குவந்து அவரைப் பார்த்தார். அவர் எதைப் பற்றியோ எண்ணமிட்டுக் கொண்டிருப்பதைக் கண்டு, 'தலைவ, தாங்கள் எதைக்குறித்து இப்படி ஆலோசித்துக் கொண்டிருக்கின்றீர்கள்?' எனக் கேட்டார்.

கருவி கரணங்களோய்ந்த தபசிகளைப்போல் தம்முடைய சிந்தனையில் கருத்தூன்றியிருந்த ஒட்டக்கூத்தருக்கு அவர் மனைவியார் பேசிய வார்த்தை ஒன்றுமே கேட்கவில்லை. அது கண்ட அவர் மனைவி வியப்புற்று அவருக் கருகே நெருங்கி அவரைத் தம் கரங்களால் தொட்டு, 'தங்களுடைய ஆழ்ந்த ஆலோசனைக்குக் காரணமாயிருப்பதென்ன?' எனக் கேட்டார்.

அப்போது நித்திரையிலிருந்து விழிப்பவரைப்போல ஒட்டக்கூத்தர் திடுக்கிட்டுத் தமது ஆலோசனையை விட்டு

அருகே நிற்கும் தமது மனைவியைப் பார்த்து, 'ஓ! நீ தானா வந்தவள்; என்ன கேட்டாய்?' என்று வினவினார்.

அதற்கு அவர் மனைவி அவரைப் பார்த்துத் 'தாங்கள் இவ்வளவு ஆழ்ந்த சிந்தனையில் இருக்கின்றீர்களே, அதற்குக் காரணம் என்னவென்று கேட்டேன்? வேறொன்றுமில்லை' என்றார்.

ஒட்டக்கூத்தர்—என்னுடைய சிந்தனைக்குக் காரணமா?

அவர் மனைவி—ஆம்.

ஒட்டக்கூத்தர்—அதற்குக் காரணம் நமது அரசன் குமார குலோத்துங்கனே!

அவர் மனைவி—என்ன! என்ன! குமார குலோத்துங்கனா! அவன் உங்களுடைய மாணவனல்லவா! நீங்கள் அவனை உங்களுடைய புத்திரனைப்போலவன்றோ பாதுகாத்து வருகின்றீர்கள்? அவன் உங்களுக்குக் கவலை உண்டாகும்படி ஒரு தீங்கும் செய்யமாட்டானே.

ஒட்டக்கூத்தர்—தீங்கா! குமார குலோத்துங்கனா தீங்கு செய்வான்? அப்படி யொன்றுமில்லை.

அவர் மனைவி—அப்படியானால் உங்கள் கவலைக்குக் குமார குலோத்துங்கன் காரணமாய் இருப்ப தெப்படி?

ஒட்டக்கூத்தர்—சற்றே ஆலோசித்தால் நான் சொல்லாமலே உனக்கு விளங்கக்கூடும்.

இவ்வாறு ஒட்டக்கூத்தர் கூறியவுடன் அவர் மனைவி புன்சிரிப்புடன் தம் கணவர் கூறியபடி சற்றே ஆலோசித்துப் பார்த்தார். அவரும் அறிவுத்திசாலியாகையால், "குமார குலோத்துங்கனுக்குக் கலியாணம் செய்துவைக்கவேண்டு மென்பதே தம் கணவர் ஆலோசனைக்குக் காரணமாய் இருக்கக்கூடும்" என்றறிந்து அக்கருத்தைத் தம் கணவருக்கு அறிவித்தார்.

அவர் தாமே உய்த்துணர்ந்து கூறியவற்றை உண்மை என்ன ஒட்டக்கூத்தர் ஒப்புக்கொண்டு 'அதுவே என் கவலைக்குக் காரணம்' என்று கூறிப் பின்னும் அவர் தம் மனைவியாரைப் பார்த்து, 'பெண்ணே! இன்று மாலை நானும், குமார குலோத்துங்கனும் அரண்மனையைச் சார்ந்த பொழிலிலே இன்னுரையாடிய வண்ணம் உலவிக்கொண்டிருந்தோம். அப்போது அப்பொழிலில் கண்டோர் 'இது கற்பகவனமோ' என்ன அதிசயிக்கும்படியான காட்சிகளை உடையதாய் இருந்தது. அக்காட்சிகளைக் கண்ட குமார குலோத்துங்கன், எந்நாளும் இல்லாதபடி இன்று என்னோடு பேசுவது இன்னதென்பதையும் மறந்து மனந் தடுமாறி நானின்று கேட்க வேண்டுமென்று கூறிவந்தான். அத்தகைய அவன் மனத் தடுமாற்றத்திற்குக் காரணம் யாதென நினைக்கின்றாய்?' என்றார்.

அதற்கு அவர் மனைவியார் அவரைப் பார்த்து, 'அது தெரியாதா எனக்கு! அவன் மனம் மணத்தை நாடி நிற்கின்றது; அதுவே அவன் மனத்தடுமாற்றத்திற்குக் காரணம் என்று எனக்குத் தோன்றுகிறது' என்று சொன்னார்.

**ஒட்டக்கூத்தர்:**—நீ கூறியது உண்மையே! அதைப் பற்றித்தான் நான் சிந்தித்துக்கொண்டிருக்கின்றேன். அவனுக்கு ஏற்ற இடம் பார்த்தல்லவோ மணம் முடித்தல் வேண்டும்?

**அவர் மனைவி:**—ஏற்ற இடம் இனியா பார்த்தல் வேண்டும்? 'மதுரையில் உள்ள பாண்டிய அரசனாகிய வரகுணன் என்னும் பெயருடையானுக்குக் கல்வி யறிவு முதலியன நிரம்பிய அழகுவாய்ந்த பெண்ணொருத்தி யிருக்கின்றாள்' என்று தாங்கள் முன்னர் ஒருதடவை என்னிடம் சொல்லியிருக்கின்றீர்களே. அந்தப் பெண்ணையே மணம் பேசி நமது குமார குலோத்துங்கனுக்கு மணம் முடிப்பதில் தடையென்ன? குமார குலோத்துங்கனின் தந்தையார் தாம் இறக்கும்போது பாண்டிய அரசர்களோடு சம்பந்தம் செய்து கொள்ளும்படியாகக் குமார குலோத்துங்கனிடம்

கூறியபடியாகத் தாங்கள் என்னிடம் சொன்னீர்களே. இறந்தவர்களின் நற்கருத்துப்படி நடப்பதுதான் குலந்தழைக்கும் வழியாகுமென்பது தாங்கள் அறியாததன்றே? அன்றியும், இப்போது அப்பாண்டியனைத் தவிர நமது குமார குலோத்துங்கனுக்குச் சமானமான அரசர் வேறு எவரிருக்கின்றனர்? நீங்கள் வேறு ஆலோசியாமல் பாண்டியன் மகளையே மணம் பேசி நமது குலோத்துங்கனுக்கு மணம் முடித்துவையுங்கள்.

இவ்வாறு தமது மனைவி கூறிய வார்த்தையைக் கேட்ட ஒட்டக்கூத்தர் மனமகிழ்ந்து 'ஆம், அப்பாண்டியன் மகளையே மணம் பேசிக் குமார குலோத்துங்கனுக்குக் கலியாணம் செய்து வைக்கின்றேன்' என்று சொன்னார்.

## ஆறும் அத்தியாயம்

### மணம் பேச மதுரைக்குச் செல்லல்

**ஒட்டக்கூத்தர்** மதுரைக்குச் சென்று வரகுணனிடம் மணம் பேசவேண்டுமென்று முடிவு செய்துகொண்ட மறுநாட்காலை, தமது கருத்தைக் குலோத்துங்கனிடம் சொல்லாமற் சொல்லி, "நாள் செய்வது நல்லோர் செய்யார்" என்பதனால் தாம் நோக்கிப்போகும் திசைக்குச் சூலம் யோகினி முதலிய தோஷமில்லாததான ஒரு நன்னாட் குறித்து, அந்நாளில் நினைத்துப் போகும் காரியம் அனுகூலிப்பதற்கு முற்குறியாக நல்ல சகுனமாகும்படி அனுக்கிரகஞ்செய்யவேண்டுமென்று தமது இஷ்டதெய்வத்தைப் பிரார்த்தித்து, சோழநாட்டிலிருந்து பாண்டிய தேசத்திற்குப் பிரயாணமாக முதல் அடியெடுத்து வைத்தார். வைத்தவுடனே வாயசம் வலமாயிற்று. அவர் 'வாயசம் வலமானால் ஆயுசு விர்த்தியாகும்' என்றெண்ணி, அப்புறம் நடக்கையில் வலியன் இடமாயிற்று. அதைப் பார்த்து,

"வால்நீண்ட கரிக்குருவி வலமிருந்தே யிடஞ்சென்றால்
கால்நடையாய்ப் போனவர்கள் கனகதண்டி யேறுவரே"

என்பதை நினைத்து உத்தமமதான என்று அதற்கப்பாற் சிறிது தூரஞ் சென்றார். அங்கே காடை கட்டிற்று. அதைக் கண்டு "காடைகட்டினாற் பாடைகட்டும்" என்பதை யோசித்துப் பிரமைகொண்டிருக்கையில், கட்டுக்காடை இடமாயிற்று. அது நோக்கி 'கட்டுக்காடை யிடமானாற் குட்டிச்சுவரும் பொன்னாகு மல்லவா?' என்று மகிழ்ச்சி கூர்ந்து பத்தடி நடந்தார். அப்பொழுது செம்போத்து வலமாயிற்று. அவர் செம்போத்து வலமானாற் சம்பத்து உண்டாகும்" என்று மனம்பூரித்து அதைக் கடந்துப் போகையில், கருடன் கட்டியது. அதைக் கண்டு 'இதென்ன என்று சற்றுநேரம் அவ்விடத்திலேயே திகைப்பூண்டு மிதித்தவர் போலத் திகைத்து நின்று, 'கட்டோடே போனாற் கனத்தோடே வரலாம்" என்பது ஞாபகத்திற்கு வந்தமையால், மனத்தைத் தைரியப்படுத்திக்கொண்டு கொஞ்சதூரம் போகையில், முன்பு கட்டின கருடன் இடமாயிற்று. அவர் 'கட்டி இடமானால் வெட்டி யரசாளலாம்' என்றும், 'வெள்ளைக் கருடன் சென்றிடமானால் எவர் கையிற் பொருளுந் தன்கையிற் சேரும்' என்றும் பெரியோர்கள் சொல்லுகிறார்களே, அதனாற் குறைவு வராதென்று கருதி விரைந்து செல்லுகையில், விச்சுளி வலமாயிற்று. அதைப்பற்றி 'விச்சுளி வலமானால் நிச்சயம் வாழ்வுண்டாம்' என்று நினைத்துப் 'பிரதமத்தில் நாம் பார்த்திருந்த வண்ணம் வலியன் விச்சுளி செம்போத்து மூன்றும் வலமாகவும், கருடன் கட்டுக்காடை இரண்டும் இடமாகவும் செல்லக்காணும்படி நமக்கு இந்தப் பஞ்ச சகுனமும் ஆனமையால், நினைத்த காரியம் இனித் தடையின்றி முடியுமென்பதற்கு யாதொரு சந்தேகமுமில்லை' என்று இடைவழியிலுள்ள காடு, மலை, நாடு, நகர், ஆறு, குளம், ஏரி, மடுவெல்லாங்கடந்து, குடை, கொடி, யானை, சேனைகளுடனே நான்மாடக் கூடலென்னும் மதுரைக்குச் சமீபமாய்ப் போகும்

பொழுது, பாண்டியன், யாரோ பகையரசன் மதுரைமேற் படையெடுத்து வருகிறான் என்று தக்ஷணம் போர்க்கோலங் கொண்டுபோய் எதிர்த்து நிர்மூலமாக்கும்படி தனது சதுரங்க பலமும் பிரயாண சந்நத்தமாகப் பேரிகை அறைவித்தான். அந்த அடியிலே வில், கட்கம், சூலம், பாசம், முசலம், சக்கரம், தோமர முதலிய ஆயுதபாணிகளாய், முடிகளோடு முடிகள், கழல்களோடு கழல்கள் நெருங்க, தேர்கள் யானைகள் குதிரைகள் மேலும், பாதசாரிகளாயும், நால்வகைப் படைவீரரும் பெரு வெள்ளம்போல எங்கெங்கும் வந்து நிறைந்து, எக்காளம், பேய்க்காளம், காம்பு, பம்பை, தவுண்டை, துந்துபி முதலிய வாத்திய முழங்க யுத்தத்திற்கு ஆரம்பித்தார்கள். அதற்குள்ளே வேவுகாரர் போய் விசாரித்துப் போர்க்குரிய சின்னங்கள் இல்லாமை கண்டு, ஒட்டக்கூத்தர் வருகிறார் என்று தெரிந்து வந்து செய்தி அறிவிக்க, அரசன் சந்தோஷப்பட்டு மந்திரியை அனுப்பி அழைத்து வந்து அவருக்கு விடுதிவிட்டுப் போஜன தாம்பூலாதிகளால் கிருதகிருத்தியமாய் நடப்பிக்கச் சொன்னான்.

## ஏழாம் அத்தியாயம்

### பாண்டியனைக் காணுதல்

ஒட்டக்கூத்தர் மதுரைக்கு வந்த பிறகு ஒரு நாள் சமயமறிந்து சென்று அரசனாகிய வரகுண பாண்டியனைக் கண்டார். அப்போது அவ்வரசன் பக்கலில் நமது புலவர் சிகாமணியாகிய புகழேந்தியாரும் இருந்தனர்.

ஒட்டக்கூத்தரைக் கண்டவுடன் புகழேந்தியாரும் அரசனும் முகமலர்ந்து அவரை மரியாதையுடன் வரவேற்று ஓராசனத்தில் உட்காரச் செய்து உபசரித்தனர். பிறகு மூவரும் உலகாயதமாகப் பல விஷயங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தனர். ஒட்டக்கூத்தர் பேசியமாதிரியிலிருந்து

அவர் மிகவும் தற்பெருமை உடையவர் என்பது புகழேந்தி யாருக்கு நன்றாக விளங்கியது.

மூவரும் ஒருவரோடொருவர் நெடுநேரம் பேசிக்கொண்டிருந்தனர். கடைசியாக ஏதோ முக்கியமான விஷயத்தைப் பற்றித் தாம் பேச விரும்புகிறவரைப்போல் ஒட்டக்கூத்தர் வரகுணனை நோக்கினர்.

அவர் நோக்கத்தின் கருத்தை அறிந்துகொண்ட அரசன் அவரைப் பார்த்து, 'தாங்கள் யாது கூற விரும்புகிறீர் கள்?'' என்று கேட்டான.

அப்போது ஒட்டக்கூத்தர் புகழேந்தியாரைப பாாத்து, அரசனையும் பார்த்தார்.

ஒட்டக்கூத்தர் புகழேந்தியாரைப் பார்த்துத் தன்னையும் பார்த்ததின் கருத்தை அறிந்துகொண்ட வரகுணன் ஒட்டக் கூத்தரைப் பார்த்து, 'உங்கள் கருத்தை நான் அறிந்து கொண்டேன். என்னேடு தாங்கள் எதைவேண்டுமாஞலும் பேசலாம். புகழேந்தியாருக்கும் அது சம்மதமாகவே யிருக்கும்' என்று கூறினன்.

அதைக் கேட்ட ஒட்டக்கூத்தர் அவனைப் பார்த்து, 'அரசர் ஏறே! தங்கள் குலத்துதித்த நமது திருமகளை எமது அரசர் குமார குலோத்துங்கருக்கு மணம் பேசிப்போக வந்தோம். அவருடைய தந்தையோ தாம் இறக்கும்போது அவரிடம் 'பாண்டியதேசத்தரசனைத் தவிர்த்து வேறு அரசரிடம் சம்பந் தம் செய்து கொள்ளக்கூடாது. பாண்டிய வம்சத்தாரே சிறந்தவர்கள்' என்று கூறினர். எமது அரசராகிய குலோத் துங்கர் உயர்குணமும்,பெரியார் வாக்கைக் கடந்து நடவாத தன்மையும் உடையாராதலாலே அவர் "தந்தை சொல் மிக்க மந்திரமில்லை" என்று எண்ணித் தங்கள் திருமகளையே மணம் செய்துகொள்ள விரும்புகிறர். தாங்கள் சம்மதிப்பீர்களென் றும் நான் நம்புகிறேன். தாங்கள் சம்மதிக்காவிடில் எமது அரசர் விவாகமின்றியே யிருந்துவிடுவார் என்பது திண்ணம்' என்று தமது கருத்தை ஒருவாறு கூறி முடித்தார்.

லௌகீக விஷயங்களில் நன்கு தேர்ச்சிபெற்ற பாண்டியன் ஒட்டக்கூத்தர் பேசிய வார்த்தைகளைக் கேட்டு மனத்திற்குள் சந்தோஷித்தான். ஏன்? சோழவம்சத்தரசர்கள் எவ்வகையிலும் சிறந்தவர்கள் என்பதும், அவ்வம்சத்தில் தோன்றியுள்ள குமார குலோத்துங்க னென்பான் எல்லா நற்குணங்களும் பொருந்திய வீரனென்பதும் அவனுக்குத் தெரியும். அதனால் அவன் ஒட்டக்கூத்தர் கூறியபடியே குமார குலோத்துங்கன் தன் மகளைக் கலியாணம் செய்துகொள்ள எவ்வகையிலும் தகுதியுடையவன்தான் என்று தீர்மானித்துக் கொண்டான். ஆயினும் அவன் அக்கருத்தைப் பகிரங்கமாக வெளியிடாமல், ஒட்டக்கூத்தரை நோக்கி, 'ஓ! புலவர் பெருமானே! தாங்கள் கூறிய வார்த்தைகளைக் கேட்டு நான் சந்தோஷமெய்தினேன். நம்பெண்ணைக் கலியாணம் செய்துகொள்ளக் கூடியவன் எவ்வகையிலும் நமக்குச் சமானமானவன்தானா எனக் கவனிப்பது உலக வழக்காயிருக்கின்றது. ஆகையால் என் மகளை மணம் செய்துகொள்ள உமது அரசர் எவ்வகையில் தகுதியுடையவர் என்பதை நானும் அறிய விரும்புகின்றேன். என்னைவிட உமது அரசருக்குள்ள ஏற்றம் என்ன? ஏதேனும் இருப்பின், அதை யாம் அறியக் கூறும்.' என்று வேடிக்கையாகக் கேட்டான்.

அவன் கருத்தை உள்ளபடி அறிந்துகொள்ளாமலோ என்னவோ, ஒட்டக்கூத்தர் தம் அரசனாகிய குமார குலோத்துங்கனுடைய பெருமை பாண்டியனுடைய பெருமையைப் பார்க்கிலும் உயர்வுடையதென்று அப் பெருமையைப் பாண்டியன் வெட்குப்படி கூறித் தம் அரசன் சிறந்தான் எனப் பாண்டியன் உணருமாறு அவனுக்கு அறிவுறுத்த நினைத்தார்.

உடனே அவர் பாண்டியனைப் பார்த்து, "சோழராஜாக்கள் ஏறும் மல்லகதி முதலிய ஐங்கதிகளையுடைய **கோரம்** என்னும் பெயர்பெற்ற பஞ்சகல்யாணியாகிய பட்டவர்த்தனப் புரவிக்குப் பாண்டியர் ஏறும் கனவட்டமென்னும் அசுவம் சமானமாமோ? மாரிகாலத்திலன்றிக் கோடைகாலத்திலும் கடல்போல எங்கும் பரவிப்பாய்ந்து பொன்கொழி

ந்து அலைமெறிகின்ற சோழநாட்டிலுள்ள அகண்ட காவிரியாற்றுக்கு மதுரையில் உள்ள வைகையாற்றையோ நிகராகச் சொல்லுவது? சிவனது திருவுளத்துக்கு உவப்பாகச் சோழர்கள் அணியும் ஆத்திமாலைக்குப் பாண்டியர்கள் அணியும் வேப்பமாலை நிகராகுமோ? உலகத்தைச் சூழ்ந்து கவிந்து சகலான்மாக்களுடைய கட்புலனையும் மறைக்கின்ற அந்தகாரத்தைப் போக்கும் சூரியனுக்கு அச்சூரியன்முன் ஒளிமழுங்கிப் போகின்ற சந்திரன் ஒப்பாகுமா? அதுபோல மகாபிரசித்தமான சோழர்களுடைய சூரிய குலத்திற்குப் பாண்டியர்களுடைய சந்திரகுலம் ஒப்பாகுமா? நிகரற்ற வீரமுடையவர்களுக்குள் அதிவீரனானவன் சோழனோ? பாண்டியனோ? வெற்றி பெற்ற சோழனுடைய புலிக்கொடிக்குப் பாண்டியனுடைய மீனக்கொடியோ இணையாவது? பொன்மாரி பெய்த மகிமை தங்கிய உறையூருக்குக் கொற்கைப் பதியோ உவமையாவது? பதின்மர் பாடப்பெற்ற திருவரங்கமுதலாகிய பற்பல விஷ்ணுஸ்தலங்களையும், சம்புகேசுவர முதலிய அநேக சிவஸ்தலங்களையும் தன்னகத்திற்கொண்டு, எக்காலத்தும் க்ஷாமமென்பது அணுக இடங்கொடாமற் சீவாதாரமாகிய நெல் முதலிய விளைவு குன்றாத வளப்பமிருந்த சோழநாட்டுக்குப் பாண்டிய நாடு சரியாகுமோ?" என்னும் பொருளை உள்ளமைத்து, அவ்வழியாற் சோழனுடைய பெருமை தோன்றும்படி,

"கோரத்துக் கோப்போ கலைவட்ட மம்மானே
கூறுவதுங் காவிரிக்கு வையையோ வம்மானே
ஆருக்கு வேம்புநிக ராகுமோ வம்மானே
யாதித்த னுக்குநிக ரம்புலியோ வம்மானே
வீரர்க்குள் வீரனொரு மீனவனோ வம்மானே
வெற்றிப் புலிக்கொடிக்கு மீனமோ வம்மானே
ஊருக் குறந்தைநிகர் * கொற்கையோ வம்மானே
ஒக்குமோ சோணாட்டைப் பாண்டிநா டம்மானே?" (18)

என்றொரு பாடலைக் கூறினார்.

---

* "கொற்கையோ" என்னும் இப்பதத்தினால் இக்கதை நடந்த விடம் கொற்கைப்பதி என்பது தோன்றுகிறது.

தம்முடையநாட்டைப்பற்றியும், தமது அரசனைப் பற்றியும் ஒட்டக்கூத்தர் இவ்வளவு பெருமையாகக்கூறியதைக் கேட்ட அரசனாகிய பாண்டியன் ஒட்டக்கூத்தருடைய தேசாபிமானத்திற்கும், அரச பக்திக்கும் மெச்சி மனத்துள் மகிழ்ந்தான். ஆயினும், ஒட்டக்கூத்தர் தமது அரசனைப் பற்றியும், தமது நாட்டைப்பற்றியும் பெருமையாகக் கூறியதைப் போலவே தன் நாட்டைப்பற்றியும், தன் வமிசத்தின் பெருமையைப்பற்றியும் அவருக்கு அறிவித்தல் அவசியம் எனக் கருதி அவன் தன்பக்கலில் வீற்றிருந்த புகழேந்தியாரைப் பார்த்தான்.

அவன் பார்வையின் குறிப்பை அறிந்துகொண்ட புகழேந்தியார் அரசன் இஷ்டப்படி நடக்கவேண்டியது அவசியமெனக் கருதினார். ஆனால் அரசன் விருப்பத்தைத் தாம் நிறைவேற்றினால், அது ஒட்டக்கூத்தருக்கு மனவருத்தத்தை உண்டாக்குமோ வென்றும் எண்ணினார். அரசன் இஷ்டத்தைப் பூர்த்தி செய்தால், ஒட்டக்கூத்தருக்குக் கஷ்டம் உண்டாகும்: ஒட்டக்கூத்தருக்கு வருத்தமுண்டாகுமே என்றிருந்துவிட்டால் அரசன் வெறுப்படைவான். இவற்றிற்கு என்ன செய்வதென்று நம் புகழேந்தியார் இருதலைக் கொள்ளி எறும்புபோல் எண்ணமிடுவாராயினர். முடிவாகப் பாண்டியனுடைய உப்பைத்தின்று அவன் விருப்பத்தை நிறைவேற்றாதிருப்பது அடாது எனத் தீர்மானித்து, அவர் ஒட்டக்கூத்தரைப் பார்த்து, 'ஐயா, உலகத்தில் தங்கள் பெருமையைப் பிறர் கேட்ட காலத்தும் தங்களைப்போல் இவ்வளவு அதிகமாக வியந்து சொல்லக்கூடியவர்கள் அதிகமாயிரார் என்பது என் துணிபு. தங்கள் பெருமையைக் கூறிக்கொள்ள விருப்பமுடையவர்கள், அவ்விருப்பத்தைமட்டும் நிறைவேற்றிக் கொள்ள வெண்டுமே யன்றி மற்றவர்கள் பெருமைக்குக் குறைவுண்டாமாறு செய்ய நினைத்து, அதற்குத் தகுந்தபடி பேசுதல் அடாது. பாண்டிய குலத்து மன்னராகிய இவ்வரசர் தங்கள் அரசருடைய பெருமையைக் கேட்டால், தாங்கள் தங்கள் அரசருடைய பெருமையையும் அவர் நாட்டினுடைய பெருமையையும்பற்றிக் கூறிப் போகவேண்டுமே யன்றிப்

பாண்டிய நாட்டையும், அந்நாட்டு அரசர்களின் பிரதாபங்
களையும் இழித்துக் கூறவேண்டிய காரண மென்ன? நீர்
உமது அரசரைப் பெருமையாகவும், எமது அரசரைச் சிறு
மையாகவும் கூறியமைக்குப் பதிலாக நாம் கூறுவதைக்
கேளும்: "முனிக்கரசராகிய அகஸ்தியமாமுனிவர் நீரும்
நானும் விரும்பிக் கற்றுவரும் தமிழ்ப்பாஷையைப் பிரவசனஞ்
செய்தது பாண்டிய நாட்டிலுள்ள பொதிகைமலையிலிருந்தோ;
சோழநாட்டிலுள்ள நேரிமலையிலிருந்தோ? பாண்டிய
நாட்டிலுள்ள பொதிகைமலையில் இருந்து தானே. முக்கண்
மூர்த்தியாகிய சோமசுந்தரக் கடவுள் ஒப்புவமையில்லாத
அற்புதம் வாய்ந்த அறுபத்து மூன்று திருவிளையாடல்களைச்
செய்தருளியது மதுரையிலோ, உங்கள் உறையூரிலோ?
மதுரையில் தானே! குளிர்ச்சி பொருந்திய தாமரைமலரில்
வாசஞ்செய்யும் ஸ்ரீ மகாலட்சுமி சமேதராகிய ஸ்ரீ விஷ்ணு
பகவான் மீனாக அவதாரம் செய்தாரேயன்றிப் புலியாக அவ
தாரம் செய்தாரென்று எங்கேனும் நீர் கேட்டதுண்டா?
ஆதலால், எங்கள் பாண்டியநாட்டரசருடைய மீனக்கொடி
தானே சிறப்புடையதாகும்? உங்கள் அரசருடைய புலிக்
கொடிக்கு என்ன சிறப்பிருக்கின்றது? தேவர்கள் முனிவர்
கள் முதலாயினோருடைய சென்னிமேலேறும் பொன்னடி
யையுடைய சிவபெருமான் தம் திருமுடிமேல் கொண்டிருப்
பது சந்திரனையோ, சூரியனையோ? சந்திரனைத்தானே!
அப்படியானால் உமது அரசரின் சூரியகுலம் உயர்வோ,
எமது அரசருடைய சந்திரகுலம் உயர்வோ? சந்திரகுலந்
தானே? சைவசமயத்தை நிலைநாட்டும் பொருட்டுப் பாலரு
வாயராகிய திருஞானசம்பந்த சுவாமிகள் பதிகமெழுதியிட்ட
ஏடானது எதிரேறிக்கரை சேர்ந்தது உங்கள் நாட்டிலுள்ள
காவிரி நதியிலோ, வைகை நதியிற்றானே? அக்காரணம்பற்
றிச் சிறப்புடையது வைகைநதிதானே? பேய்கண்டு அஞ்சி
ஓடும்படி செய்யவல்லது உங்கள் அரசருடைய ஆத்தி
மாலையோ; எங்கள் அரசர் அணியும் வேப்பமாலையோ;
வேப்பமாலைதானே? மதுரையை அழிக்கப் பொங்கிவந்த
சமுத்திரமானது அஞ்சிவந்து பணிந்தது சோழனுடைய

காலையோ? பாண்டியனுடைய காலையோ? பாண்டியனுடைய காலைத்தானே? இவைகளினாலும் உமது அரசரைப் பார்க்கினும் எமது அரசரே ஏற்றமுடையவர் என்பது விளங்கவில்லையோ?" என்னும் இத்தகைய கருத்தை உள்ளடக்கி,

"ஒருமுனிவ னேரியிலோ வுரைதெளித்த தம்மானே
ஒப்பரிய திருவிளையாட் டுறைந்தையிலோ வம்மானே
திருநெடுமா லவதாரஞ் சிறுபுலியோ வம்மானே
சிவன்முடியி லேறுவதுஞ் செங்கதிரோ வம்மானே
கரையெதிரல் காவிரியோ வையையோ வம்மானே
கடிப்பகைக்குத் தாதகியங் கண்ணியோ வம்மானே
பாவைபணிந் தருந்தோழன் பதந்தனையோ வம்மானே
பாண்டியனார் பராக்கிரமம் பகர்வரிதே யம்மானே" (19)

என்று கூறி ஒட்டக்கூத்தர் வார்த்தையைக் கண்டித்தார்.*

புகழேந்தியார் இவ்வளவு தூரம் தமக்குச் சமதையாகப் பாடவல்லர் என்பதை அறியாத ஒட்டக்கூத்தர் அவர் பாடியதைக் கேட்டவுடன், சூரியனைக் கண்ட பனிபோல் தம் உற்சாகம் குறைய, என்ன செய்வதென அறியாது ஏங்கினார். அவர் ஏக்கத்தை அவர் முகக்குறிப்பினால் அறிந்துகொண்ட புகழேந்தியார், "ஐயோ, நாம் ஏன் இப்புலவர் மனம் வருந்தப்

---

* ஒட்டக்கூத்தர் குலோத்துங்கனை வியந்து,

"வென்றி வளவன் விறல்வேந்தர் தம்பிரான்
என்று முதுகிற் கிடான்கவசம்—துன்று" (20)

என்றுகூறி மற்றப் பகுதியையும் பாடி முடிக்குமுன் புகழேந்தியார்,

"வெறியார் தொடைகமழு மீனவர்கோன் கைவேல்
எறியான் புறங்கொடுக்கி னென்று" (21)

என்று பாண்டியனை வியந்து பாடிமுடித்ததாகவும் கூறுவர்.

இனி, சோழனுடைய சபையில் சோழனைப்புகழ்ந்து கூத்தர் முதல் இரண்டடியையுக் கூறியதாகவும், மற்ற இரண்டடியையுப் பாண்டியனைப் புகழ்ந்து புகழேந்தியார் கூறியதாகவும் கூறுவாருமுளர்.

பாடினும்?" என்றெண்ணினர். ஆனால் ஒட்டக்கூத்தரோ புகழேந்தியாரை ஒருமுறை கடைக்கண்ணால் பார்த்துவிட்டு, "இவன் நமக்குச் சனியனாக இங்கு முளைத்தான்போலும்! நாம் கூறியவைகளுக்கெல்லாம் ஆப்புக்கடாவியதுபோல் பதில் கூறிவிட்டானே, இதற்கென்னசெய்வது? இதனால் தான் நாம் வரும்போது, காடையும், கருடனும் கட்டினவோ? இருக்கட்டும். சமயத்தில் மனம் தளர்வடைதல் கூடாது. 'முயற்சி திருவினை யாக்கும்' என்றபடி நாம் நாடி வந்த காரியத்தை முடிக்காமல் திரும்புவதில்லை" என்று தம்முள் தீர்மானித்தார்.

பிறகு அவர் தமக்குப் புகழேந்தியார்மேல் ஏற்பட்ட வருத்தத்தை ஒரு சிறிதும் வெளிக்குக் காட்டிக்கொள்ளாமல் அவரையும் பாண்டியனையும் பொதுநோக்காகப் பார்த்துவிட்டுப் பிறகு பாண்டியனை நோக்கி, "தாங்கள் 'சோழனுடைய உயர்வென்ன?' என்று கேட்டதற்கு விளையாட்டாகத் தங்களுடைய பெருமையைக் காட்டினும் சோழ அரசர் பெருமையுடையார் என்று நான் கூறினேனேயன்றி உண்மை அதுவன்று. தமிழை வளர்த்தவர்களும் வளர்க்கின்றவர்களும் பாண்டியர்களல்லரோ? அன்றியும் தன்மனைவியைக் கொன்றதாகப் பிராமணன் ஒருவன் வேடனைக் கொண்டுவர, அப்போதிருந்த உங்கள் முன்னோர்களில் ஒருவர் உண்மையை அறியாது மயங்கியபோது, கொன்றவன் வேடனல்லன் என்னும் உண்மையை அவருக்கு விளக்கிக் காட்டியவராகிய சோமசுந்தரப் பெருமானின் திருக்கோயிலைத் தன்னிடத்தே கொண்டிருப்பது இம் மதுரையம்பதியல்லவா? உண்மையை அறியாது வணிகனான கோவலனுடைய உயிரை வாங்கும்படி கூறி, வணிகன் கொல்லப்பட்ட பின்னர் உண்மை அறிந்து, தாம் செய்த தவறுக்காகத் தம் உயிரை விட்ட உத்தமராகிய நெடுஞ்செழியன் என்னும் அரசர் ஆண்டுவந்த இடம் இம்மதுரையல்லவா? நம் புகழேந்தியார் கூறியபடி சைவ சமயம் நிலைபெற்று உய்யும்படி திருஞானசம்பந்த சுவாமிகள் திருவடி எடுத்துவைத்த திருப்பதி இதுவன்றோ? இன்னும் இது போன்ற பல பெருமைகளை உடையது இப்-

பாண்டி நாடு என்பதை எவரே அறியார்? ஆகையால், நான் எனது அரசர் பெருமையைக் கூறியதால் உங்கள் பெருமையை உண்மையில் குறைவாக நான் நினைத்தேனென்று நீங்கள் எண்ணிக்கொள்ளவேண்டாம். பாண்டியர்களுடைய பெருமை குன்றின்மேல் இட்ட தீபம்போல் எல்லோரும் அறிந்ததே யன்றோ?'' என்று நயமாகக் கூறித் தமது வார்த்தையை முடித்தார்.

ஒட்டக்கூத்தருடைய நயமான வார்த்தையைக் கேட்ட பாண்டியனும் புலவர் பெரியாரான புகழேந்தியாரும் மனம் மகிழ்ந்தனர்.

ஆதலால், பாண்டியன் வரகுணன், ஒட்டக்கூத்தரைப் பார்த்து, "புலவர் சிகாமணியே! நீர் எம்மையும் எமது குலத்தையும் இவ்வளவு உயர்த்திப் பேசுதல் எனக்குப் பிரியமில்லை. நீர் உமது அரசராகிய குமாரகுலோத்துங்கருடைய நலத்தையும், அவர் நாட்டையும் குறித்துப் புகழ்ந்ததால் எனக்குச் சிறிதும் மனத்தாங்கல் கிடையாது. நீர் உமது அரசனைப்பற்றிக் கூறிய யாவும் உண்மைதான். பாண்டிய அரசர்களுக்குச் சோழ அரசர்கள் தாழ்ந்தவர்களா? ஒரு போதுமில்லை. பாண்டிய அரசர்கள் தமிழை வளர்த்தவர்களென்றால், சோழ அரசர்கள் ஜனங்களுக்குத் தெய்வ பக்தியை உண்டாக்கியவர்களென்று சொல்லவேண்டுமே. தென்னாட்டில் உள்ள கோயில்களில் பெரும்பாலன சோழ அரசர்களாற்றானே கட்டப்பட்டிருக்கின்றன? இதுபோன்ற இன்னும் பல காரணங்களினால் சோழ அரசர்கள் பாண்டியர்களைவிடச் சிறப்பில் எவ்வகையிலும் குறைந்தவர்களல்லர். **'தண்ணீருங் காவிரியே, தார்வேந்தன் சோழனே, மண்ணாவதும் சோழமண்டலமே'** என்று கம்பரும், **'சோழவளநாடு சோறுடைத்து'** என்று நமது ஔவையாரும் கூறியிருக்கின்றனரன்றோ!'' என்று கூறி, பாண்டியன் பின்னும் ஒட்டக்கூத்தரை நோக்கி, "என் மகளை உமது அரசருக்கு மணம் செய்து கொடுப்பதில் எனக்கு யாதொரு தடையுமில்லை. ஆனால் இவ்விஷயம் என்னை மட்டும் பொறுத்ததல்லவே. பெண்ணைப் பெற்றநிலையிலேயே நான் பெரியவனாகிவிட முடி

யுமா? என் குடும்பத்தாரையும் குலத்தாரையும் அழைத்து நான் ஆலோசிக்கவேண்டும். ஆகையால் நீங்கள் உங்கள் இருப்பிடத்திற்குச் சென்று நாளையதினம் வாருங்கள். அதற்குள் நான் ஒரு முடிவுக்கு வந்து விடுகிறேன்" என்று கூறினான்.

அதைக்கேட்ட ஒட்டக்கூத்தர் "நல்லது, உங்கள் இஷ்டப்படியே செய்யுங்கள். விவாகமென்பது இன்றைக் கிரையன்று. ஆர அமர ஆலோசித்துச் செய்யவேண்டிய காரியந்தான். அறிவிற் சிறந்தாராகிய புகழேந்தியாருக்குத் தெரியாததொன்றுமில்லை. அவரோடும் கலந்து ஆலோசியுங்கள். அவர் எது சொன்னாலும், அது நம்மிருவருக்கும் நன்மை பயக்கக்கூடியதாகத்தான் இருக்கும். உங்கள் உத்திரவின்படியே நான் சென்று நாளை வந்து தங்களைக் காண்கிறேன்" என்று நயமாகக் கூறி, அரசனிடத்திலும் புலவர் புகழேந்தியாரிடத்திலும் உத்தரவு பெற்றுக்கொண்டு அரச சபையை விட்டகன்றார்.

அவர் சென்றபிறகு அரசன் புகழேந்தியாரைப் பார்த்து, "ஒட்டக்கூத்தர் முதலில் ஒருபடி ஏறினார்; பிறகு உங்கள் திறமையினால் இரண்டுபடி இறங்கிவிட்டார்" என்று கூறினான்.

அதைக்கேட்ட புகழேந்தியார், "என்னுடைய திறமை என்ன? உள்ளபடியே தங்கள் குலம் உயர்வுடையதென்பதற்கு நான் கூறிய ஆதாரம் உள்ளதுதானே" என்று பாண்டியனைப் பார்த்துக் கூறிப் பின்னும் "போகட்டும், எப்படியானாலும் சோழ அரசர்கள் தங்கள் குலத்துப் பெண்ணை மணக்கத் தகுதியுடையவர்கள் என்றே நான் எண்ணுகிறேன்" என்று சொன்னார்.

அதைக்கேட்ட அரசன் அவரைப் பார்த்து, "ஆம், அதற்கென்ன தடை? சோழ அரசர்தம் மகளிரைப் பாண்டியர்கள் மணப்பதும், பாண்டியருடைய மகளிரைச் சோழர்கள் மணப்பதும் தொன்றுதொட்டு வருகின்ற வழக்கமா

யிருக்கின்றது'' என்றுகூறி மறுபடியும் புகழேந்தியாரைப் பார்த்து, "அதனால்தான் நான் எனது மகளைக் குமாரகுலோத் துங்கனுக்குக் கொடுக்கலாமென்று எண்ணுகிறேன். "பழைய காலைத் தூர்க்காதே, புதுக்காலை வெட்டாதே' என்னுமொரு பழமொழியும் இருக்கின்றதல்லவா?'' என்று சொன்னான்.

அதைக்கேட்ட புகழேந்தியார் அரசனைப் பார்த்து, "நீங்கள் சொன்ன பழமொழி சிறந்ததுதான். ஆனால் சில சமயங்களில் பழையகாலைத் தூர்த்துப் புதுக்காலை வெட்ட வேண்டியதாக நேரிடக்கூடும்! ஆனால், தங்கள் விஷயத்தில் அப்படிச் செய்யவேண்டிய அவசியமொன்றும் நேரிடக் காரணமில்லை. ஏனெனில், குமாரகுலோத்துங்கர் எல்லா வகையிலும் சிறந்து விளங்குகின்றபடியால் அவரைத் தவிர வேறு மருமகனைத் தேடவேண்டிய அவசியமில்லை'' என்று கூறி முடித்தார்.

பிறகு அரசன் தன் உறவினர்களைத் தன் சபைக்கு அழைத்துவரும்படி தூதுவரிடம் சொல்லி யனுப்பினான்.

## எட்டாம் அத்தியாயம்

### பந்துக்களின் சம்பாஷணை

**தூ**துவர் அரசன் கட்டளையை யேற்றுச் சென்று 'அரசர் உடனே சபாமண்டபத்திற்கு வந்து தம்மைக் காணும்படி தங்களிடம் சொல்லுமாறு கூறினார்' என்று அரசனுடைய நெருங்கிய உறவினர் யாவரிடத்திலும் கூறினர்.

அவ்வார்த்தையைக் கேட்ட உறவினர்கள் உடனே சென்று அரசனுடைய சபாமண்டபத்தை அடைந்தனர்.

அரசன் அவர்களை அன்புடன் நோக்கி, "அறிவிற் சிறந்த பெரியீர்! நந்தம் திருமகளைச் சோழன் குமாரகுலோத் துங்கனுக்கு மணம் பேசுமாறு புலவர் ஒட்டக்கூத்தர் வந்

இருக்கின்றார். நான் உங்களைக் கேட்டு என் அபிப்பிராயத்தைச் சொல்லுகிறேனென்று கூறினேன். உங்கள் கருத்தென்ன? நீங்கள் என் சுகத்தில் கண்ணுங் கருத்துமுடையவர்களா யிருப்பதனால் உங்களிடம் இதைக் கூறினேன். நீங்கள் நன்றாய் ஆலோசித்து உங்கள் அபிப்பிராயத்தைத் தெரிவியுங்கள்" என்று சொன்னான்.

அந்த வார்த்தைகளைக் கேட்ட அரசனுடைய உறவினர்கள், தங்களுக்குள் அவ் விஷயத்தைப்பற்றி அரசன் முன்னிலையில் சிறிதுநேரம் வரையில் தங்களுக்குத் தோன்றியபடி பேசினார்கள். கடைசியாக அவ் உறவினர்களில் ஒருவர் மற்றவர்களைப் பார்த்து, "அரசர்களுக்கு இருக்கவேண்டிய கல்விச் செல்வம் பொருட்செல்வம் முதலியவற்றைச் சோழன் பெற்றிருக்கின்றான். அந்த விஷயத்தில் அவனை எவரும் ஏதும் குறைகூற முடியாது. ஆ! அவன் கல்வியே கல்வி! சரஸ்வதியின் கடாட்சம் அவனிடம் பூரணமாயிருக்கின்றது. அதற்குத் திருஷ்டாந்தமாக ஒன்று சொல்லுகிறேன் கேளுங்கள். அவனுக்குப் பட்டாபிஷேகமானபோது நாம் போய் இருந்தோமே, அப்போது ஒட்டக்கூத்தர் பாடிய பாடலின் பின் இரண்டடியை அவன் எவ்வளவு சமத்காரமாகப் பூர்த்தி செய்தான் பார்த்தீர்களா? செல்வத்தில் குபேரன்தானென்ன அவனுக்கு இணையாவானோ? முடியாது. 'நாவின் கிழத்தி உறைதலாற் சேரளே பூவின் கிழத்தி புலந்து' என்னும் வார்த்தை அவனிடத்தில் பொய்யாய்விட்டதே? அது மட்டுமா? தருமம் செய்வதில் கர்ணனும் குமணனும் அவனுக்கு ஒப்பென்று சொன்னாலும் போதாதே!" என்று கூறித் தமது வார்த்தையை முடித்தார்.

அதைக்கேட்ட மற்றொருவர், "பெண்கள் கைந்நிறைந்த பொன்னிலும், கண் நிறைந்த கணவனையே விரும்புவார்கள். ஆதலின் சோழன் அழகுடையவனோ?" என்று கேட்டார்.

அதைக் கேட்ட பாண்டியன் வரகுணன், தன் அருகில் இருந்த மந்திரியைப் பார்த்து, "சித்திரசாலையில் உள்ள ஐம்பத்தாறுதேயத் தரசர்களுடைய படங்களில் சோழன்

குமாரகுலோத்துங்கனுடைய படத்தைக் கொண்டுவருமாறு கூறி யனுப்பும்'' என்றான்.

உடனே மந்திரி அந்த விஷயத்தை அருகிலிருந்த ஒரு சேவகனிடம் கூற, அச் சேவகன் சித்திரசாலைக்குச் சென்று, சோழன் குமாரகுலோத்துங்கனுடைய படத்தைக் கொண்டு வந்து மந்திரியிடம் கொடுத்தான். மந்திரி அதை வாங்கி அரசனிடம் கொடுத்தான். அரசன் அதைச் 'சோழன் அழகுடையவனா?' என்று கேட்ட தன் பந்துவினிடம் கொடுத்தான்.

அவ்வுறவினர் அப்படத்தைத் தமது கரத்தில் வாங்கிப் பார்த்தார். உடனே அவர் முகமலர்ந்து மற்றப் பந்துக்களுக்கும் அப்படத்தைக் காண்பித்து அவர்களை நோக்கி, "சோழன் அழகில்லாவனென்ன, மன்மதனுக்குத் தாழ்ந்தவனா? பாருங்கள். அவன் வட்டமாய் ஒளிபெற்றுப் பூரண சந்திரன்போலப் பரந்தமுகமும், தாமரை மலர்போலும் அழகிய கருணை சுரக்கும் கண்களும், மதனன் வில்லைப்போல வளைந்து கறுத்த புருவமும், பவளம்போலச் சிவந்த வாயும், விஜயலட்சுமியின் மணிமண்டபம்போல விசாலமாய் எடுத்த மார்பும், கொடிய மேருமலை போலப் பருத்துயர்ந்த தோள்களும், ஆண் சிங்கம் போலப் பெருமிதமான நோக்கமு முடையவனாக வன்றோ காணப்படுகின்றான்!'' என்று கூறினார்.

அதைக் கேட்ட உறவினர்களில் ஒருவர், "நீங்கள் சொல்லியது சரிதான்; அழகிருந்தால் அதுவே போதுமென்பதற்கில்லை. பூர்வம் காந்தாரதேசாதிபதி தன் மகளை இரண்டு கண்ணும் இல்லாத திருதராஷ்டிரனுக்குக் கலியாணம் செய்து கொடுத்தானே; அவன் அழகைக் கவனிக்காமற்போன காரணமென்ன?'' என்றார்.

அதைக் கேட்ட வேறு ஒருவர், 'ஆம், காந்தார தேசாதிபதி பிறவிக்குருடனான திருதராஷ்டிரனுக்கு அதிர்ஷ்டத்தை மட்டும் கருதித்தான் பெண்ணைக் கொடுத்திருக்கவேண்டும்' என்று சொன்னார்.

இப்படி இவர்கள் பேசிக்கொண்டிருந்ததை யெல்லாம் மூலையில் இருந்து கவனித்துக்கொண்டிருந்த ஒருவர், மிக மிடுக்காகக் கிளம்பி, 'நீங்கள் சொல்வதெல்லாம் இருக்கட்டும். அவைகள் அவ்வளவு அவசியமுடையவைகள் அல்ல. அரசர்களுக்கு வேண்டியது வீரம். குமாரகுலோத்துங்கன் வீரன் என்பதில் தடையென்ன? அவனுக்கு நமது குலத்துப் பெண்ணைத் தடையின்றிக் கொடுக்கலாம்' என்று சொன்னார்.

இதைக் கேட்டவுடன், இதற்குமுன் பேசியவர், எங்கே தமது பெருமை குறைந்து போய்விடுகிறதோ வென்று எண்ணிக்கொண்டு, மற்றவர்களைப் பார்த்து, 'வீரமட்டும் இருந்தால் போதுமா? பாஞ்சாலனுக்குப் பிறந்த ஆணும் பெண்ணுமல்லாத சிகண்டிக்கும் ஒருவன் பெண்கொடுத்தானே! அவன் என்ன வீரத்தைக் கண்டு பெண் கொடுத்தான்?' என்று தற்பெருமையுடன் விளம்பினார்.

அதுவரையில் மௌனமாய் இருந்த வயதில் முதிர்ந்த பெரியார் ஒருவர் எல்லோரையும் பார்த்து, "சகோதரர்களே! எல்லாவற்றையும்விடக் குலங்கோத்திரம் சரிதானா வென்று பார்த்துக்கொண்டு பெண்கொடுத்தல் வேண்டும். அந்த வகையில் குமாரகுலோத்துங்கனைப் பற்றி நாம் கவனிக்க வேண்டியதில்லை. அவன் நமது குலப் பெண்ணைக் கொள்வதற்கேற்ற குலத்தில் உதித்தவன் என்பது நீங்கள் அறியாததன்றோ?" என்றார்.

அதைக் கேட்டவுடன் பின்னும் ஒருவர், "அதற்கென்ன சந்தேகம்? சோழன் நமது குலப் பெண்ணைக் கொள்ளத் தகுந்த குலத்தி லுதித்தவன்தான். அவன் குலத்தைப்பற்றிச் சந்தேகப்படுவது, கரும்பு கசக்குமா தித்திக்குமா என்று சந்தேகப்படுவதைப்போலன்றோ இருக்கின்றது. தொன்று தொட்டுச் சோழ அரசர்களும் பாண்டிய அரசர்களும் ஒருவரோடொருவர் சம்பந்தம் செய்து வருவதை எவரே அறியார்?" என்று சொன்னார்.

அதைக் கேட்ட எல்லோரும், "சரி, குமாரகுலோத்துங்கன் எல்லா வகையிலும் சிறந்தவனாகக் காணப்படுகின்றான்:

பழம் நழுவிப் பாலில் விழுந்ததைப் போலாயிற்று. ஆகையால் நமது குமரியைக் குமாரகுலோத்துங்கனுக்குத் திருமணம் செய்து கொடுக்கலாம். இஃது எங்களுக்குச் சம்மதம்'' என்று ஒரே மனமாகப் பாண்டியன் வரகுணனிடம் சொன்னார்கள்.

அதைக் கேட்ட வரகுணன் அதிக சந்தோஷப்பட்டு, அவர்கள் தான் அழைத்தவுடன் வந்து தங்கள் உண்மையான அபிப்பிராயத்தைக் கூறியதற்காகச் சந்தோஷப்பட்டு நன்றி கூறியனுப்பினன்.

## ஒன்பதாம் அத்தியாயம்

### விவாக நிச்சயம்

மறுநாள் வரகுணன் தன் சபையில் சிம்மாசனத்தின்மேல் வீற்றிருந்தான். அப்போது அவன் பக்கத்தில் மந்திரிமார்களும், எதிரில் புரோகிதர்களும், உறவினர்களும் உட்கார்ந்திருந்தார்கள். அரசன் சமீபத்தில் இருந்த இரண்டு இருக்கைகளில் ஒன்றில் ஒட்டக்கூத்தரும், மற்றொன்றில் புகழேந்தியாரும் அமர்ந்திருந்தனர்.

அப்போது பாண்டியன் தன் சபையிலிருந்த தன்னுடைய உறவினர்களையும், புரோகிதர்களையும், மந்திரிமார்களையும், மற்ற பெரியோர்களையும் நோக்கி, “எனது அருமைக் குமாரத்தியைக் குலோத்துங்கனுக்கு மணம் செய்து கொடுக்கலாமோ?'' என்று கேட்டான்.

அதற்கவர்கள் ஒரே மனமாய்க் “கொடுக்கலாம்'' என்று கூறினார்கள்.

உடனே அரசன் சந்தோஷத்துடன் எதிரில் இருந்த புரோகிதர்களைப் பார்த்து, “பெரியீர்! சோழன் குமாரகுலோத்துங்கனுக்கு நமது மகளைக் கலியாணம் செய்து கொடுப்பதற்கு ஒரு நன்னாள் பார்த்துக் கூறுங்கள்'' என்றான்.

அதைக் கேட்ட அம் மறையோர் பேரானந்தத்துடன்

மன்னன் மகளின் கலியாணத்திற்கேற்ற ஒரு நன்னாளைக் கவனிக்கக் கருதித் தம்முடைய பஞ்சாங்கச் சுவடியைப் புரட்டிப் புரட்டிப் பார்த்து ஒருவரோடொருவர் பேசலாயினர். கடைசியாக அவர்கள் ஒரு நன்னாட் குறித்து முடித்து, அந்நாள் இந்நாள் என்பதை அரசனுக்கு அறிவித்தனர்.

உடனே அரசன் சந்தோஷப்பட்டு முகூர்த்தப் பத்திரிகை எழுதச் சொல்லி, எழுதியானதும், அப்பத்திரிகைக்கு மங்களகாமாக மஞ்சள் முதலியன இட்டு அதை ஒட்டக்கூத்தரிடம் கொடுத்து, "ஐய, கூத்தரே! இந்தப் பத்திரிகையில் குறிப்பிட்டுள்ள தினத்தில் இங்கு வந்து எமது மகளைக் கலியாணம் செய்து கொண்டுபோமாறு உமது அரசரிடம் தெரிவியும்" என்று சொன்னான்.

அதைக் கேட்ட ஒட்டக்கூத்தர் அளவில்லாத சந்தோஷமடைந்தார். ஆயினும், அப்போதுகூடப் புகழேந்தியாரிடத்தில் மட்டும் அவருக்கு அளவுகடந்த பொறாமையிருந்தது.

சோழனுக்குப் பாண்டியன் தன் மகளைக் கொடுக்க மனமிசைந்தான் என்னும் வார்த்தையைக் கேட்டவுடன் ஜனங்களெல்லாம், "பூர்வம் திருப்பாற்கடலில் அவதரித்த ஸ்ரீ மகாலட்சுமியைத் தேவர் கூட்டமெல்லாம் எனக்கெனக்கென்று இச்சித்ததுபோல், நமது வேந்தன்மகளை எத்தனையோ இராஜாக்கள் இச்சித்துத் திருமணம் முடிப்பதற்கு இன்றுவரையில் பகீரதப் பிரயத்தனம் செய்து வந்தார்களே; என்ன பிரயோசனமாயிற்று! குமாரகுலோத்துங்கனுக்கென்று கங்கணப் பிராப்த மிருக்கின்றபடியினாலே காற்றும் மழையுமாய் அதி சுலபத்தில் விவாகங் கூடிவிட்டது. எப்பொழுதும் 'ஒருவனுக்குத் தாரம் மற்றவனுக்குத் தாய்' என்பது உண்மையன்றோ?" என்று சொல்லி மனமகிழ்ந்தார்கள்.

* * * * *

* * * * *

மறுநாள் ஒட்டக்கூத்தர் பாண்டியன் எழுதிக்கொடுத்த முகூர்த்தப் பத்திரிகையை யெடுத்துக் கொண்டு ஆனைசேனை புடைசூழ உறையூரை நோக்கிப் பிரயாணமானார். வழி நெடுக ஒட்டக்கூத்தர் அநேக விஷயங்களை நினைத்துக்கொண்டே போனார். "ஒட்டக்கூத்தன் முயன்றால் ஆகாதகாரியமும் உண்டோ? நான் சோழனுடைய பெருமையை உள்ளது உள்ளவாறே எடுத்துக் கூறினேன். அதற்கு அந்தப் புகழேந்தியோ வாயை மூடிக்கொண்டிராமல் வெட்டுக் கிளியைப்போல் துள்ளிக் குதித்து நான் சொன்ன விஷயங்களுக்கெல்லாம் மறுப்பாகப் பற்பல விஷயங்களைக் கூறினானே. .........உம்.........அவன் உண்மையில் என்னினும் சிறந்த படிப்பாளியாகத்தான் காணப்படுகிறான். ஆயினுமென்ன? நான் என் இஷ்டத்தை முடித்துக்கொண்டு வந்துவிட்டேன். கலியாணம் நடந்துவிட்டால் மாப்பிள்ளை இஷ்டப்படி பாண்டியன் நடக்கவேண்டியவனாய்விடுவான். அப்போது பார்த்துக் கொள்ளுவோம்" என இவ்விதமெல்லாம் பல எண்ணங்கள் கூத்தர் மனத்தில் தோன்றித் தோன்றி மறைந்தன. இவ்விதமான எண்ணங்களோடு சில நாட்களில் அவர் உறையூரை அடைந்தார்.

சிரமபரிகாரமானவுடன் அவர் மனைவி அவரை நோக்கித், "தாங்கள் சென்ற காரியம் எவ்வாறு முடிந்தது?" என்று கேட்டார்.

அதற்கவர், 'ஒட்டக்கூத்தன் சென்றால் முடியாத காரியமும் உண்டோ?' என்று கூறினார்.

அதைக் கேட்ட அவர் மனைவி அவரைப் பார்த்து, "சந்தோஷம்! சென்ற இடத்தில் நடந்த விஷயத்தை எனக்கு விவரமாகக் கூறவேண்டும். அந்த விஷயத்தைக் கேட்க எனக்கு ஆவல் அதிகமாய் இருக்கிறது" என்று கேட்டார்.

உடனே ஒட்டக்கூத்தர் தாம் பாண்டிநாட்டுக்குச் சென்றதுமுதல், திரும்பி வந்த வரையில் நடந்த எல்லா விஷயங்களையும் விவரமாகக் கூறினார். ஆனால், எக்காரணம்

பற்றியோ, தம்முடைய பாட்டை மறுத்துப் புகழேந்தியார் கூறிய விஷயங்களைமட்டும் சொல்லவில்லை.

அவர் கூறியவைகளையெல்லாம் கேட்ட அவர் மனைவி பெரிதும் சந்தோஷமெய்தி அவரைப் பார்த்து, "சரி, நீங்கள் இவ்விஷயத்தைப்பற்றிக் குமாரகுலோத்துங்கனுக்கு இன்றே சொல்ல வேண்டாவோ? விவாகதினத்திற்கு இன்னும் சரியாகப் பத்து நாட்கள் தானே இருப்பதாகத் தெரிகின்றது?" என்று சொன்னார்.

அதற்கவர், "ஆம் இப்போது குமாரகுலோத்துங்கன் குடிகளை நேரிற்பார்வையிடக் குதிரை மேல் போய் இருப்பதாக வரும்போது கேள்விப்பட்டேன். அதனால் நான் இங்கு வந்தேன். இந்நேரம் நான் வந்திருப்பது அவனுக்குத் தெரிந்திருக்கும். இருந்தாலும் குடிகளின் நன்மை தீமைகளை நன்றாய் அறிந்துகொள்ளாமல் அவன் வந்துவிடமாட்டான். அவன் வந்தவுடன் என்னிடம் வந்து சொல்லும்படியாக நான் சேவகர்களிடம் சொல்லியிருக்கின்றேன். சேவகர் வந்தால், நான் குமார குலோத்துங்கனிடம் சென்று விஷயத்தைக்கூறி நாளையே அவனை மதுரைக்கு அனுப்புவேன்!" என்று சொன்னார்.

இவ்விதமாக இன்னும் பல விஷயங்களைப்பற்றி ஒட்டக்கூத்தரும் அவர் மனைவியும் பேசிக்கொண்டிருக்கையில், வீட்டு வேலைக்காரி ஒருத்தி அங்குவந்து கூத்தரைப் பார்த்து, "அரசர் தம் அரண்மனைக்கு வந்துவிட்டதாகச் சேவகர்கள் வந்து சொல்லி, இதோ மாளிகையின் வாயிற்படியில் காத்துக் கொண்டிருக்கின்றார்கள்" என்று கூறினாள்.

அந்த வார்த்தையைக் கேட்ட ஒட்டக்கூத்தர் 'அப்படியா' என்று சந்தோஷப்பட்டுக்கொண்டே அரண்மனைக்குப் போய் வருவதாகத் தம் மனைவியிடம் சொல்லிவிட்டு வெளியிற் சென்று, அங்கிருந்த சேவகர்களோடு சென்று குமார குலோத்துங்கனைக் கண்டார்.

கண்டவுடன் குமாரகுலோத்துங்கன் கூத்தருக்கு ஆசி

ரியர் முறையில் மரியாதைசெய்து அவரை அங்கிருந்த ஓர் ஆசனத்தில் உட்காரவைத்து, அவர் உட்கார்ந்தபின்னர்த் தானும் அருகிலிருந்த ஓர் ஆசனத்தில் உட்கார்ந்துகொண்டு அவர் முகத்தை நோக்கினன்.

உடனே கூத்தர் அவனிடம் தாம் சென்று வந்த சமாசாரத்தைப் பற்றிப் பக்குவமாகச் சொல்லிக் கடைசியாக அவனைப் பார்த்து, 'முகூர்த்தத்திற்கு இன்னும் பத்து நாட்கள்தாமிருக்கின்றன. அதற்குள் நீ பாண்டிநாடு போய்ச் சேரவேண்டும்,' என்று கூறிக் கொண்டே பாண்டியன் கொடுத்த முகூர்த்தப் பத்திரிகையை அவனிடம் கொடுத்தார்.

பாண்டியன் பத்திரிகையை வாங்கி வாசித்தான். அவன் முகத்தில் புன் சிரிப்புத் தோன்றியது. ஆனால் அதே நிமிஷத்தில் தோன்றிய புன்சிரிப்பு மறைந்தது. அவன் எதைப் பற்றியோ சிந்திக்கலானன்.

அதைக் கண்ட கூத்தர் "என்ன சிந்திக்கின்றாய்?" என்று கேட்டார்.

அதற்குக் குமார குலோத்துங்கன் "நான் பாண்டிநாட்டுக்குச் சென்றுவிட்டால் நம் நாட்டு ஜனங்களைப் பாது காப்பவர் ஒருவர் இங்கு இருக்கவேண்டுமே! அதற்கு என்ன செய்கிறது என்பதே என் ஆலோசனைக்குக் காரணம். என் நன்மையைவிடக் குடிகளின் நன்மை எனக்குப் பெரிது", என்று சொன்னன்.

அதைக்கேட்ட ஒட்டக்கூத்தர் சற்றுநேரம் ஆலோசனை செய்தார். கடைசியாக அவர் குமார குலோத்துங்கனைப் பார்த்து, "குலோத்துங்கா, நீ சொல்லியது சரிதான். அரசன் தன்னுயிரைப்போல் மன்னுயிரைப் பாதுகாக்கவேண்டியது உண்மைதான். நீ மதுரைக்குப்போய் மணம் செய்து கொண்டு வா. நீ வருமளவும் நான் குடிகளைப் பரிபாலித்து வருகிறேன்." என்று கூறினர்.

அதற்குக் குமார குலோத்துங்கன், "தந்தையை இழ

ந்த எனக்குத் தாங்கள் தந்தையைப்போல் இருக்கின்றீர்கள். ஆகையால், தாங்களிங்கிருக்க நான் சென்று மணம் செய்து கொள்ளுவதென்றால், அது நகைப்புக் கிடமாகும். ஆகையால் தாங்கள் இங்கிருப்பது எனக்குச் சரியெனத் தோன்றவில்லை'' என்று கூறினான்.

அதைக் கேட்ட ஒட்டக்கூத்தர், "குலோத்துங்கா, நீ கூறியது உண்மைதான். நான் வருகிறேனென்று கூறி, நீ வேண்டாமென்று சொன்னால்தான் நகைப்புக்கிடமாகும். நமது நாட்டு நன்மையைக் கருதி நான் இங்கிருப்பதாகக் கூறினால், அது நகைப்புக்கிடமாகுமா? அப்படியெல்லாம் எண்ணாதே நான் கூறுவதெல்லாம் உன்னுடைய நன்மையைக் கருதியதாகவே யிருக்குமென்று நான் கூறவும் வேண்டுமா? நான் சொல்வதைக் கேள். என் வார்த்தையைத் தட்டாதே நான் இங்கிருந்து உன் அரசாட்சியைக் கவனித்துக் கொள்ளுகிறேன். நீ மட்டும் சென்று பாண்டியன் மகளை மணம் செய்துகொண்டு வா'' என்று கூறினார்.

அதற்குக் குலோத்துங்கன், "நல்லது; நீங்கள் கூறியபடியே ஆகட்டும். தங்கள் வார்த்தையை மீறி நடக்கும் சக்தி எனக்குக் கிடையாது'' என்று சொன்னான்.

'அப்படியே செய்,' என்று கூறி ஒட்டக்கூத்தர் அவனிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு தமது மாளிகையை அடைந்தார்.

## பத்தாம் அத்தியாயம்

### மகளுக்கு மதியுரைத்தல்

மறுதினம் நாள் நன்றாய் இருந்தபடியால் குமார குலோத்துங்கன் ஒட்டக்கூத்தரிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு, உத்தம பிராமணரும் உறவின் முறையாரும் தன்னுடனே வர, சகலாபரணாலங்கிர்தனாய் யானைமீதேறி மதுரையை

நோக்கிப் பிரயாணமானான். அவனைச் சுற்றிலும் இரத கஜ துரகங்களும், காலாட்படையும் கடல்போல் சென்றன. களைப்பு நேரிட்டபோது வழியில் ஆங்காங்குத் தங்கிக் குமார குலோத்துங்கன் மதுரையை நெருங்கினான்.

குமார குலோத்துங்கன் வருகிறானென்பதைத் தூதர்கள் மூலமாகக் கேள்விப்பட்ட பாண்டியன் வரகுணன், தன்னுடைய யானை சேனைகளுடனே மந்திரிமார்களை அனுப்பிக் குமார குலோத்துங்கனை மிகவும் மரியாதையுடனும், ஆடம்பரத்துடனும் வரவேற்றான்.

பிறகு வரகுணன் இஷ்டப்படிக் கலியாணத்திற்காக மதுரைமாநகரம் முழுவதும் தெய்வலோகம்போல் அலங்கரிக்கப்பட்டது. அரசனுடைய மகளுக்குக் கலியாணம் என்பதை அறிந்த நகரத்தார் அளவிலாத சந்தோஷமெய்தினர்.

கலியாணத்திற்கென்று, ஏவலாளர் கலியாணப் பந்தலில் வாழைகமுகுகள் நாட்டி முத்துமாலை புஷ்பமாலை தூக்கிப் படங்கள் கண்ணாடிகள் அமைத்து, இந்திர விதானம்போலச் சோடிக்கப்பட்ட அழகிய மணப் பந்தலிலே உன்னதமான மாணிக்க மேடையில் நவரத்தினக்கோலமிட்டு, பூரண கலசங்கள் வைத்து, தீபங்கள் ஏற்றி, முளைப்பாலிகை அமைத்து, நடுவே மரகதப் பீடமிட்டு அலங்கரித்தார்கள்.

கலியாணத்தன்று மாப்பிள்ளையையும், பெண்ணையும் திவ்விய தீர்த்தங்களால் ஸ்நானம் பண்ணுவித்து, விலையுயர்ந்த ஆடையாபரணங்களையும், கந்த சுகந்த புஷ்பாதிகளையும் கொண்டு அலங்கரித்து மணக்கோலஞ் செய்வித்து அழைத்துவந்து மாப்பிள்ளையையும், அவன் வலப்புறத்தில் பெண்ணையும் மேற்படி பீடத்தில் இருக்க வைத்து, மங்கள வாத்தியம் முழங்க ஓமம் வளர்த்தி வேதப்பிராமணர்கள் மந்திர வாக்கியங்களைச் சொல்லி ஆசீர்வதிக்க, சாஸ்திரோக்தமாகப் பாண்டியன் தன்மகள் கையை எடுத்துச் சோழன் குமார குலோத்துங்கன் கைமேல் வைத்துத் தாரைவார்த்துத் தத்தம் பண்ணிக் கன்னிகாதானமாய்க் கொடுக்கச் சோழன்

குமார குலோத்துங்கன் அக்கினியும் அருந்ததியுஞ் சாட்சி யாக அவளைப் பாணிக்கிரகணம் செய்தான்.

மற்ற கிரியைகளெல்லாம் விதிப்பிரகாரம் சம்பூர்ண மாக நடக்க, • ஆறுமாத பரியந்தம் தானம், தருமம், விருந்து, ஆடல், பாடல் முதலான சகல வைபவங்களுடன் அதி சம்பிரமமாகக் கலியாணம் நடந்தேறியது.

பிறகு குமார குலோத்துங்கன் தன்னுடைய நாட்டுக் குப் போக விரும்பினான். அருமை பெருமையாகப் பெற்று இத்தனை நாள் வரையில் வளர்த்து வந்த தம்முடைய அரு மருந்தன்ன பெண்ணைவிட்டுப் பிரியும்படியாயிற்றேயென்று பாண்டியனும் அவனுடைய மனைவியும் வருந்தினர். உறவி னரும் சிறிது மனம் கசிந்தனர்.

எத்தனை நாள் இருப்பினும் கலியாணமான பிறகு பெண்களை மணாளன் வீட்டுக்கே அனுப்பிவிடுதல் உலக வழக்கென்பதைத் தேர்ந்து தெளிந்து அவர்கள் தங்கள் பெண்ணை நோக்கி, "கண்மணீ, நீ எங்களைவிட்டுப் பிரிவது எங்களுக்கு எவ்வளவோ கஷ்டமாகத் தான் இருக்கின்றது. என்ன செய்யலாம்? விவாகமாகுமுன்னர்ப் பெண்கள் தாய் தந்தையர்களின் பாதுகாப்பிலும், விவாகமான பின் னர்க் கணவனுடைய பாதுகாப்பிலும் இருக்கவேண்டுமென் பது தொன்றுதொட்டு வரும் வழக்கமாயிருக்கின்றது. கற் புடைய பெண்கள் கணவனையே தெய்வமாக வழிபட்டு வருகின்றார்கள். நீ உன் கணவனின் கிருகத்தை யடைந்த வுடன், அவன் குணமறிந்தொழுகி, நல்ல பெண் என்று உன்னை நாலுபேர் புகழ வாழ்ந்திரு. மாசிலாக் குலங்களாகிய பாண்டிய குலத்திற்கும் சோழ குலத்திற்கும் உன்னால் இன் னும் பெருமை வளரவேண்டும். ஒருவனுடைய வாழ்க்கை யாகிய சமுத்திரத்தைக் கடப்பதற்கு அவனுடைய மனைவி மரக்கலம்போல் நின்று உதவவேண்டியவ ளாகின்றாள். பழுதுபட்ட மரக்கலம் எப்படிச் சமுத்திரத்தைக் கடப்பதற்கு உதவாதோ அப்படியே கெட்ட மனைவி ஒருவனுடைய வாழ் நாளைச் சுகமுடையதாக்காள். கணவன் தன் வாழ்

நாளை இன்பமாகக் கழிப்பதற்கு மனைவி உத்தம குணம் படைத்த சத்தியவதியாய் இருத்தல் வேண்டும். உத்தமி களின் பெருமை அளவிட முடியாது.

"முற்காலத்தில் கற்புடையவர்களில் சந்திரமதி காட்டுத் தீயைக் குளிரச் செய்தாள். தமயந்தி தன்னையிச்சித்த வேடனை எரித்தாள். அனுசூயாதேவி தன் கற்பைப் பரி சோதிக்க வந்த திரிமூர்த்திகளையும் குழந்தைகளாக்கினள். தன் கணவன் உயிரை எமனிடமிருந்து சாவித்திரி மீட் டாள். அணிமாண்டவியரால் தனக்கேற்பட்ட சாபத்தை நளாயினி தன் கற்பின் திறமையால் தடுத்துவிட்டாள். கற் புக்கரசியாகிய திருவள்ளுவநாயனாரின் மனைவியார் தமது கணவரது பணிவிடையில் இருக்கையில் ஒரு தவசி வந்து பிச்சை கேட்கப் பிச்சையிடக் காலதாமதப் பட்டமையால் அவர் கோபங்கொண்டு அம்மாதரசியை எரிக்க உறுத் துப் பார்க்க, அம்மாதரசி அவர் கருத்தை யறிந்து, 'கொக் கென்று நினைத்தாயா கொங்கணவா?' என்றார். அதைக் கேட்ட தவசியாகிய கொங்கணவர், 'நாம் கொக்கை எரித் தது இம்மாதரசிக்கு எப்படித் தெரியும்? இவர் கற்புக்கரசி யார்' என்று நினைத்துப் பயந்து போனார். கற்புக்கரசி களின் பெருமை தேவர்களும் கொண்டாடக் கூடியதாய் இருக்கின்றது என்று கூறினார்கள்.

அன்று மாலை, பாண்டியன் வரகுணனின் மனைவி தன் மகளைப் பார்த்து, 'கண்மணி, உன் கணவராகிய குமார குலோத்துங்கர் நீதியிற் சிறந்த உத்தமர். உயர் குடியிற் றோன்றியவர். இவை உனக்குத் தெரியாதன அல்லவே, அவரோடு நீ ஓருயிர் ஈருடல்போல் வாழ்தல்வேண்டும். அன்றியும், வேதம் ஓதுகின்றவர்களுக்கு ஒரு மழையும், செங் கோல் செலுத்துகின்றவர்களுக்கு ஒரு மழையும், கற் புடைய ஸ்திரீகளுக்கு ஒரு மழையும் ஆக, மாதம் மூன்று மழை பெய்யும் என்பது வழக்கமன்றோ? இதனால் ஸ்திரீ கற்புடையவளாய் இருந்தால் வானம் பொய்யாது என்பது விளங்கவில்லையா? அது மட்டுமா?

"வானம் பொய்யாது வளம்பிழைப் பறியாது
நீணில வேந்தர் கொற்றஞ் சிதையாது
பத்தினிப் பெண்டி ரிருந்த நாடு." 22

என்று பெரியோராகிய இளங்கோவடிகள் கூறியிருப்பதும் உண்மையேயன்றோ?

"கண்மணீ, நீ பிறந்த இப்பாண்டிய குலத்து இராஜ ஸ்திரீகள் கற்பிற் சிறந்தவர்கள் என்பதற்கு ஒரு திருஷ்டாந்தம் கூறுகின்றேன் கேள். முன்காலத்திலே காவிரிப்பூம் பட்டினத்தில் கோவலன் என்னும் பெயரினையுடைய செல்வத்திற் சிறந்த வணிகன் ஒருவன் இருந்தான். அவன் மிக இளம்பருவத்தே கண்ணகி என்னும் கன்னிகையொருத்தியை மணந்து கொண்டான். மணம் நிகழ்ந்த சிறிது காலத்திற்குப் பின் அவன் அவ்வூரில் இருந்த மாதவி என்னும் தாசியின் சேர்க்கையனாகிக் கண்ணகியை மறந்து காலம் போக்கினான். மாதவி தாசிகளில் உத்தமியாய் இருந்தும், அவள் பொருட்டுக் கோவலன் தன் கைப்பொருளை இழந்து வறியனாயினான். பிறகு சில காரணங்களினால் அவன் தாசி மாதவி கொடியவள் என்று பிறழ உணர்ந்து அவள்பால் வெறுப்புற்று, மனத்தில் விசனத்துடன் தன் மனையை நாடிச் சென்றான். கோவலன் வருகையைக் கண்ட கண்ணகி கற்புடைய ஸ்திரீகளின் இலக்கணப்படி அவனைக் களிப்புடன் வரவேற்றாள். தன் மனைவியின் நற்குணத்தைக் கண்ட கோவலன், தான் அதுகாறும் அவளை மறந்திருந்தமைக்குப் பெரிதும் வருந்தினான். கற்புடையாளாகிய கண்ணகி பல இன்சொற் கூறி அவன் துன்பத்தைப் போக்கினாள்.

"இருந்த பொருள்களையெல்லாம் தாசிக்கு இட்டு வெறுங்கையனாகிய கோவலன், மறுபடியும் பொருளீட்டித் தனவந்தனாதல் வேண்டுமென்னும் நோக்கத்துடன் அக்கருத்தைத் தன் மனைவியிடம் கூறி, அவள் காற்சிலம்பொன்றைப் பெற்று, அதை விலைப்படுத்தி மூலதனஞ் சேகரிக்க, அவளுடன் இந்நகரத்தை யடைந்து, மாதரி என்னும் பெயருள்ள யாதவகுல மகளொருத்தியின் வீட்டில் தங்கி

"பின்பு பாண்டியன் நெடுஞ்செழியன் கண்ணகியைப் பார்த்து, "பெண்பாவாய்! உன்னுடைய கணவன் திருடன் அல்ல என்பதை நீ தகுந்த காரணத்துடன் நிரூபிக்காமல் இப்படிப் பேசுவதுகூடாது" என்று கூறினான்.

"அதைக் கேட்ட கண்ணகி, "மன்னவ! உன்னுடைய மனைவியின் சிலம்பினுள், என்ன இருக்கின்றன?" என்று கேட்டாள். 'அதற்கவன் 'முத்துக்கள் இருக்கின்றன' என்று கூறினான். 'சரி, என்னுடைய சிலம்பினுள் மாணிக்கங்கள் இருக்கின்றன. என் கணவர் திருடியதாக உன்னிடம் பொற் கொல்லன் கொடுத்த சிலம்பை நீ உடைத்துப் பார்' என்று கண்ணகி கடுங்கோபத்துடன் கூறினாள்.

"உடனே அரசன் தன்னிடம் பொற்கொல்லன் கொடுத்த சிலம்பை உடைத்துப் பார்த்தான். அதிலிருந்து கண்ணகி கூறியபடியே மாணிக்கப் பரல்கள் எல்லோர் கண்களும் கூசும்படி வெளியே சிதறி விழுந்தன. உடனே கண்ணகி தன் காலில் இருந்த மற்றொரு சிலம்பையும் கழற்றி அச் சபையிலேயே வீசி யெறிந்து உடைத்தாள். அதிலிருந்தும் மாணிக்கப் பரல்கள் சிதறின. இதைக் கண்ட அரசன், 'ஆ! அறியாமல் நான் என்ன அநியாயம் செய்து விட்டேன்! படுமோசக்காரனாகிய பொற்கொல்லன் வார்த்தையை நம்பி நிரபராதியாகிய கோவலனைக் கொன்று கட்டழகு வாய்ந்த இவளை விதவையாக்கினேனே. குலத்தைக் கெடுத்த கோடா ரிக்காம்புபோல் பரிசுத்தமான பாண்டிய வம்சத்திற்கே நான் பழியை யுண்டாக்கிவிட்டேன். ஆ! இனியும் நான் உயி ரோடு இருக்க வேண்டுமா! அரசன் நீதி தவறினால்,

**"கோன்நிலை திரிந்திடின் கோள்நிலை திரியும்;**
**கோள்நிலை திரிந்திடின் மாரிவறங் கூரும்;**
**மாரிவறங் கூரின் மன்னுயிர் இல்லை,"** (23)

என்றபடி அல்லவோ உலகம் கெடும். அன்றியும்,

**"மாநிலங்கா வலனாவான் மன்னுயிர் காக்குங் காலைத்**
**தானதனுக் கிடையூறு தன்னால், தன் பரிசனத்தால்,**

ஊனமிகு பகைத்திறத்தால், கள்வரால், உயிர்தம்மால்
ஆனபயம் ஐந்தும்தீர்த்து, அறங் காப்பான் அல்லனோ"

என்பதையும் நான் அறியாமல் ஒருயிரை வதைத்தேன். ஆ! என் உயிரே, இன்னுமா நீ என் உடலில் இருக்கின்றாய்? ஆ!' என்று இவ்வாறு தன்னுள் எண்ணிப் பெருமூச்செறிந்தான். உடனே அவன் உயிர் உடலைவிட்டுப் பிரிந்தது. ஆ! இவனன்றோ அரசன்! இவன் உயிர் விட்டது பெரிதல்ல. அருகிலிருந்த அவன் மனைவியாகிய கோப்பெருந்தேவி, தன் கணவன் இறந்ததை அறிந்தாள். அக்கணமே, அவள் உயிர் அவள் உடலைவிட்டு நீங்கியது. அதைக் கண்ட எல்லோரும் கண்ணகியினும் கற்பிற் சிறந்தவள் கோப் பெருந்தேவியே என்று புகழ்ந்தனர். இதனால் தொன்றுதொட்டு நம்முடைய பாண்டிய வம்சத்தில் வந்த ஸ்திரீகள், கற்பிற் சிறந்தவர்கள் என்பது விளங்கவில்லையா?' என்று தன் மகளைப் பார்த்துப் பாண்டியன் வரகுணன் மனைவி கூறினாள்.

அதைக் கேட்ட அவளுடைய மகள், "ஆம், அம்மணி, நான் பாண்டியகுலத்தின் பெருமையை நன்றாய் அறிந்தேன். இனி நான் என் கணவன் குமாரலோத்துங்கரோடு வாழ்ந்து பாண்டிய குலத்திற்கும் சோழ வம்சத்திற்கும் பெருமை உண்டாகும் வழியில் என்னால் கூடியவரையில் நடந்து கொள்ளுகிறேன்," என்று கூறினாள்.

மறுபடியும் அவள் தாயார் அவளைப் பார்த்து, "கண்மணி, பெண்கள் தங்கள் கணவரின் நன்மையைக் கருதி நடந்துகொள்ள வேண்டிய மாதிரிகள் பல உள. அவைகளையெல்லாம் இங்கு எடுத்துக் கூறுவதென்றால் இயலாது. எந்தெந்தச் சமயத்தில் எவ்வெவ் விதமாக நடந்து கொள்ள வேண்டுமோ, அவ்விதமெல்லாம் நீ நடந்து உத்தமியென்று பெயரெடுக்க வேண்டும். நமது குலத்தில் வாழ்ந்த மற்றொரு கற்பரசியின் சரித்திரமொன்று இருக்கிறது. அதுவும் அவசியமாகத் தெரிந்துகொள்ள வேண்டியதே. உனக்கு விருப்பமானால் அதையும் சொல்லுகிறேன்," என்று கூறினாள்.

பின்பு பெண் தாயைப் பார்த்து, "அம்மா, அமிர்தம் வேண்டா வென்று சொல்லுகிறவர்களும் உண்டோ? கற்புக்கரசிகளின் சரிதங்கள் எத்தனையானாலும் கேட்க நான் பின்வாங்கமாட்டேன். சிரமம் பாராமல் அவற்றைச் சொல் லுங்கள்," என்றாள்.

உடனே அவள் தாயார், "கண்மணி, முற்காலத்தில், இம்மதுரைமா நகரில் வணங்காமுடி மாறன் என்னும் அரசர் ஒருவர் அரசாண்டிருந்தார். அப்போது அவரிடம் அழிந்து போன தமிழ்ச் சங்கத்தை விருத்தி செய்யும் பொருட்டுச் சில விஷயங்களைப் பேசுவதற்காகப் பொய்யாமொழிப் புலவர் என்னும் ஒரு பெரியார் வந்தார். அப்போது அரசர் சொக்க நாதர் சந்நிதிக்குச் சென்றிருப்பதாகப் புலவர் கேள்விப்பட்டு, அங்குச் சென்றார். அங்கு அரசர் சுவாமியைச் சாஷ்டாங்க மாகத் தரையில்வீழ்ந்து சேவித்துக் கொண்டிருந்தார். அதைக் கண்ட புலவர்,

"தழற்கா லரவிந்தங் கூம்பக் குமுத மலர்கையவிழ்ப்ப
நிழற்கான் மதியமன் றேநின் றிருக்குல நீயவன்றன்
அழற்கால விர்சடை மீதே யிருந்துமவ் வந்திவின்னன்
கழற்கால் வணங்குதி யோவணங் காமுடிக் கைதவனே" (25)

என்ற பாடலைப் பாடினார்.

அவ்வரசர் பொய்யாமொழிப் புலவரைப் பார்த்து, "தாங்கள் யார்? இங்கு வந்த காரணம் என்ன?" என்று கேட்டார்.

அதற்குப் பொய்யாமொழிப் புலவர் அவரைப் பார்த்து, தம்முடைய பெயர் பொய்யாமொழிப் புலவர் என்று கூறி, தாம் அழிந்துபோன சங்கத்தை விருத்திசெய்யவேண்டும் என்னும் நோக்கத்தோடு வந்ததாகக் கூறினார்.

அதைக் கேட்ட பாண்டியர் மனத்தில் அலட்சியங் கொண்டு, "இவரோ சங்கத்தை விர்த்திசெய்யக் கூடியவர்?" என்று நினைத்து அவரைப் பார்த்து, "நீர் சங்கத்தை விருத்தி

செய்யக் கூடியவரென்பதும் உம்முடைய பெயர் பொய்யா மொழி என்பதும் உண்மை யென்பதற்குச் சங்கத்தார்க்குப் பதிலாக அவர்களைப் போல் கற்களால் செய்து வைக்கப்பட்டிருக்கும் சிலைகள் உமது பாட்டைக் கேட்டுச் சந்தோஷப் பட்டுத் தலையசைக்கும்படி செய்யும் பார்ப்போம்'' என்று சொன்னான்.

அதைக் கேட்ட புலவர், அவனைப் பார்த்து, "அப்படியே ஆகட்டும்'' என்று கூறி, கற்சிலைகளைப் பார்த்து,

"உங்களிலே யானொருவ னெவ்வுவனோ வோவ்வேனோ
திங்கட் குலனறியச் செப்புங்கள்—சங்கத்தீர் !
பாடுகின்ற முத்தமிழ்க்கென் பைந்தமிழு மொக்குமோ
ஏடெழுதா ரேயெழுவீ ரின்று'' (26)

என்ற பாடலைப் பாடினார். உடனே அந்தக் கற்சிலைகள் "பேஷ், பேஷ்,'' என்று கைகொட்டித் தலையசைத்தன. அதோடு ஒழியாமல் பாண்டியன் அவரைப் பொற்றாமரைக் குளத்திற்கு அழைத்துக்கொண்டு போய், "இக்குளத்தில் சங்கப் பலகை முழுகிப்போய் இருக்கிறது. அது மிதக்கப் பாடும்'' என்று கூறினான்.

அதைக் கேட்ட பொய்யாமொழி, "அப்படியே ஆகட்டும் அரசே,'' என்று கூறி, பொற்றாமரைக் குளத்தை நோக்கி,

"பூவேந்தர் முன்போற் புரப்பா ரிலையெனினும்
பாவேந்த நுண்டேன்னும் பான்மையாற்-காவேந்தன்
மாற னறிய மதுரா புரித்தமிழோர்
வீறணையே சற்றே மித.'' (27)

என்று ஒரு பாடலைப் பாடினார். உடனே சங்கப்பலகை மிதந்தது.

"அதைக் கண்டும் அவ்வணங்காமுடிமாறன் புலவரை அலட்சியம் செய்தானேயொழிய அவரைக் கௌரவப்படுத்த வில்லை. அதைக் கண்ட புலவர் சிகாமணி, "இவன் அரச

னல்லன். இவனிடம் வந்தது நமக்குக் குறைவு'' என்று எண்ணிக்கொண்டு தம்முடைய பல்லக்கிலேறித் தம் நாட்டை நோக்கிச் சென்றார்.

“இவ்விஷயங்களையெல்லாம் வணங்காமுடிமாறனுடைய மனைவி யறிந்து, “ஐயோ, நமது கணவர் அப்புலவரை மனம்நோகும்படி செய்துவிட்டாரே! அப்புலவர் வாக்குப் பொய்யாமொழியாயிற்றே! அவர் எது சொன்னாலும் தவறாது பலிக்குமே! இதற்கென்செய்வது? எப்படியாவது அவர் மனவருத்தத்தை மாற்றவேண்டும்,'' என்று தனக்குள் எண்ணிக்கொண்டு பல்லக்குச் சுமப்பவனைப்போல வேடம் பூண்டு சென்று, பொய்யாமொழிப் புலவரின் பல்லக்கைச் சுமப்பவர்களோடு தானும் சேர்ந்து அப்பல்லக்கைச் சுமந்து சென்றாள்.

“இதை எப்படியோ பொய்யாமொழிப் புலவர் அறிந்து பல்லக்கிலிருந்து சட்டென்று கீழே யிறங்கி அவளைப் பார்த்து, “அம்மணி, தாங்கள் இப்படிச் செய்யவேண்டிய காரண மென்ன?'' என்று கேட்டார்.

“அதற்கு வணங்காமுடிமாறன் மனைவி அவரைப் பார்த்து, “புலவரேறே, எனது கணவனார் தங்கள் விஷயத்தில் அபசாரப்பட்டதாகக் கேள்விப்பட்டேன். அவர் அறியாமற் செய்த பிழைகளைப் பொறுத்துத் தாங்கள் அவரை வாழ்த்துதல்வேண்டும் என்னும் கருத்துக்கொண்டு நான் இப்படிச் செய்தேன்'' என்று சொன்னாள்.

“அதைக்கேட்ட புலவர் அவளுடைய கற்பின் பெருமைக்கு மெச்சினார்'' என்று சொல்லி, வரகுணனுடைய மனைவி பின்னும் தன் மகளைப் பார்த்து, “இப்படியல்லவோ மனைவியர்கள் இருக்கவேண்டும்! அம்மா, இப்படியே பாண்டியகுலத்து வந்த பத்தினிகள் பலர் உளர். ஆகையால் நீ உன் கணவர் இல்லம் சேர்ந்து அவர் மனமகிழ நடந்து, அவர் வார்த்தைக்கெதிர் பேசாது, அவர் நன்மையில் கண்ணும் கருத்துமாக இரு. இதைத் தவிர வேறு

உனக்கு நான் என்ன சொல்லப்போகிறேன்?'' என்று கூறினை.

அதற்கு அப் பெண்மணி தன் தாயை நோக்கி, "அம்மணி, தங்களிஷ்டப்படியே நடந்து உத்தம மனைவியென்று பெயரெடுக்கிறேன்'' என்று சொன்னாள்.

## பதினோராம் அத்தியாயம்

### ஒட்டக்கூத்தரின் சூழ்ச்சி

பாண்டியன் வரகுணன் ஒரு நன்னாட்பார்த்துத் தன் மகளையும் மருமகன் குமார குலோத்துங்கனையும் உறையூருக்கு அனுப்பத் தீர்மானித்தான். அதற்கு முன்னரே அவன் தன் மகளுக்குப் பல ஊர்களைச் சீதனமாகக் கொடுத்ததோடும், யானை சேனைகளும், வண்டி வாகனங்களும், பலவகைச் சாமான்களும், பொன்னாபரணங்களும் சீதனமாக உறையூருக்கு அனுப்பிவிட்டான். அவற்றோடு அவன் தன் மகளுக்கு ஏற்ற சமயத்தில் புத்திமதி சொல்வதற்காகத் தன்னுடைய சமஸ்தான புலவராகிய புகழேந்திப் புலவரையும் தன் மகளோடு உறையூருக்கு அனுப்பத் தீர்மானித்தான்.

அக்கருத்தோடு அவன் ஒரு நாள் புகழேந்திப் புலவரைப் பார்த்து, "ஐயா, நான் என் மகளோடு தங்களையும் உறையூருக்கு அனுப்பத் தீர்மானித்துள்ளேன். என் மகளோ அறியாச் சிறுமி; லௌகீகம் தெரியாதவள். ஆகையால் தாங்கள் அவளோடு சென்றிருந்து ஏற்ற சமயத்தில் நன்மதி புகட்டிக்கொண்டிருக்க வேண்டுமென்பது என் விருப்பம். இதைத் தங்களிடம் தெரிவிக்க வேண்டுமென்று சின்னாட்களாக எண்ணி இன்று துணிந்து தெரிவித்தேன். உங்கள் விருப்பம் என்னவோ?'' என்று கேட்டான்.

அதற்குப் புகழேந்தியார் அவனை நோக்கி, "அரசே!

னும் முடியக்கூடிய காரியமாய் இருந்தாற்றானே உன்னால் செய்ய முடியும். நான் நினைக்கும் விஷயம் உன்னால் செய்யக்கூடியதுதான்; ஆனால் நீ யதற்கு மனமிசைய மாட்டா யென்று நான் திண்ணமாகக் கூறுவேன்.

குமார குலோத்துங்கன:— ஆசிரியரே! இதுவரையில் தாங்கள் கூறிய வார்த்தைகளில் இப்போது தாங்கள் கூறிய வார்த்தைகளே என் மனத்தை வருந்தச் செய்கின்றன. நான் என் குலத்திலிருந்த முன்னோர்களின்மீது ஆணையாகக் கூறுகின்றேன். உங்களுடைய விருப்பம் எதாயினும் சரியே : அதை நான் நிறைவேற்றுகிறேன்.

இவ்விதம் குலோத்துங்கன் கூறியவுடன் ஒட்டக்கூத்தர் அவனைப் பார்த்து, "குலோத்துங்கா, உன்னைப்போன்ற ஒரு மாணவன் நாடெங்குந் தேடினும் கிடைக்கமாட்டான். இது கிடக்கட்டும். நான் உன்னிடம் சொல்ல விரும்புவது புகழேந்தியைப்பற்றியே—என் மனத்தில் தோன்றியுள்ள கவலைக்குக் காரணம் அவனே" என்று கூறி வார்த்தையை நிறுத்தினார்.

குமார குலோத்துங்கன் அவ் வார்த்தையைக் கேட்டவுடன் திடுக்கிட்டு அவரைப் பார்த்து, "என்ன! புகழேந்தியாரா! அப் புலவர் சிகாமணியா தங்கள் கவலைக்குக் காரணமாக விருக்கின்றார். அஃதெப்படி?" என்று கேட்டான்.

ஒட்டக்கூத்தர், "குலோத்துங்கா, நீ தான் புகழேந்தியைப் புலவர் சிகாமணி யென்று மெச்சிக் கொள்ளல்வேண்டும். அவன் படித்தவன் என்பதற்கேற்ற பெருங்குணம் ஒன்றும் அவனிடம் காணப்படவில்லை" என்று சொன்னார்.

குமார குலோத்துங்கன் அவரை நோக்கி, "ஐயா, தாங்கள் இவ்வாறு கூறுவதனால் எனக்கு விஷயம் நன்றாக விளங்கவில்லை. அவர் தங்களுக்குச் செய்த கெடுதி என்ன?" என்று கேட்டான்.

ஒட்டக்கூத்தர் குமார குலோத்துங்கனைப் பார்த்து,

"குலோத்துங்கா, புகழேந்தி எனக்குமட்டுமா கெடுதல் செய்தான்? உனக்குந்தான் கெடுதல் செய்தான்" என்றார்.

"அஃதெப்படி?" என்று கேட்டான் குமார குலோத்துங்கன்.

உடனே ஒட்டக்கூத்தர் அவனை நோக்கி, "குலோத்துங்கா, நான் உனக்கு மணம்பேசப் பாண்டியனிடம் சென்றபோது பாண்டியன் விளையாட்டாக உன் குலப்பெருமையைப் பற்றிக் கேட்டான். நான் மிக அழகாக உன் குலப்பெருமையை அவனுக்கு எடுத்துரைத்தேன். அவன் மிகச் சந்தோஷப்பட்டான். அப்போது அவ்வரசனருகிலிருந்த இப்புகழேந்தி நற்காரியத்தில் நாமேன் தலையிட்டுக் கெடுக்க வேண்டுமென்று எண்ணிப் பேசாமல் இராமல், பாண்டிய குலத்தின் பெருமைதோன்ற சோழகுலத்தை இழிவு படுத்தி ஒரு பாட்டுப் பாடினான். அதுமட்டுமா? இன்னும் அவ்வரசன் உனக்குத் தன் பெண்ணைக் கொடாமலிருப்பதற்கு என்னென்ன செய்யக்கூடுமோ அவ்வளவும் செய்தான். நீ வணங்கும் கடவுள் அருளினாலும், என்னுடைய சாமர்த்தியத்தினாலும் நான் புகழேந்தியின் வாயைச் சமத்காரமாக அடக்கி நம்முடைய காரியத்தை முடித்துவந்தேன். நல்ல காரியத்திற்கு இடையூறு செய்கிறவன் படித்தவனாயிருந்தாலும், அவனைப் படித்தவன் என்று யார் ஒப்புக்கொள்ளுவார்கள்? அப்படிப்பட்டவன் முகத்தில் விழிப்பதும் பழிக்கிடமாகுமன்றோ? அதுமுதல் அப்புகழேந்தியின்மேல் எனக்கு வெறுப்புண்டாயிருக்கிறது. அப்படிப் பட்டவனைச் சரிசமானமாக நீ நம்மோடு நமது இராஜசபையில் வைத்துக் கொண்டிருப்பது சரியா?" என்று மெய்யும் பொய்யுமாகச் சில வார்த்தைகளைக் கூறினார்.

குலோத்துங்கன், அவர் வார்த்தை முற்றும் உண்மையென்று நம்பி அவரைப் பார்த்து, "ஐய, இதுகாறும் புகழேந்தியார் இத்தகையர் என்பது எனக்குத் தெரியாது. அவர் கற்றும் கல்லாதவர் என்றே கூறவேண்டும். அப்படியாயின்

தங்கள் மனக்கவலை தீர நான் அவரை என்ன செய்தல் வேண்டும்?'' என்று கேட்டான்.

ஒட்டக்கூத்தர் அவனைநோக்கி, "அரசிளங்குமர! என் இஷ்டப்படி நீ புகழேந்தியை நடத்துவீரா ?'' என்று கேட்டார்.

"ஆகா, தடையில்லாமல்! எங்கள் முன்னோர்களின் மீது நான் முன்னமே ஆணையிட்டிருப்பது தங்கள் நினைவில் இருக்கலாமே?'' என்றான்.

"நல்லது, போலிப் புலவர்களை நாம் அடைத்து வைத்துள்ள சிறைச்சாலையில் நாம் அவனை அடைத்து வைத்து அவனுக்கு அரைவயிறு ஆகாரம் கொடுத்து வருதல் வேண்டும் என்பது என்கருத்து ; அக்கருத்தை நீ நிறைவேற்றல் வேண்டும்'' என்று கூறினார் ஒட்டக்கூத்தர்.

கூத்தர் மொழிகளைக் கேட்ட குமாரகுலோத்துங்கன் சற்று ஆலோசித்தான். ஆயினும், அவர் இஷ்டத்தை மறுப்பதற்கு அஞ்சியும், தன்னுடைய ஆணையை நினைத்தும், ஒட்டக்கூத்தர் இஷ்டப்படியே புகழேந்தியாரைப் புலவர் சிறைக்கோட்டத்தில் புகுத்தி விடுவதாக வாக்களித்தான்.*

---

*குமார குலோத்துங்கன் பாண்டிநாடு சென்று பாண்டியன் மகளை மணந்துகொண்ட பிறகு, பாண்டியன் தன் மகளுக்குச் சீதன மாகப் பல பொருள்களை முன்னதாக அனுப்புகையில், புகழேந்திப் புலவரையும் உடன் சேர்த்தனுப்பினன் என்றும், சீதனப் பொருள்களோடு வந்த புகழேந்தியாரை, அவர் தம்மைப் பாண்டியன் சபையில் கண்டித்துப் பேசியமைக்காகச் சீற்றங்கொண்டு, ஒட்டக்கூத்தர் தாமே சிறைப் புகுத்தியதாகவும் கூறுவர் ஒரு சாரார்.

# பன்னிரண்டாம் அத்தியாயம்

## கூத்தரின் பெருமிதம் அழிதல்

ஒட்டக்கூத்தர் சோழனிடத்தில் கவிபாடிப் பரிசு பெற்றுப் போகவரும் புலவர்களை, அப்புலவர்கள் தங்கள் பெயருக்கேற்பக் கல்வியிற் சிறந்தவர்கள்தாமா என்று பரிசோதிப்பது வழக்கம். எல்லோரும் கல்வியிற் சிறந்தவர்களாய் இருக்க முடியுமா? கல்வியிற் குறைந்தவர்களாகக் காணப்படுபவர்களை அரசனுடைய அநுசரணையின்மேல் பிரத்தியேகமான ஒரு சிறைச்சாலையில் அடைத்துவைத்து, நவராத்திரியின்போது அவர்களை இரண்டிரண்டு பேராகச் சேர்த்துக் குடுமிகளை ஒன்றோடொன்று பொருந்த முடிந்து குனியவைத்துக் காளிக்குக் கடாக்களைப் பலிகொடுப்பதுபோல் ஒட்டக்கூத்தர் வெட்டிவிடுவது வழக்கம்*. திறமையில்லாதவர்கள் தங்களைத் திறமையுடையவர்கள் என்று கூறிக்கொள்வது தவறாயினும், அவர்களுக்கு இத்தகைய தண்டனை விதிப்பது கொடுமையினும் கொடுமையன்றோ? நிற்க.

நாம் மேலே கூறிய சிறைச்சாலையில்தான குமாரகுலோத்துங்கன் புலவர் புகழேந்தியாரைச் சிறைப்படுத்தினன். புலவர் புகழேந்தியார்,

> “ஆவது விதியெனின் அனைத்தும் ஆயிடும்
> போவது விதியெனின் எவையும் போதுமால்

---

*பின்வரும் செய்யுளால் ஒட்டக்கூத்தர் போலிப் புலவர்களின் தலைகளை வெட்டிவந்தாரென்பது தெள்ளிதின் விளங்குகின்றது :—

> “துட்டுதற்கோ பிள்ளைப் பாண்டிய னிங்கில்லை
> துறும்பி யளவாக் காதைக் துடைந்து தோண்டி
> யெட்டினமட் டறுப்பதற்கோ வில்லி யில்லை
> யிரண்டொன்று முடிந்துதலை யிறங்கப் போட்டு
> வெட்டுதற்கோ கவியொட்டக் கூத்த னில்லை
> விளையாட்டாக் கவிதைதனை விரைந்து பாடித்
> தெட்டுதற்கோ அறிவில்லாத் துரைகளுண்டு
> தேசமெங்கும் புலவரெனத் திரிய லாமே” (29)

தேவருக் காயினும் தீர்க்கத் தக்கதோ!
ஏவரும் அறியொணு ஈசற் கல்லதே!" (30)

என்னும் கருத்தையும்,

"ஊழிற் பெருவலி யாவுள மற்றென்று
சூழினும் தான்முந் துறும்" (31)

என்னும் கருத்தையும் எண்ணி மௌனமுற்ருர்.

நமது புலவர் புகழேந்தியார் அச்சிறைச்சாலையில் புகுந்த பொழுது, அதற்குமுன்னரே அங்கு ஒட்டக்கூத்தரால் அடைக்கப்பட்டிருந்த புலவர்களிற் சிலர் அவரைப்பார்த்து, "ஐய, நாங்கள்தான் கல்வியில் குறையுடையோம் என்று ஒட்டக்கூத்தன் எங்களை இவ்வாறு செய்தான். உங்களை எக்காரணம் பற்றி இங்கு அனுப்பினன்? நீங்கள் புலவரிற் சிறந்த பெரும் புலவான்ருே? ஐயோ, அந்தப் பாதகன் ஒட்டக்கூத்தன் எங்களை வருகிற நவராத்திரியின்போது வெட்டிவிடுவானென்பது திண்ணம். அப்போது உங்களையும் அவன் யாது செய்வானே நாங்கள் அறியோம்'' என்று விசனித்தார்கள்.

அதைக் கேட்ட புகழேந்தியார் தாம் சிறைச்சாலைக்குள் வரும்படி நேர்ந்த காரணத்தைக் கூருது அவர்களைப் பார்த்து, "புலவீர், வருகிற நவராத்திரியன்று ஒட்டக்கூத்தர் உங்களை வெட்டிவிடா வண்ணம் நான் உதவி செய்கின்றேன். அதற்காக நீங்கள் வருந்துதல் வேண்டா. 'முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்' என்பது நீங்கள் அறியாததும் அன்றே?'' என்று கூறினர்.

உடனே அப் புலவர்கள் புகழேந்தியாரை அன்புடன் நோக்கி, "ஐய, நீங்கள் எங்களைக் காப்பாற்ற வந்த தெய்வமென்று நினைக்கிருேம். நீங்கள் மனம் வைத்தால் நாங்கள் உயிர்தப்பக் கூடுமென்பது திண்ணம். தயவு செய்து இப்போது கூறியபடி எங்கள் உயிர்தப்புவதற்கு வேண்டியதைச் செய்யுங்கள்'' என்று கண்களில் நீர்வடிய வேண்டிக்கொண்டார்கள்.

புகழேந்தியார் அவர்களைப் பார்த்து, "நான் சொல்லுகிற படி நீங்கள் செய்வீர்களானால் நீங்கள் உயிர்தப்பலாம்" என்று கூறினார்.

அதைக் கேட்ட புலவர்கள், "அறிவிற் சிறந்த பெரியீர்? தாங்கள் கூறுவது யாதானாலும் நாங்கள் செய்யத் தயாராய் இருக்கின்றோம்" என்று தழுதழுத்த குரலிற் கூறினர்.

அவர்கள் துன்பத்தைக் கண்ட புகழேந்தியார் பின்னும் மனமிளகி அவர்களைப் பார்த்து, "புலவர்களே, இன்றுமுதல் நான் உங்களுக்கு இலக்கிய இலக்கணங்களைப் போதித்து எப்படிப்பட்ட செய்யுள்களையும் மிக வெளிதாகப் பாடும்படியான சக்தியை உண்டாக்கிவிடுகிறேன். நீங்கள்மட்டும் இன்றுமுதல் நான் சொல்லிக் கொடுப்பதைப் படித்துக் கொண்டு வாருங்கள்" என்று கூறி அன்று முதல் அவர்களுக்கு அவசியமான கல்வியை விரைவாகப் போதித்து வந்தார். ஆ! இப் புகழேந்தியாரின் பெருங்குணமே குணம்!

தங்குறைதீர் வுள்ளா ர்தளர்ந்து பிறர்க்குறூஉம்
வெங்குறைதீர்க் கிற்பார் விழுமியோர்—திங்கள்
கறையிருளை நீக்கக் கருதா துலகில்
நிறையிருளை நீக்குமேல் நின்று (32)

என்னும் பாட்டின் கருத்து இவருக்கு மிகப் பொருத்தமாக விருக்கிறதன்றோ? நிற்க.

ஒட்டக்கூத்தர் கட்டளைப்படி, புகழேந்தியாருக்கும் மற்ற புலவர்களுக்கும் ஏவலாளர்கள் அரைவயிற்றுக்கும் போதாத உணவை அளித்துவந்தார்கள். 'கற்றோர்க்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பு' என்னும் கருத்துப் பொய்த்துப்போகுமா? நமது புகழேந்தியார் படித்த பெரும்புலவர் அன்றோ? அவர் செல்லுமிடமெல்லாம் சிறப்பில்லாமற் போகுமா? ஆனால் சிறைக்கோட்டத்தில் என்ன சிறப்புண்டாகப் போகின்றது என்று நினைக்கலாம். அப்படியன்று..

அப்புலவர் பெருமான் தம்முடன் சிறையிலிருப்பவர்களுக்குக் கசடறக் கல்வியைக் கற்பித்து வந்ததோடும், இக்காலத்தில் பெண்களே பெரிதும் விரும்பிக் கேட்கும் நங்கைப் பாட்டாகிய அல்லியரசிமாலை, பவளக்கொடிமாலை, புலந்திரன் களவுமாலை முதலிய இன்னும் சில நூல்களை எளிதிற் பொருள் விளங்குமாறு இனிமையான ஓசையுடன் பாடிச் சிறைக்கோட்டத்தின் பக்கமாகத் தண்ணீர்க்குச் செல்லும் மகளிர்க்குச் சன்னல் வழியாகக் கொடுத்து, அவற்றிற்குப் பதிலாக அம்மகளிர் மனமுவந்து அளிக்கும் அளவுக்கு அதிகமான உணவுப் பொருள்களை அச்சன்னலின் வழியாகவே பெற்றுத் தாமும் தம்மோடிருப்பவர்களும் உண்டு, மிகுந்ததைச் சிறைக்கோட்டக் காவலாளிகளுக்குக் கொடுத்துவந்தனர். இதனால் சிறைக்கோட்டக் காவலாளிகளும் நமது புலவர் புகழேந்தியாரிடம் பெரிதும் அன்பு பாராட்டிக் கூடியவரையில் அவர்களிடம் அன்பாகவே நடந்து வந்தார்கள்.

இவ்வாறு புகழேந்தியார் சிறைக்கோட்டத்தில் தமது காலத்தை இனிமையாகக் கழித்துக்கொண்டு ஆசிரியர் தொழிலையும் நடத்தி வந்தார். அவரிடம் கல்வி கற்றுவந்தவர்கள் கற்பூரம்போல் தீவிர சக்தி வாய்ந்தவர்களாய்க் கல்வியைக் கற்று உள்ளபடியே தேர்ந்த வித்வான்களானார்கள்.

இஃதிங்ஙனமிருக்க, மெல்லமெல்லப் பல நாட்கள் கழிந்து தேவி கொலுவிருக்கும் நவராத்திரி தினம் வந்தது. அன்று காலையில் அரசன் குமார குலோத்துங்கன் ஒட்டக்கூத்தரோடு ஊரைச்சுற்றிப் பவனிவந்தான். அவன் புகழேந்தியார் இருக்கும்* சிறைக்கோட்டத்தின் வழியாக வரும்

---

* தனக்குக் கலியாணமான பிறகு பொங்கல் அன்று அரசன் பவனி வந்து புகழேந்தியாரைக் கண்டானென்றும் சிலர் கூறுவர். சிலர் குமார குலோத்துங்கன் மணமகளோடு தன் நகரை யடைந்து ஊர்வலம் வருகையில் அதைக் காண மாடிமீதிருந்த புகழேந்தியாரைக் கண்டானென்றும் கூறுவர்.

போது புகழேந்தியார் சிறைக்கோட்டத்தின் மேன்மாடியில் நின்றுகொண்டிருந்தார். அவரைக் கண்ட குமார குலோத்துங்கன் அவரை ஒட்டக்கூத்தருக்குச் சுட்டிக்காட்டி, "ஐய, இதோ சிறைக்கோட்டத்தின் மேன்மாடியிலிருக்கும் புகழேந்தியார் கல்வியிற் தேர்ந்த பெரும் புலவரல்லரோ?" என்று கேட்டான்.

அவ் வார்த்தையைக் கேட்ட ஒட்டக்கூத்தர் பொறாமையுற்று, "வேங்கைப் புலிக்குமுன் மான் நிற்குமா? எரிகின்ற சுடுநெருப்புக்குமுன் சாரமற்று உலர்ந்த மரக்காடு நிற்குமா? கடற் சுறவுக்கு முன் மற்றச் சிறுமீன்கள் நிற்குமா? சூரிய உதயத்திற் பனி நிற்குமா? அப்படிக் கல்வியில் வல்ல எனக்கு முன் இவன் நிற்கமாட்டுவானோ?" என்னும் கருத்தையுடைய,

"மானிற்கு மோவந்த வாளரி வேங்கைமுன் வற்றிச்செத்த
கானிற்கு மோவவ் வெரியுந் தழன்முன் கனைகடலின்
மீனிற்கு மோவந்த வெங்கட் சுறவமுன் வீசுபனி
தானிற்கு மோவக் கதிரோ னுதயத்திற் றார்மன்னனே" (33)

என்று ஒரு பாடலைப் பாடினார்.

அப்பாடல் புகழேந்தியாரின் காதில் ஒரு எழுத்தும் பிசகாது கேட்டது. அதைக் கேட்ட புகழேந்தியார், "இந்த ஒட்டக்கூத்தருடைய கல்வித்திறம் நமக்குத் தெரியாதா? என்னிடம் படித்துள்ளவர்களில் ஒருவரே இவர் வாயையடக்கி விடுவாரே! ஏது மறியாத இவ்வரசனை இவர் எல்லாம் தெரிந்தவரைப்போல் ஏமாற்றி வருகிறார்" என்று தம் மனத்துள் எண்ணிக்கொண்டு யானைமேலிருக்கும் அரசனைக் கூவியழைத்து, அவனை நோக்கி, "இப்போது ஒட்டக் கூத்தர் தம் புகழ் தோன்றும்படி பாடிய பாட்டை யான் வெட்டிப் பாடவோ? அல்லது ஒட்டிப் பாடவோ?" என்று கேட்டார்.

அரசன் ஒட்டக்கூத்தர் தமது ஆசிரியராகையால் அவர் பாடலை வெட்டிப் பாடுதல் கூடாது என்றெண்ணிக்கொண்டு புகழேந்தியாரைப் பார்த்து, "வெட்டிப் பாடவேண்டா; ஒட்டியே பாடுக" என்று கூறினன்.

உடனே புகழேந்தியார், "வேங்கைப்புலி நான், ஒட்டக்கூத்தர் மான்; நெருப்புநான், சாரமன்று உலர்ந்த மாக்காடு ஒட்டக்கூத்தர்; ஓயாமற் சப்தமிடுகின்ற சமுத்திரத்திலுள்ள சுறுமீன் நான், சிறுமீன் ஒட்டக்கூத்தர்; நான் சூரியன், ஒட்டக்கூத்தரே பனி" என்னும் கருத்துத் தோன்ற,

"மானவ னானந்த வாளரி வேங்கையும் வற்றிச் செத்த
கானவ னவ்வெரியுந் தழலுங் கனைகடலின்
மீனவ னானந்த வெங்கட் சுறவமும் வீசுபனி
தானவ னைக் கதிரோ னுதயமுந் தார்மன்னனே!" (34)

என்று ஒட்டக்கூத்தர் பாடலை யொட்டி ஒட்டக்கூத்தரை அவமானப்படுத்திப் பாடி முடித்தார்.

அப்பாடலைக் கேட்டவுடன் அரசன் புகழேந்தியாரின் கல்வித்திறமைக்கு மெச்சி ஒட்டக்கூத்தர் முகத்தை உற்று நோக்கினன். அதைக் கண்ட ஒட்டக்கூத்தருக்குப் புகழேந்தியார் மேல் ஏற்பட்ட பொறாமை பின்னும் வளருவதாயிற்று. அதைக் கூத்தர் வெளிக்குக் காட்டிக்கொள்ளாமல், அரசனை அங்கிருந்து தந்திரமாக அழைத்துச் சென்றார். அவரிடம் தனக்கிருந்த மதிப்பினால் அரசன் புகழேந்தியாருக்கு ஒரு நன்மையும் செய்யாமலே போய்விட்டான்.

வழக்கம்போல் நவராத்திரி கொண்டாட்டத்தை அரசன் குமார குலோத்துங்கன் ஒன்பது நாள் வரையில் அதிவிமரிசையாக நடத்திவந்தான். பத்தாம் நாளாகிய விஜயதசமியன்று தேவியின் முன்னே சிறைக்கோட்டத்தி லிருக்கும் புலவர்களை ஒட்டக்கூத்தரிஷ்டப்படி பலிக்கொடுக்க எத்தனித்தான். அதனால் தேவியின் முன்னே இரண்டு ஆசனங்கள் கொண்டு வந்து போடப்பட்டன. அவ்வாசனங்களில் ஒட்டக்கூத்தரும் குமார குலோத்துங்கனும் கையில் வாளை உருவிப் பிடித்தவண்ணம் ஏறி உட்கார்ந்தனர்.

உடனே ஒட்டக்கூத்தர், "சிறைக் கோட்டத்திலிருக்கும் புகழேந்தியைத் தவிர மற்றப் புலவர்களை யெல்லாம் ஒருவர்பின் ஒருவராகப் பலியிடக் கொண்டு வாருங்கள்" என்று அருகிலிருந்த கொலையாளர்களிடம் கூறினார்.

கூறலும் கொலையாளர் விரைந்து சென்று, சிறைக் கோட்டக் காவலர்களிடம் செய்தியைக் கூறினர். காவலாளர் சிறைக்கோட்டத்தின் கதவைத் திறந்து விட்டனர். கொலையாளர்களைக் கண்ட புலவர்கள் விஷய முணர்ந்து புகழேந்தியாரைப் பார்த்து வருந்தினர்.

புகழேந்தியார் அவர்களை நோக்கிப், "புலவீர்! யானையின் வலிமை யானைக்குத் தெரியா தென்பது உங்கள் விஷயத்தில் உண்மையாகத் தோன்றுகிறது. இப்போது நீங்கள் ஒட்டக்கூத்தர் கேட்கும் கேள்விகளுக்குத் தக்கபடி பதில் சொல்லத் திறமை வாய்ந்திருக்கின்றீர்கள். அவ்வாறிருக்க நீங்களேன் அஞ்சுதல் வேண்டும்? தைரியத்தைவிட்டு விடாதீர்கள். தெய்வம் உங்களைக் காக்கும்" என்று கூறி மிகுந்த தைரியசாலியும் குலத்திற் குயவனுமான ஒரு புலவனை முதலில் ஒட்டக்கூத்தரிடம் அனுப்பினார்.

அப் புலவன் சிறிது மஞ்சாது ஒட்டக்கூத்தர் எதிரில் போய் வெகு கம்பீரமாக நின்றான். அவனைக் கண்ட ஒட்டக்கூத்தர் தம்மை மத யானைபோலும் அவனைச் சிறிய முயற்குட்டிபோலும் தம் மனத்தில் எண்ணிக் கொண்டு, "மோனை யெதுகை முதலிய தொடையும், தொடை விகற்பமுடைய வெண்பா, அகவற்பா, கலிப்பா வஞ்சிப்பா என்னும் பாக்களும், தாழிசை, துறை, விருத்தம் என்னும் அவற்றின் இனமும் ஆகிய யாப்பினை உள்ளிட்ட இயல், இசை, நாடகமென மூவகைப்பட்ட தமிழாகிய மும் மதங்களைப் பொழிகின்ற இந்தக் கவியானைக்குமுன் அச்சஞ் சிறிது மின்றி வந்து எதிர்த்து நிற்கின்ற நீ யாரடா?' என்னும் கருத்தை யமைத்து,

"மோனை முத்தமிழ் மும்மத மும்பொழி
யானை முன்வந் தெதிர்த்தவ னாடா!" (35)

என ஒரு பாட்டின் ஈரடிகளால் ஒரு கேள்வியைக் கேட்டனர்.

அதற்கு அப்புலவன், "நான் கூனையும், குடத்தையும், குண்டு சட்டியும் பானையும் பண்ணுகின்ற" குசப்பையல்" எனவும், சிலேடையால், "தற் புகழ்ச்சியாக யானையென்று சொல்லுகின்ற உன்னுடைய மதத்தை அடக்குகின்ற அங்குசப்பையல் (பாகன்) எனவும் பொருள் படும் கருத்தையுள்ளடக்கி,

"கூனையுங் குடமுங் குண்டு சட்டியும்
பானையும் பண்ணும் அங்குசப் பையல்யான்" (36)

என ஒட்டக்கூத்தர் கேட்ட கேள்விக்குப் பதிலாக மற்றிரண்டடிகளைப் பாடி அப் பாட்டை முடித்தனன்.

அவனது திறத்தைக் கண்ட ஒட்டக்கூத்தர் திடுக்கிட்டு "இவன் அசாத்தியனாகவன்றோ காணப்படுகிறான்? ஆகையால் நீதியின்றி இவன் தலையை யெப்படித் துணிப்பது?" என்று தம்முள் எண்ணி அப்புலவனை அங்கொருபுறம் நிறுத்திவிட்டு, மற்றொரு புலவனை அழைத்து வரும்படி கொலைஞனிடம் கூறினார்.

உடனே கொலையாளி சிறைக்கோட்டம் சென்றான். குயவன் பிழைத்தானென்பதை அக்கொலையாளியால் அறிந்த புகழேந்தியார் சந்தோஷமுற்று ஜாதியில் நாவிதனும் ஒருகண் குருடுபட்டவனுமாகிய மற்றொரு புலவனை ஒட்டக்கூத்தரிடம் செல்லுமாறு அனுப்பினார். புலவன் கல்வியில் தேர்ந்தவனாயினும் தைரியமில்லாதவனாகையால் நடுங்கிக் கொண்டே போய் ஒட்டக்கூத்தர் எதிரே நின்றான்.

அவனைக் கண்ட ஒட்டக்கூத்தர் "அடா பொட்டைக் கண்ணா! என்னைக் கண்ட உடனே வல்லூறென்னும் பறவையைக் கண்ட கொக்கைப்போலக் கைகால் நடுக்கமுற அச்சத்துடனே இங்குவந்து நின்றநீ யார்?" என்னும் பொருள் பட,

"விண்பட்ட கொக்குவல் லூறுகண் டென்ன
விலவிலக்கப்
புண்பட்ட நெஞ்சொடு மிங்குநின் றப்பொட்டை
யாய் புகல்வாய்" (37)

என்று ஒருபாட்டிற் பாதியைக் கூறி, "அடே! இப்போது நான் பாடிய இப்பாட்டிற்கு உத்தரமாக மற்றப் பாதி பாட்டையும் சொல்; நீ கவிபாடுகின்ற திரத்தைப் பார்க்கலாம்" என்றார்.

உடனே நாவிதன் சிறிது துணிவுற்று, "இந்த ஒட்டக் கூத்தர் நம்மை என்ன செய்தாலும் செய்யட்டும்; தலைக்கு மிஞ்சின தண்டனையில்லை யாகையால் இதற்குப் பதிலளிப்போம்" என்று கருதி, "நான் ஜாதியில் அம்பட்டன். எனக்குக் கண்ணும் பொட்டை. ஆனாலும் பாவாணர்களுக்கு முன் சிறிதும் சங்கையின்றிச் செம்பாகமான சந்தங்களையுடைய தமிழ்ப்பாடல்களை நீயும் நடுக்கிடும்படி பாடுவேன்" என்னும் கருத்தமைத்து,

"கண்பொட்டை யாயினு மம்பட்ட னென்கவி
வாணர்முன்னே
பண்பட்ட செந்தமிழ் நீயுந் திடுக்கிடப்
பாடுவனே" (38)

எனக் கூத்தர் எடுத்த பாட்டைத் தொடுத்து முடித்துக் காட்டினன். பின்பு ஒட்டக்கூத்தர் மனமுளைந்து, "இவன் தன்னுடைய இயற்கையான கர்வத்தைக் காட்டிவிட்டான்" என்று தம்முள் நினைத்துக் கொண்டு, அவனை வெட்டாமல் ஒருபுறம் நிறுத்தி விட்டு வேறு ஒருவனை அழைத்துவரும் படி கட்டளையிட்டார்.

உடனே, ஏவலாளர்கள் சென்று ஒருவனை அழைத்து வந்தார்கள். அவன் ஜாதியில் கருமான்; கல்வியில் தேர்ந்தவன்.

அவனைக் கண்டவுடன் ஒட்டக்கூத்தர் மற்றவர்களிடம்

பாட்டுப்பாடிக் கேள்வி கேட்டதுபோல் கேளாமல் வாய்ப் பேச்சாகவே, "நீயார்? உன் பெயர் என்ன? உன்னுடைய கௌரவம் எத்தகையது? நீ எச்சாதியான்? நீ முதலில் இங்கு வந்தபோது பிழைபடப் பாட்டுகளைப் பாடினையல்லவா? அப்படிப் பாடலாமா? சொல்" என்று கூறினார்.

அக்கருமான், அவரைப் பார்த்து, "நான் செல்லப்பாசாரி என்பவரின் மகன். என் பெயர் திருவேங்கடாசாரி என்பது. நான் உலகுக் கெல்லாம் குருவாயிருக்கின்றவன். என்குலம் மனு, மய, சிற்பி, த்வஷ்ட, விஸ்வ என்னும் ஐந்தனுள் விசுவ குலமாகும். நான் எள்ளத்தனையும் குற்றமின்றிப் பாடுகிற பாட்டைக்கொண்டு, "வாய் புளித்ததோ, மாங்காய் புளித் ததோ" என்று வாய்க்கு இலேசாக நீர் குற்றங்கூற வந்தீர். இவ்வாறு என் பாட்டைச் சுட்டி வீணைகக் குற்றஞ் சொல்லு கிறவர்களை நான் வறிதே விடமாட்டேன்; என் கைக்கருவி யாகிய குறட்டைக்கொண்டு பதினாறு பற்களையும் பிடுங்கிப் பருந்தாட்ட மாட்டிப் பகையாளிகள் எல்லோரும் பார்த்துச் சிரிக்கும் வண்ணம் அவர்கள் கண்களுக்கு முன்னே இரவி லும் பகலிலும் ஒய்வில்லாமல் கவியாகிய இருப்பாணிகளைக் கொண்டு அடிப்பேன்" என்னுங் கருத்தையுடைய,

"செல்வன் புதல்வன் திருவேங் கடவன் செகத்துருவாங்
கொல்லன் கவியைத் துறைசொல்லு வோரைக் குறடுகொண்டு
பல்லைப் பிடுங்கிப் பருந்தாட்ட மாட்டிப் பகைவர்முன்னே
யல்லும் பகலும் அடிப்பேன் கவியிருப் பாணிகொண்டே."

என்னும் பாடலைப் பாடினான்.

அதைக்கேட்ட ஒட்டக்கூத்தர் ஆச்சரியமடைந்து, "'தன்னைப் புகழாத கம்மாளன் இல்லை,' என்பதை இவன் உண்மைப்படுத்தினான்," என்று எண்ணிக்கொண்டு அவனை யும் ஒருபுறம் நிறுத்திவிட்டு வேறு ஒருவனை அழைத்து வரும்படி கூறினார்.

கொல்லன் சென்று பின்னும் ஒரு புலவனைக் கொண்டு

வந்து ஒட்டக்கூத்தர் முன் நிறுத்தினன். அப்போது வந்தவனும் பெரும் புலவனே. அவன் வேளாள குலத்தினன்.

ஒட்டக்கூத்தர் அவனை விளித்து, "பெருமை பொருந்திய கவீஸ்வரனுகிய என்னைப் போன்றவர்களுக்கு முன்னே அற்பனுகிய நீயும் புலவன் என்று வெளிப்பட்டு, 'ஞானியார் ஆடும் திருக்கூத்தோடு நானும் ஆடுகிறேன்,' என்பது போல் கவிபாட வந்தாயே! இது வெட்கக் கேடான காரியமன்றோ?" என்று மிகுந்த பெருமிதத்துடன் கேட்டார்.

அதைக் கேட்ட வேளாளன் ஒட்டக்கூத்தரை உற்றுப் பார்த்து, "இந்தப் பூமண்டலத்தை ஒரு குடை நிழலில் அடக்கி ஏகாதிபத்தியஞ் செலுத்தி வருகின்ற சக்கரவர்த்தியைக் கண்டு, மற்ற ஐம்பத்தாறு தேசத்தரசர்களும், 'நாம் எவ்வளவு பூமிக்குரியோம்? நாம் இவனுக்கெதிரியாக ஆட்சி புரிவது தகுதியன்று?' என்று தத்தம் தேசங்களைக் கைவிட்டுக் கடலிலே போய் விழுந்து மாண்டுபோனார்களா? தடாகத்தில் தோன்றிய மிகச் சிறந்ததும், ஸ்ரீ மகாலட்சுமிக்கு வாசஸ்தானமானதுமாகிய தாமரை மலரைக் கண்டு அதனருகிலிருக்கும் அற்பமாகிய கொட்டியும் மலராமல் இருக்கின்றதா? அப்படி எழுவகைத் தீவுகளையும் பரிபாலனம் பண்ணுகின்ற சோழமன்னரின் சமஸ்தானக் கவி சிரேஷ்டராகிய ஒட்டக்கூத்தரே! நீர் சொல்வன்மையும் பொருள் நுட்பமும் உடையதாகக்க ருதிப் பாடுகின்ற பாடலைக் கண்டு என்போலும் சொற்பமாகிய கவிகளைப் பாடுகின்ற புலவர் பலரும் பயந்து பாடாமல் ஓடி ஒளிவார்களா? சொல்லுங்கள்" என்னும் கருத்துடைய,

"கோக்கண்டு மன்னர் திரைகடல் புக்கிலர் கோகனதப்
பூக்கண்டு கொட்டியும் பூவா தொழிந்தில பூதலமேழ்
காக்கின்ற மன்ன கவிஞொட்டக் கூத்த! நின் கட்டுரையாம்
பாக்கண் டொளிப்பர்க ளோதமிழ் பாடிய பாவலரே?"

என்னும் ஒரு பாட்டைப் பாடி முடித்தான்.

பின்னும் அப்புலவன், "இவ்வொட்டக் கூத்தன் சோழனுக்கு ஆசிரியனாய் இருப்பதுபற்றிச் சோழன் இவனை மிகவும் பெருமையாகத் தன் சிங்காதனத்திற்கு மேல் உயர்ந்த ஓர் ஆசனத்தில் உட்காரவைத்து இவனுக்குப் பெருமிதத்தை உண்டுபண்ணுகிறான். அதனால் இவன் 'குப்பையில் முளைத்த கொடி கூரைமேல் ஏறுவதுபோல்' தன்னை அதிக கௌரவமுடையவனாக நினைத்துக்கொண்டு கர்வித்து, 'அதிகாரி வீட்டுக் கோழிமுட்டை குடியானவன் வீட்டு அம்மியையும் உடைக்கும்,' என்பதற்கேற்ப நம்மையெல்லாம் ஒரு பொருளாக மதியாமல் மரியாதை தாழ்வாக நடத்துகிறான். ஆகையினால் இவனை இச்சபையிலே அவமானப்படுத்த வேண்டும். அதனால் என்ன வந்தாலும் சரிதான்," என்று தனக்குள் எண்ணிக்கொண்டு, ஒட்டக்கூத்தரைப் பார்த்து, "புலவரே, உலகத்தில் எப்படிப்பட்டவர்களுக்கும் தங்களுடைய குற்றம் தெரிகிறதே இல்லை; அதைக்குறித்து அரசனானவன் முன்னர்த் தன்னிடத்துள்ள குற்றத்தைக்கண்டு அதனைப் பற்றறக்களைந்து பின்னர்ப் பிறரிடத்துள்ள குற்றத்தைக் கண்டு களையவேண்டும். அப்படிச்செய்தால் அவனைச் சிறிதேனும் குற்றமென்பது அணுகாது. அவன் எப்பொழுதும் நீதிமானாய் இருப்பானென்று சாஸ்திரமும் சொல்லுகின்றதே. அதை நீங்கள் ஆராய்ந்து அறியவில்லையோ?" என்று கேட்டான்.

ஒட்டக்கூத்தருக்கு அதைக் கேட்டவுடன் அளவற்ற ஆத்திரம் உண்டாக, அவர் அவ்வேளாளனைப் பார்த்து, "அடா நீ எமக்குச் சட்டக்கல்வி ஓதவந்தனையோ? நீ சொல்லுகிறதை யோசிக்குமிடத்து, 'முண்டையைப் பிடித்த கண்டமாலை முருங்கையையும் கூடப்பிடித்தது' என்பது போல, யாம் தப்புப் பாட்டுப் பாடி இருக்கிறதாக வல்லவோ காணப்படுகின்றது? நல்லது, எம்முடைய பாட்டில் நீ கண்ட பிசகென்ன? சொல்" என்று கோபித்துக் கேட்டார்.

அதைக் கேட்ட வேளாளன், "'அடங்காத பாம்பிற்கு அரசன் மூங்கிற்றடி,' என்பதனால் இவன் குற்றத்தை இவ

னுக்கு எடுத்துக் காட்டினால்தான் இவன் கொட்ட மடங்கும்'' என்று எண்ணிக்கொண்டு, ஒட்டக்கூத்தரைப் பார்த்து, "ஐயா, நீர் முன்பு சோழமகாராஜாவின்மேற் பாடிய அண்டத் துப்பரணியென்னும் பிரபந்தத்தில் இந்த பிரமாண்டத்தையே நகரமாகவும், இதைச் சுற்றியிருக்கின்ற சக்கரவாளக்கிரியை யே மதிலாகவும் அதற்கு உட்புறத்தில் இருக்கின்ற சப்த சமுத்திரங்களையே அகழ்களாகவும், பூமி மத்தியில் உள்ள மகமேருவையே கோட்டைக் கொடிக் கம்பமாகவும் உரு வகப்படுத்தி வருணித்திருக்கிறீ ரன்றோ? அகழானது புறத் தில் இருந்தாலல்லவோ, கோட்டைக்கு உறுதி? அகத்தில் இருக்கிறதாகச் சொல்லப்படுகின்றதே; அதனால் என்ன பயன்? இதுசரியோ? அப்படிச் சொல்ல வேண்டுமானால் அண்டத்துக் கப்புறத்திலுள்ள பெரும் புறக் கடலைச் சொல்லலாமே? கம்பர், இராமாயணத்தில் நகர வருணனையில்,

"நேமி மால்வரை மதிலாக நீள்புறப்
பாம மாகடல் கிடங்காகப் பன்மணி
வாம மாளிகை மலையாக மன்னற்குப்
பூமியு மயோந்திமா நகரம் போலுமே," (41)

என்னும் செய்யுளில் பெரும்புறக்கடலை அகழாகச் சொன் னதையாவது பார்க்கவில்லையா? அல்லது கேட்கவுமில்லை யா?'' என்று கேட்டான்.

உடனே ஒட்டக்கூத்தர் முகம் அக்கினி தேவனுக்கு அபிஷேகம் பண்ணியமாதிரிக் கறுத்து ஒளி இழந்தது. அவர் செய்வது இன்னதென்று தோன்றாமல் மனங்கலங்கி னார். பிறகு, "மற்றப் புலவர்களையும் அழைத்து ஏதாகிலும் கேட்போமானால் அவர்களும் இவனைப்போல் ஏதாவது சொல்லிவிட்டால் நமது மானம் போய்விடுமே'' என்று எண்ணி ஏக்கமுற்றனர். மறுபடியும் சிறிதுநேரம் வாய் பேசாது ஆலோசித்தார். "இம்முறை இப்புலவர்களை நாம் சிறைப்படுத்தினது சனியனை விலைக்கு வாங்கினது போல் ஆயிற்று. என்ன! இதுவரையில் நமது பெயரைக் கேட்ட வர்களெல்லோரும் இடியொலி கேட்ட நாகம்போல் நடுங்கி

வந்தார்களே! அவ்விதமிருக்க இப்போது இவர்களுக்கு இவ்வளவு தைரியமும் வல்லமையும் யாராலே யுண்டாயின? —ஆம்! அந்தப் புகழேந்தியென்பவனால்தான் உண்டாயிருக்க வேண்டும். அவன் இத்தகைய அற்ப மனிதர்களைக்கொண்டு நம்மை அவமானப்படுத்தினனல்லவா? இருக்கட்டும். நாம் அவனை உயிர்போமளவும் சிறையிலேயே கிடக்கும்படி செய்வோம். இப்போது இப்புலவர்களையெல்லாம் வீணாகச் சிறைப்படுத்தி வைப்பதனால் நமக்குப் பயன் என்ன?'' என்று தமக்குள்ளே நிச்சயித்துப் புகழேந்தியாரைத் தவிரச் சிறையிலிருந்த மற்ற எல்லாப் புலவர்களையும் ஒன்றாக வரவழைத்து, ''நீங்கள் உங்களிஷ்டப்படி உங்கள் தேசம் போய்ச் சேரலாம்'' என்று கூறி அவர்களுக்கு அரசனைக்கொண்டு சன்மானமும் செய்வித்து அனுப்பினார்.

அவர்களெல்லோரும் "நம்மைப் பிடித்திருந்த சனியன் இன்றோடு நிவர்த்தியாயிற்று. இதற்குக் காரணமாயிருந்த புகழேந்தியாருக்குக் கடவுள் துணையிருந்து அவரைக் காப்பாற்றவேண்டும்'' என்று தங்கள் மனத்தில் கடவுளைத் துதித்துக் கொண்டே போயினர்.

சிறைக் கோட்டத்திலிருந்த புகழேந்தியார், தம்முடைய நிலைமையைச் சிறிதும் கவனியாமல், மற்ற புலவர்கள் பரிசு பெற்றுத் தத்தம் நாட்டிற்குச் சென்றார்கள் என்பதைக் கேட்டுப் பெரிதும் சந்தோஷித்தார். இதுவன்றோ பெரியார் செய்கை!

> "தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
> காமுறுவர் கற்றறிந் தார்." (42)

என்னுந் தமிழ்மறை பொய்க்குமா?

# பதின்மூன்றும் அத்தியாயம்

## சிறைமீட்சி

புகழேந்தியார் சிறைக்கோட்டத்தில் இருக்கும் சமாசாரம் சில நாள் வரையில் குமார குலோத்துங்கன் மனைவியாகிய பாண்டியன் மகளுக்குத் தெரியாதிருந்து பிறகு ஒருநாள் எப்படியோ தெரிந்துவிட்டது. அதனால் அவள் மிகவும் கோபமுற்று அவர் சிறையில் அடைக்கப்பட்டதற்குக் காரணம் என்னவென்று ஆராய்ந்து உண்மையை அறிந்து வருமாறு ஒரு தோழியை யனுப்பினாள். அவள் சென்று நடந்த விஷயங்களைச் சரியாக அறிந்துவந்து அரசியிடங் கூறினாள். உடனே பாண்டியன் மகள், "நம்முடைய பிதாவின் சமஸ்தானப் பெரும்புலவரான புகழேந்தியாரை ஒட்டக்கூத்தரா சிறைப்படுத்தியிருக்கின்றார்? குடிகள் குற்றஞ்செய்தால் அவர்கள் குற்றத்தின் தன்மையை உணர்ந்து தண்டிக்க வேண்டிய அரசர் ஒட்டக்கூத்தருடைய ஒழுங்கீனமான செய்கைக்கு உடன்பட்டிருப்பது வருந்தத்தக்கதாகவன்றோ இருக்கிறது? இருக்கட்டும். 'கலகம் பிறந்தால் நியாயம் பிறக்கும்'' அன்றோ?'' என்று எண்ணிக்கொண்டு அன்று அரசன் தன் அரண்மனைக்கு வருகிற சமயத்தில் கதவைச் சாத்திவிடும்படி தன் தோழிக்குக் கட்டளையிட்டாள்.

பிறகு, சிறிதுநேரத்திற்கெல்லாம் தன் மனைவியின் அரண்மனைக்கு வந்த அரசன், கதவு சாத்தப்பட்டிருப்பதை அறிந்து, கதவைத் திறக்கும்படி வேண்டினான். கதவென்னவோ திறக்கப்படவில்லை. அது கண்ட அரசன் கதவைத் திறக்குமாறு பின்னும் கடிந்து கட்டளையிட்டான். ஒன்றும் பதிற் பேச்சில்லை. பின்பு அவன், "நமது மனைவிக்கு நம்மீது என்ன கோபம் இருக்கக்கூடும்? இவளுக்கு நாம் என்ன தவறுசெய்தோம்?'' என்று பலவாறு எண்ணினான். ஆனால் அவனுக்குக் காரணம் புலப்படவில்லை. கடைசியாக அவன் "நம்மனைவிக்கு நாமறியாதபடி ஏதேனும் தீங்கு செய்திருப்போம். அதனால் அவள் கோபித்துக் கொண்டிருக்கிறாள் என்று தெரிகிறது. இல்லாவிட்டால், அவள் இங்ஙனம் மௌனமாய் இருக்கமாட்டாளென்பது திண்ணம்,'' என்று எண்ணி அக்கால வழக்கப்படி, தன் சமஸ்தான புலவராகிய

ஒட்டக்கூத்தரிடம் போய்த் தன் மனைவியின் ஊடலைத் தீர்க்க வழிதேடுமாறு அவருக்குக் கூறினான். ஒட்டக்கூத்தர் பெண்களிடத்தில் இதமாக வசனிக்கவேண்டுமென்பதை முற்றும் மறந்து அரசனைப் பார்த்து, 'இதோ அரை நொடியில் கதவைத் திறக்கச் செய்கிறேன், பார்!' என்று கூறிவிட்டு, அரசன் மனைவியின் அரண்மனையைக் கிட்டி, வெளி நின்று, "தாமரை மலரில் பொருந்தியிருக்கின்ற தேன்போல் இனிக்கும் நயவசனத்தையுடைய லக்குமி போல்வாய்! கதவைத் திறந்துவிடு; திறவாதிருந்தாலோ, கோடையிடியிடித்தது போலப் பகைவர் நெஞ்சம் துணுக்குறும்படி புறங்கொடாமற் போர் செய்து வெல்கின்ற சுத்தவீரனும், உனது பிராணநாதனும், சூரியகுலத்தரசனும் ஆகிய சோழராஜன், உன்வாயில் தேடிவந்தால், அப்பொழுது சூரியனைக் காணுமல் முகங் குவிந்த தாமரை அச் சூரியன் உதயமாகக் கண்ட மாத்திரத்தில் தன்னியல்பாய் மலர்வதுபோல உனக்கொருவரும் இதஞ் சொல்லாமலே விரல்களாகிய இதழ்களையுடைய உன் கையாகிய தாமரை தனக்குத்தானே கதவைத் திறந்துவிடப் போகின்றது; அதைக் குறித்து நான் இனி யுன்னைப் பிரார்த்திக்கவேண்டிய நிமித்த மென்ன?" என்னும் கருத்தோடு,

"நானே யினியுன்னை வேண்டுவ தில்லை நளினமலர்த்
தேனே! கபாடந் திறந்திடு வாய்திற வாவிடிலோ
வானே றனைய விரவி குலாதிபன் வாயில்வந்தால்
தானே திறக்குநின் கைத்தல மாகிய தாமரையே' (43)

என்று மிகக் கடுமையாக ஒரு பாட்டைப் பாடினார்.

அந்தப் பாட்டைக் கேட்டவுடன் அதன் பொருளை அறிந்த சோழன் மனைவி பின்னுமதிக கோபங் கொண்டு, 'ஒட்டக்கூத்தர் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள்,' என்று சொல்லிக் கொண்டே சாத்தப்பட்டிருந்த கதவுக்கு மற்றொரு தாழ்ப்பாளிட்டாள். 'இன்சொலாலன்றி இருநீர் வியனுலகம் வன்சொலால் என்றும் மகிழாது' அன்றோ?

பின்பு, ஒட்டக்கூத்தர், திடுக்கிட்டு, 'இவள் இவ்வளவு

அதிகமாகக் கோபமுற்றிருப்பதற்குக் காரணம் எதுவாயிருக்கலாம்'' என்று ஆலோசித்தார். உடனே அவர், "ஓ, புகழேந்தியைச் சிறைக்கோட்டத்தில் அடைத்துவைத்திருப்பதே இவள் கோபத்திற்குக் காரணமாக இருக்கலாம். அதனால்தான் இவள் இவ்வளவு கோபங் கொண்டிருக்கிறாள் என்பது திண்ணம். ஆகையால், 'அன்பற்ற மாமியாருக்குக் கும்பிட்டாலுங் குற்றந்தான்' என்கிறபடி இனி நாம் இங்கிருந்து கொண்டு என்ன இதமான வார்த்தைகளைச் சொன்னாலும் இவள் மனம் இரங்கமாட்டாள்'' என்று எண்ணிக் கொண்டு அரசனிடம் போய் நடந்த விஷயத்தைக் கூறினார்.

அதைக் கேட்ட அரசன், "நான் எனது மனைவிக்குக் கோபம் வரும்படி யாதொரு தீங்கும் செய்யவில்லையே? அவள் கோபங்கொண் டிருப்பதற்குக் காரணமென்ன? அவள் பிரியப்படிதானே நடந்து வருகிறேன். அவளுக்குக் குணம் மாறிவிட்டதோ? இஃதென்ன கேடு! இருக்கட்டும். ஏதாவது ஒரு காரணம் பற்றி என்மீது அவளுக்குக் கோபமிருக்கலாம். ஒட்டக்கூத்தர் என்ன செய்தார்? அவரிடம் ஏன் அவள் அவ்வளவு கோபமாக நடந்துகொள்ள வேண்டும்?'' என்று இப்படியெல்லாம் ஆலோசித்தான்.

கடைசியாக அவன், "புகழேந்தியாரை ஒட்டக்கூத்தர் சிறைப்படுத்தினமையால் அவர் மீது அவளுக்கு அசூயையும், நாம் அவர் கருத்துக் கிணங்கினமையினால் நம்மேல் வெறுப்பும் விளைந்தன என்பது திண்ணம்'' என்று தீர்மானித்துக் கொண்டு உடனே சிறையிலிருந்த புகழேந்தியாரை வருவித்துத் தன் மனைவியின் கோபத்தை நீக்குமாறு அவரிடம் கூறினான்.

அப்புலவர் பெருந்தகை, "அப்படியே ஆகட்டும்,'' என்று அரசனிடங் கூறிவிட்டு அந்தப்புரத்திற்குச் சென்று, "இருபிளவாகப் பகிர்ந்த மெல்லியநூலின் ஒரு பிளவு போன்று நுண்ணிதாகிய சிற்றிடையையும், பொற்குழைகளை

ஏந்திய செவியைத் தொடுகின்ற இணைவிழிகளையும் உடைய தெய்வப் பெண்போல்வாய்! 'வானத்தினின்று பெய்யும் மழையினது வண்மை ஒரு கூறும்; இவனது கைவண்மை யோ அதற்கு இரு கூறும்' என்று யாவரும் அதிசயிக்கத் தக்க மிக்க வள்ளற்றன்மையையும் அபிமானமாகிய ஆபர ணத்தையுமுடைய சோழமகாராஜா உன்னுடைய வாயிலைத் தேடிவந்தால் அவர்மேல் என்ன குற்றமிருந்தாலும் அதைப் பாராட்டுவது பெருமையா? அவரை வாயிலுக்குள் பிர வேசிக்கவொட்டாமல் தடுப்பதும் தருமமா? உன்னைப்போல் உயர்குடியிற் பிறந்த கற்புக் கணிகலமாகிய உத்தமப் பெண் மணிகள் தம் உயிர்போற் சிறந்த கணவர்கள் செய்த ஒரு பிழை இரு பிழைகளைப் பொறுக்காமல் வன்மம் சாதிப்பார் களோ? தண்ணீருமன்றோ மூன்றுபிழை பொறுக்கின்றது? * நீ இவ்வொரு பிழை பொறுக்கலாகாதா? 'குற்றம்பார்க்கில் சுற்றமில்லை' என்று சொல்லப்படுகின்றதே. ஆதலால், இதைக் குறித்துச் சீற்றங்கொள்ளலாமா? 'நீராக்கோபம் போராய்முடியும்' என்பது உனக்குத் தெரியாததோ? கடல் கொதித்தால் அதன் கொதிப்பை யடக்கத் தண்ணீர் எங்கே? உன் சித்த மிரங்கி நீ கொண்ட கோபத்தை நீயே தணித் துக்கொள்ளவேண்டும்.'' என்னும் கருத்தை உள்ளமைத்து,

"இழையோன் றிரண்டு வகிர்செய்த நுண்ணிடை யேந்தியபொற்
குழையோன் றிரண்டு விழியணங்கே! கொண்ட கோபந்தணி
மழையோன் றிரண்டுகைம் மாறு பரணனின் வாயில்வந்தாற்
பிழையோன் றிரண்டு பொறாரோ குடிபிற் பிறந்தவரே" (44)

என ஒரு பாடலைப் பாடினார்.

இப்போது பாடியவர் புகழேந்தியார் என்பதை அறிந்த அரசி கதவைத் திறந்து தன் உயிர்த்தோழி யொருத்தியைக் கொண்டு ஆசனம் போடவைத்து அதன்மீது புகழேந்தி யாரை உட்காரச் செய்தாள். புகழேந்தியார் அவளையும் ஓர்

---

* தண்ணீர் மூன்றுபிழை பொறுத்தலாவது: குளத்திலாவது கிணற்றிலாவது விழுந்து அமிழ்ந்தவரை அந்நீர் மூன்றுமுறை மேலே கிளம்பச் செய்தலேயாம்.

ஆதனத்தில் உட்காரச் செய்து அவள் முகத்தைப் பார்த்தார். அப்பொழுதும் அவள் முகத்தில் கோபக்குறி நிரம்பி இருந்தது. அவர் அதற்குக் காரணம் என்னவென்று அவளைக் கேட்டார். அவள் அவரைப் பார்த்து, "இதுகாறும் அநியாயமாகத் தங்களைச் சிறைப்படுத்தி வைத்திருந்ததே என்னுடைய கோபத்திற்குக் காரணம். அக்கோபம் எனக்குத் தணியாது" என்று கூறினாள்.

புகழேந்தியார் அவள் சமாதான மடையும் வண்ணம் பல பல நன்மொழிகளைக் கூறினார்.

அவற்றைக் கேட்ட உடனே அவளுடைய கோபம் சூரியனைக்கண்ட பனிபோல் பறந்துவிட்டது. அவள் சாந்தமே ஓர் உருவெடுத்து வந்தவள்போல் ஆனாள். பிறகு புகழேந்தியார் அவளிடத்தில் உத்தரவு பெற்றுக்கொண்டு அரசனிடம் சென்று, "இப்போது உமது மனைவியார் சாந்தமுற்றிருக்கின்றார்" என்று கூறினார்.

உடனே அரசன் தன் மனைவியின் அரண்மனைக்குச் செல்ல அங்கு அவன் மனைவி அவனை வழக்கம்போல் உபசரித்தாள். அதைக் கண்ட அரசன் சந்தோஷப்பட்டு, "இவள் தன் தந்தையின் சமஸ்தான புலவராகிய புகழேந்தியாரை நாம் சிறைப்படுத்தினோம் என்று அல்லவோ கோபித்துக் கொண்டிருந்தாள்?" என்றெண்ணி அன்று முதல் புகழேந்தியாருக்கு யாதொரு குறையுமின்றி அவரைத் தம் அருகிலேயே வைத்துக்கொண்டு பாதுகாத்து வந்தான்.

# பதினான்காம் அத்தியாயம்

## உறையூரை நீத்தல்

அன்பில்லாதவர்களோடு கூடி வாழ்வதைவிடப் பகுத்தறிவற்ற மிருகத்தோடுகூடி வாழ்வதுமேலன்றோ? மனிதர்கள் எத்தகையராயினும் சரியே; அவர்கள் மட்டும் பிற உயிர்களிடத்தில் அன்புடையவர்களா யிருப்பின், அவர்கள் மாட்டு எவ்வுயிர்களும் அன்புபூண்டு வாழும். அன்பற்றவன் இடத்தில் எத்துணை நன்மைதான் ஒருவர்க்குக் கிடைக்கக் கூடுமாயினும் அது விரும்பத் தக்கதன்றே? அன்போடு செய்கிற காரியம் சாதாரணமா யிருப்பினும் அதுவே உயர்வுடையதாகும். அன்பின்றிச் செய்கிற காரியம் எவ்வளவு உயர்வுடையதாயினும் அது தாழ்வுடையதாகவே தோன்றும். இது பல்லார் அநுபவமன்றோ?

சோழன் குலோத்துங்கன், ஒட்டக்கூத்தரோடு புகழேந்தியாரையும் ஒப்பவைத்துக் கௌரவமாக நடத்திவரினும், அன்பில்லாத ஒட்டக்கூத்தர் இருக்குமிடத்தில் இருப்பதற்குப் புகழேந்தியாருக்குச் சிறிதும் சம்மதமில்லை. புகழேந்தியார் எது சொல்லினும் அதற்கு ஒட்டக்கூத்தர் குறுக்குச் சொல்லிக்கொண்டே வருவார். புகழேந்தியார் ஒரு விஷயத்தை உள்ளவாறு ஒழுங்காகக் கூறினாலும், பொறாமை காரணமாக ஒட்டக்கூத்தர் அவ்விஷயம் குற்றமுடைத்தென்று கூறி வாதமிடுவார். ஆனால் புகழேந்தியார் தாம் கொண்ட கருத்தே சரியென்று எல்லோரும் ஒப்புக்கொள்ளும்படி செய்யாமல் விடமாட்டார். இதனால் ஒட்டக்கூத்தருக்கும் புகழேந்தியாருக்கும் சச்சரவு நேரிடாத நாளே கிடையாது. இத்தகைய இடத்தில் தாம் வாழ்க்கை நடத்துவது நரகத்தில் இருந்து நன்மை பெறுவது போலப் புகழேந்தியாருக்குத் தோன்றியது.

அதனால், ஒருநாள் புகழேந்தியார், அரசனைத் தனிமையிற் கண்டு, "ஐய! தங்கள் சமஸ்தானத்தைவிட்டு நான் வெளியேற விரும்புகின்றேன். தாங்கள் அட்டியின்றி விடைதருதல் வேண்டும்," என்று கூறினார். அவர் அவ்

வாறு கூறலும், அரசன் திடுக்கிட்டு, அவர் அவ்வாறு கூறிய தற்குக் காரணம் என்னவென்று வினவினான்.

புகழேந்தியார், "காரணம் ஒன்றுமில்லை. எப்பொழுதும் ஒரு தூணில் இரண்டு யானைகளைக் கட்டுவது கூடாது. அதைப்போன்றே விரோதங்கொண்ட வித்வான்கள் இருவர் ஓரிடத்தில் இருப்பதும் பெருமையல்ல. ஏனெனில், அவ்விருவரில் எவரேனுமொருவர் பொறுமைக் குணமும் பெருநோக்கமில்லாத மனமும் உடையவராயின் அவரால் மற்றவர்க்கு அடிக்கடி மனவருத்தம் விளைகிறது. தாங்கள் அறிவிற் சிறந்தோராதலால் இப்பொழுது நான் கூறியவற்றிலிருந்து என் குறிப்பை யுணர்ந்திருப்பீர்கள்" என்று கூறினார்.

குமார குலோத்துங்கன், ஒட்டக்கூத்தருடைய நடத்தை பிடிக்காமற்றான் புகழேந்தியார் இவ்வாறு கூறுகின்றாரென்று அறிந்துகொண்டு, "புலவர் சிகாமணியே! தாங்கள் என்னுடைய அவைக்களத்தை விட்டு நீங்குவதற்குக் காரணமின்ன தென்பதை யுணர்ந்துகொண்டேன். யானோ, 'இருதலைக் கொள்ளி எறும்பு' போல் ஒட்டக்கூத்தருக்கும் உங்களுக்கும் இடையில் இருந்து செய்வது யாதென அறியாது விழிக்கின்றேன். நீவிர் பெரும் புலவர் என்பதும், அறிவிற் சிறந்தவர் என்பதும் நான் அறியாதனவல்ல. ஒட்டக்கூத்தரோ தந்தையில்லாத எனக்குத் தந்தையாகவும், ஆசிரியராகவும் இருந்து பல நன்மைகளைப் புரிந்திருக்கின்றார். அத்தகைய அவரும் நீங்களும் ஒருமனப்பட்டிராதது என்னுடைய துர்பாக்கியம் என்றே சொல்லுவேன். நான் தங்களைவிட்டுப் பிரிய ஒரு சிறிதும் சம்மதிக்கவில்லை. ஆகையால் நீங்கள் இந் நகரத்தைவிட்டுச் செல்லவேண்டும் என்னும் எண்ணத்தை விட்டுவிடுங்கள். இன்பமுந் துன்பமும் எங்கும் கலந்தே இருக்குமென்பதைத் தாங்கள் அறியாதவர்களன்றோ?" என்று கூறினான்.

அதைக் கேட்ட புகழேந்தியார், அவன் சமர்த்தாகப் பேசிய வார்த்தைக்கு மகிழ்ந்து, "அரசரேறே! தாங்கள்

கூறுவன எல்லாம் சரியே. ஒட்டக்கூத்தர் தகுந்த காரணமின்றி என்மீது கோபித்து வன்மம் சாதித்து வருகிறார்—" என்று கூறிக்கொண்டு வரும்போதே, குமார குலோத்துங்கன் அவர் வார்த்தையை இடைமறுத்து, "ஐய, நீங்கள் கூத்தர் உங்கள்மீது காரணமின்றி வன்மம் சாதிக்கின்றார் என்கிறீர்கள். அவர் உங்கள்மீது துவேஷம் கொண்டதற்குச் சில காரண மிருப்பதாக அவர் வார்த்தையிலேயே எனக்குத் தெரிந்தது. அவர் எனக்குப் பெண்பேசப் பாண்டிய நாட்டிற்கு வந்து அந்நாட்டரசரிடம் விவாக சம்பந்தமாகப் பேசிக்கொண்டிருந்தபொழுது அவர் பேசும் வார்த்தைகளுக்கெல்லாம் தாங்கள் குறுக்குச் சொல்லிக்கொண்டிருந்தீர்களாம். அதுவே அவர் தங்கள்மீது வன்மம் கொண்டிருப்பதற்குக் காரணம் எனத் தெரிகிறது!" என்று கூறினான்.

பின்பு புகழேந்தியார், சிறிது மனவருத்தத்தோடு குமார குலோத்துங்கனைப் பார்த்து, "அரசரே, அக்காரணம் பற்றித்தான் நான் இங்கு வந்தவுடன் அவர் என்னைச் சிறைச்சாலையிற் புகுத்தினார்போல் தெரிகிறது. அப்படித்தானே?" என்று கேட்டார்.

குமார குலோத்துங்கன் அவர் கேள்விக்குப் பதிலளியாது வாய்திறவாமல் தலைகுனிந்து மௌனம் சாதித்தான். அவன் முகத்தில் வெட்கக் குறியும் வருத்தக் குறியும் தோன்றின.

அரசன் வருந்துவதை யுணர்ந்த புகழேந்தியார், "மண்டலாதிபரே' நீர் வருந்தவேண்டா. எய்தவனிருக்க அம்பை நோவானேன்? நான் சிறைப்புகுந்ததற்கு ஒட்டக்கூத்தரல்லவோ காரணராய் இருந்திருக்கின்றார்? அவர் என்மீது வன்மம் கொண்டிருப்பதற்கு அவர் கூறியதாக நீர் கூறும் காரணம் பொருந்தாது. தன்னை ஆதரிக்கும் ஒருவன் முன் மற்றொருவனைப் பற்றி ஒரு புலவர் புகழ்ந்து பேசினால் அதைக் கேட்டுக்கொண்டு எந்தப் புலவனும் பேசாமல்

இரான், அவன் தன்னை ஆதரிப்பவனுடைய பெருமையை உள்ளது உள்ளவாறே யெடுத்துக்கூறித் தன் கடமை யைத் தீர்த்துக்கொள்ளுவான். நானும், அக்காரணம் பற்றி, ஒட்டக்கூத்தர் பெண்பேச வந்த காலத்தில் சில வார்த்தை பேச நேர்ந்ததேயன்றி. ஒட்டக்கூத்தர் நினைக்கின்றபடி அவர் வார்த்தைக்கெல்லாம் ஏதாவது மறுப்புச் சொல்லிக் கொண்டிருக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் நான் ஏதும் சொல்லவில்லை. ஒட்டக்கூத்தர் என்மீது தப்பபிப்பிராயம் கொண்டிருக்கிறதற்காக நான் வருந்துகின்றேன். ஆனாலும் ஒன்று நிச்சயமாக எனக்குத் தெரிகிறது. ஒட்டக்கூத்தர் என்மீது அழுக்காறு கொண்டிருக்கிறார் என்பது மட்டும் திண்ணம். ஆகையால், இனி இங்கிருப்பதற்கு நான் சிறிதும் சம்மதியேன். இப்படியெல்லாம் நான் கூறினே னென்று என்மீது கோபங்கொள்ளாமல் தயை செய்து என்னிஷ்டப்படி நான் எங்கேனும் போதற்கு எனக்கு உத்தரவு அளித்தல்வேண்டும்'' என்றார்.

அதன் பின்னும் அரசன் அவர் தன்னைவிட்டு நீங்கா வண்ணம் அவருக்குப் பல இனிய வசனங்களைக் கூறினான். புகழேந்தியார் அவற்றிற்குச் சிறிதும் இணங்காமல் தாம் அவ்விடத்தை விட்டுப் போகவேண்டுமென்றே கூறினார். கடைசியாக அரசன் மிக மனவருத்தத்தோடு அவருக்கு உத்தரவளித்தான்.

உடனே புகழேந்தியார் அந்தப்புரத்திற்குச் சென்று குமார குலோத்துங்கன் மனைவியாகிய பாண்டியன் மகளைக் கண்டு தாம் செல்லும் விஷயத்தைக் கூற நினைத்தார். பிறகு அவளிடத்திற் சொல்லிவிட்டுப் போவது சரியெனத் தோன் றாமையால், அவளிடம் கூறாமலே உறையூரைவிட்டுப் புறப் பட்டார்.

# பதினைந்தாம் அத்தியாயம்

## நளவெண்பாவைப் பாடியது

உறையூரை விட்டுப் புறப்பட்ட புகழேந்தியார் எங்குச் செல்வதென்று யோசித்தார். அவர் மனத்தில் பல எண்ணங்கள் எழுந்தன. "நாம் பாண்டியன் வரகுணனால் அவன் மகளுக்கு ஏற்ற தருணத்தில் நன்மதி கூறுவதற்காக அனுப்பப்பட்டோம். அக்கடமையைச் செய்யாது எங்கேனும் போவதும் அழகன்று; உறையூரிலிருப்பதும் உசிதமாகத் தோன்றவில்லை. மதுரைக்குச் செல்வோமென்றாலோ மன்னன் ஏதேனும் குறைவாக நினைத்தலுங்கூடும். ஆகையால், சோழ நாட்டிற்றானே யாராவது ஒரு சிற்றரசனிடமிருந்து காலத்தைக் கழித்துக்கொண்டும், குமார குலோத்துங்கன் மனைவியைப்பற்றி ஒற்றர்கள் மூலமாக அடிக்கடி விசாரித்துக்கொண்டும் இருப்பதே தகுதி. ஆம்—இதைவிட வேறு யோசனை உயர்வுடையதாகத் தோன்றவில்லை'' என்று அப்பெரியார் தம்முள் ஆலோசித்து ஒரு தீர்மானத்திற்கு வந்தார்.

"அப்படியானால், எந்தச் சிற்றரசனிடம் போகலாம்'' என்று ஆலோசித்தார். அப்போது சோணாட்டைச்சேர்ந்த மள்ளுவம் என்னும் சிறிய நாட்டின் கண் உள்ள முரணூரில் சந்திரன்சுவர்க்கி என்னும் ஒரு சிற்றரசன் அரசாண்டு வந்தான். அவன் படித்தவர்களிடத்தில் மிகவும் பற்றுள்ளவன்; தயாளகுணம் பெற்ற வள்ளல். அவனைப் பற்றிப் புகழேந்தியாருக்கு நன்கு தெரியும். ஆதலின் அவர் அவனிடமே போய்ச் சேரவேண்டுமென்று தீர்மானித்துக்கொண்டார்.

அவ்வாறே அவர் மள்ளுவ நாட்டையடைந்து முரணூருக்குச் சென்று, சந்திரன்சுவர்க்கியைக் கண்டு தம்முடைய வரலாற்றினை அவனுக்குக் கூறினார்.

அவர் வரலாற்றினைக் கேட்ட அரசன், அவர் துன்பப்பட்டதற்காக வருந்தி, அவர் தன் நாட்டை அடைந்ததற்காகச் சந்தோஷப்பட்டு அவரைப் பார்த்து, "கல்வியிற் சிறந்த பெரியீர்! தாங்கள் இந்நாட்டிற்கு எழுந்தருளி என்

னுடைய சிறு சபையைக் கௌரவப்படுத்தியதற்காக நான மனமகிழ்கின்றேன். தாங்கள் இன்று முதல் இந்த இடத்தைத் தங்களுடைய சொந்தவிடமாகப் பாவித்துத் தங்களிஷ்டம் போல் களித்திருக்கலாம்.'' என்றுகூறி அவரைப் பின்னும் பல உபசார வார்த்தைகளால் மகிழ்வித்தான். அன்று முதல் அந்நாட்டில் புகழேந்தியார் தங்கி, மிக இன்பமாகத் தமது காலத்தைக் கழித்துவந்தார். அரசனும் மற்றும் பலரும் ஒழிந்த நேரங்களில் புகழேந்தியாரோடு உரையாடி இன்புற்று அவர் கல்வித்திறனுக்கு வியந்து ஆச்சரியப்படலாயினர்.

அக்காலத்தில் சில சமஸ்கிருத பண்டிதர்கள் தம்மொழியிலுள்ள நளசரிதத்தை அடிக்கடி சந்திரன் சுவர்க்கியின் முன்னிலையில் பிரசங்கித்து வந்தார்கள். அச்சரித்திரத்தின்பால் சந்திரன்சுவர்க்கிக்கு அளவு கடந்த அன்பு உண்டாயிற்று. அதனால் அவன் அச்சரிதத்தைத் தமிழ் மொழியில் அழகாக மொழி பெயர்த்தல் வேண்டும் என்று நினைத்து, அக்காரியத்தைச் செய்வதற்கு ஏற்றவர் யார் என்று ஆலோசித்தான்; அக்கருத்தைத் தன் அமைச்சர்களிடமும் கூறினன். அவர்கள் அவன் விருப்பத்தை நிறைவேற்றுவதற்குப் புகழேந்தியாரே ஏற்றவரென்று கூறினார்கள். அவர்கள் கூறுவது சரியென்று அவனுக்குந் தோன்றினமையால், மறுநாள் அவன் புகழேந்தியாரைப் பார்த்து, ''இன்தமிழ்ப் புலவீர்! நெடுநாளாக என் மனதில் ஓரெண்ணம் உதித்திருக்கிறது. அவ்வெண்ணத்தைப் பூர்த்தி செய்யத் தாங்களே ஏற்றவர்களென்று நான் தீர்மானித்துள்ளேன்'' என்று பணிவுடன் கூறினன்.

புகழேந்தியார் பணிவு வாய்ந்த அவனுடைய சொற்களைக் கேட்டு, அவன் அருங்குணத்திற்காக மனமிக மகிழ்ந்து, ''கொடையிற் சிறந்த செங்கோன் மன்னரே! உம்முடைய விருப்பம் யாதாயினும் அதை நிறைவேற்ற நாம் காத்துக்கொண்டிருக்கிறோம். விருப்பத்தை வெளிப்படுத்துக'' என்றார்.

சந்திரன்சுவர்க்கி மனமகிழ்ந்து, ''புலவர் பெரும! வட

மொழியில் உள்ள நளசரிதத்தை அம்மொழியில் வல்லுநர்கள் பிரசங்கிக்கக் கேட்டு நான் பலகாலும் இன்பம் எய்தினேன். அதை நம் தமிழ் நாட்டார் அனைவரும் இன்பமாகப் படித்துணர வேண்டுமென்பது என் அவா. ஆகையால் தாங்கள் அதைச் செந்தமிழ்ப் பாவினிற் காப்பியமாகச் செய்தளித்தல் வேண்டும் என்பது என் வேண்டுகோள்'' என்று கூறினான்.

அரசன் அவ்வாறு கூறலும், புகழேந்தியார் ஆனந்தமடைந்து, "மன்னரே இக்காரியத்தைச் செய்யும்படி தூண்டியதற்காக நாம் மிகவும் மகிழ்கின்றோம். எம்மாற் கூடிய வரையில் அக்காப்பியத்தை யாம் அழகு பெற இறைவனருளால் முடித்துத் தருகின்றோம். நீர் அதைப்பற்றிச் சிறிதும் கவலைப்படுதல் வேண்டா'' என்று கூறினார்.

புலவர் மொழிகளைச் செவியிலேற்ற அரசன், பெரிதும் சந்தோஷப்பட்டு அவர் அக்காப்பியத்தைச் செய்வதற்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்து கொடுத்தான்.

அன்று முதல் புகழேந்தியார் வடமொழியிலுள்ள நளசரிதத்தை நன்கு ஆராய்ந்து அறிந்து கொண்டு, 'நாள் செய்வது நல்லோர் செய்யார்' ஆகையால், ஒரு நன்னாள் பார்த்து, அந்நாள் தொடங்கி நானூற்று இருபத்தைந்து வெண்பாக்களில் நளசரிதத்தை 'இன்னமுது கனிபாகு கற்கண்டு சீனி தேன்,' என ருசிக்கும்படி பாடி முடித்தனர்.

அவ்விஷயத்தை யறிந்த அரசன் பெரிதும் களிப்படைந்து புகழேந்திப் புலவரைப் புகழ்ந்து, "செந்தமிழ் வல்லீர்! இதை எல்லோர் முன்னிலையிலும் நீங்கள் அரங்கேற்றி யாவரையும் மகிழ்வித்தல் வேண்டும்'' என்றான்.

புகழேந்தியார், "அரசே! உமக்கு வேண்டியவர்களுக்கும் மற்றப் புலவர்களுக்கும் செய்தி யறிவித்து இந்நூலை அரங்கேற்றுவதற்கு ஒரு நாளையும் குறிப்பிட்டுவிட்டால் அந்நாளில் நாம் இந்நூலை அரங்கேற்றுவோம்'' என்றார்.

அரசன் அவர் மனப்படியே செய்தான். குறித்த தினத்தில் புலவர்களும் பெருமக்களும் அரசனுடைய அவைக்களத்திற் குழுமினர். புகழேந்தியார் அரசனால் தமக்கென இடப்பட்ட உயர்ந்ததோர் ஆசனத்தில் அமர்ந்து தாமியற்றிய நளவெண்பா என்னும் நூலைச் சொன்னயம், பொருணயம், ஓசைநயம் தோன்ற எடுத்துரைத்து எல்லோரையும் இன்பக் கடலில் மூழ்குவித்தார். பண்டிதர்களும் பாமரர்களும் ஒருங்கே அவர் கல்வித் திறனுக்கு வியந்து அவரைக் கொண்டாடினார்கள். அதனால் அவர் புகழ் நாடெங்கும் பரவியது.

புகழேந்தியார் நளவெண்பாவை அரங்கேற்றி முடித்தவுடன் அவருக்கு அரசன் பலவிதமான பரிசளித்துப் போற்றிப் புகழ்ந்தான்.

புலவர் பெருந்தகையாரான புகழேந்தியார் இயற்றிய நளவெண்பாவின் கதைச் சுருக்கத்தைக் கீழே காண்க :—

சுயம்வர காண்டம்:—பஞ்சபாண்டவர்கள் சூதாடித் தங்கள் நாடு நகரங்களை இழந்து காட்டிற்குச் சென்ற காலத்தில், அவர்களில் அர்ஜுனன் சிவபெருமானைக் குறித்துத் தவம் செய்யக் கயிலைக்குச் சென்றான். ஏனையோராகிய தருமர், வீமன், நகுலன், சகாதேவன் ஆகிய நால்வரும் திரௌபதியும் தங்கள் நிலைமையைக் குறித்து வருந்தி இருந்தனர். அக்காலை அவர்கள் இருந்த இடத்திற்கு வேதவியாசர் என்னும் முனிவர் பெருந்தகை வந்தார். தருமர் முதலியோர் அவருக்கு வந்தனை வழிபாடுகள் செய்த பின்னர்த் தருமர் அவரைப் பார்த்து, "மாதவமுடையீர்! இப்புவியில் சூதாடி நாடு நகரங்களை இழந்து எம்மைப் போல் கஷ்டப்பட்டவர்களுமுண்டோ?" என்று கூறி வருந்தினர்.

வேதவியாசர் அவரைப் பார்த்து, "தரும புத்திரா! நீங்கள் மட்டும் இப்படிச் சூதாடி வருந்துகின்றீர்களென்று எண்ண வேண்டா. உங்களைப் போலவே சூதாடி நாடு நகரங்களை இழந்து, மனைவி மக்களைப் பிரிந்து, தன்னினும் தாழ்

ந்த அரசனுக்குக் குற்றேவல் செய்து மீண்டும் தன்னிலையை யடைந்த அரசன் ஒருவன் முற்காலத்தில் இருந்தான். அவன் சரிதத்தை உங்களுக்குச் சொல்லுகிறேன், கேளுங் கள்'' என்று சொல்ல ஆரம்பித்தார்.

''நிடதநாட்டில் மாவிந்த நகரத்தில் அரசாண்டு வந்த நளமகாராஜன் என்பவனும், விதர்ப்ப நாட்டில் குண்டின புரம் என்னும் ஊரில் அரசுபுரிந்து வந்த வீமராஜன் புத்திரி தமயந்தியும், ஒரு தெய்வலோகத்து அன்னப் பறவையினு லும் மற்றவர்களாலும் ஒருவர் மற்றொருவரின் நற்குண நற்செய்கை அழகு முதலியவைகளைக் கேள்வியுற்று ஒருவர் மீது ஒருவர் காதல் கொள்வாராயினர். அக்காலை தமயந்தி யின் தந்தை தமயந்திக்குச் சுயம்வரம் ஏற்படுத்தினன். அச் சுயம்வரத்திற்கு இந்திரன், அக்கினி, இயமன், வருணன் என்னும் நான்கு தேவர்களும் வந்தார்கள். ஐம்பத்தாறு தேசத்தரசர்களும் வந்தார்கள். நளனும் வந்தான். நாம் முற்கூறிய தேவர்களுக்கும் தமயந்தி நளனையே மணந்து கொள்ள நாட்டமுற்றிருக்கிறுள் என்பது தெரியும். ஆயினும் அவர்களுக்குத் தங்களில் எவரேனும் ஒருவர் அவளை மண ந்து கொள்ளவேண்டும் என்னும் ஆவல் அதிகரித்தது. அத னல் அவர்கள், நளனிடம் தாங்கள் இன்னுர் என்பதையும் தங்கள் கருத்தையும் கூறி, அவனையே அவளிடம் தூதாக அனுப்பி அவள் தங்களில் எவரையேனும் மணந்து கொள்ளு மாறு சொல்லச் சொன்னுர்கள். அவர்கள் கட்டளைப் படியே நளன் தமயந்தியிடம் தூதாகச் சென்று அத்தேவர் கள் நால்வரின் பெருமையையும் அவளுக்கு எடுத்துரைத்து அவர்களில் எவரையேனும் ஒருவரை மணந்துகொள்ளு மாறு அவளுக்குக் கூறினன். தமயந்தியோ ஒரே பிடிவாத மாக நளனையன்றி வேறு ஒருவரையும் விவாகம் செய்து கொள்ளுவதில்லை என்று கூறிவிட்டாள்.

நளன் திரும்பிவந்து விஷயத்தை நடந்தது நடந்த படியே அத்தேவர்களிடம் உரைத்தான். அவன் தங்க ளிஷ்டப்படி நடந்தமையால் அத்தேவர்கள் அவனுக்கு

வேண்டிய வரங்களைக் கொடுத்து அந்நளனைப் போலவே உருவங் கொண்டு சுயம்வர மண்டபத்தில் அமர்ந்திருந்தார்கள். நளனும் அங்கு ஓர் ஆசனத்தில் அமர்ந்திருந்தான். கையில் மாலையுடன் சுயம்வரமண்டபத்திற்கு வந்த தமயந்தி, அறிவிற் சிறந்த தன்னுடைய தோழியின் உதவியாலும், வேறு சில அடையாளங்களாலும், உண்மையான நளன் யார் என்பது தெரிந்து கொண்டு, அவனுக்கு மாலை சூட்டினாள். நளன் தவிர ஏனையோர் தத்தம் இருப்பிடத்தை நாடிச் சென்றனர். அப்போது தமயந்தியை மணந்து கொள்ளவேண்டும் என்னும் நோக்கத்தோடு வழியில் வந்து கொண்டிருந்த கலிபுருடன் இந்திராதியோரைக் கண்டு, விஷயம் தெரிந்து, கோபங் கொண்டு, "ஆ, அவள் தேவர்களை மதியாது ஒரு மானுடனையா மணந்து கொண்டாள்?" என்று கூறி நளதமயந்தியரது விதிவசத்தினால் பின்னர்த் தேவர்களைப் பார்த்து, "நான் நளனையும் தமயந்தியையும் படாதபாடு படுத்தி வைக்கிறேன், பாருங்கள்" என்று சபதம் செய்து போயினன். நளனுக்கும் தமயந்திக்கும் விவாகமான சில ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு புதல்வனும் ஒரு புதல்வியும் பிறந்து வளர்ந்து வருவாராயினர்.

**கலிதொடர் காண்டம்:**—நளனையும் தமயந்தியையும் கஷ்டப் படுத்துவதாகக் கூறிச் சென்ற கலிபுருடன், நளதமயந்தியரிடத்தில் யாதொரு குற்றமுங் காணாமையால், நளனைப் பிடிக்க வகையின்றிப் பன்னிரு வருடம் வருந்திக் கொண்டிருந்தான். அதன் பின் ஒரு நாள், நளன் மாலைக் கடன் கழிக்கும் பொருட்டுச் சென்று கால் கழுவுகையில் காலின் ஒருபுறம் சிறிது நனையவில்லை. அதைக் குற்றமாகக் கொண்டு கலிபுருடன் அவனைப் பற்றி அவனுக்குத் தாயாதியான புட்கரன் என்னும் சிற்றரசனுக்கு உதவியாக இருந்து அப்புட்கரனை நளனிடம் சென்று அவனோடு சூதாடும்படி செய்தான். கால வித்தியாசத்தினால் மனையாளும் மந்திரியும் மற்றும் பலரும் தடுத்தும் கேளாமல், நளன் புட்கரனோடு சூதாடி, நாடு நகர முதலியனவெல்லாம் இழந்து, மனைவி மக்க

ளோடு காடு சென்று, பின்னர் ஓர் அந்தணனோடு தன் மக்களை மட்டும் தன் மாமனாராகிய வீமராசனிடம் அனுப்பிவிட்டுத் தன் மனைவியோடு ஒரு காட்டின் வழியே சென்று கொண்டிருந்தான்.

அப்போது கலிபுருடன் பொன்னிறமான அன்னப் பறவையின் வடிவங் கொண்டு அவர்கள் எதிரே தோன்றினன். அப்பறவை மாயப் பறவை யென்பதை அறியாத தமயந்தி அதைத் தனக்குப் பிடித்துத் தருமாறு நளனிடம் கூறினள். துக்கத்தால் வருந்தும் அவள், அப்பறவை கிடைக்கப் பெற்றால் சிறிது சந்தோஷமுறுவாள் என்று நினைத்து, நளன் அப்பறவையைப் பிடிக்கத் தன் ஆடையை வீசி எறிந்தான். உடனே அவ்வன்னம் அவ்வாடையைத் தூக்கிக் கொண்டு ஆகாய மார்க்கமாய்ப் பறந்துபோயிற்று. அது கண்ட அவன் மிகவும் வருந்தித் தன் மனைவியின் ஆடையில் ஒரு பகுதியைத் தானும் உடுத்திக் கொண்டான். பின்பு ஒற்றைத் துகிலோடு அவர்கள் அன்றிரவு ஒரு பாழ் மண்டபத்திற் சென்று படுத்துக் கொண்டார்கள். தமயந்தி அயர்ந்து உறங்கிவிட்டாள். அதுகண்ட நளன், "இவளை நாம் விட்டுப் பிரிந்தால் இவள் இவ்விதம் நம்மோடிருந்து கஷ்டப்படாமல் தன் தந்தை நாடு சென்று சுகமுற்றிருப்பாள்," எனக் கருதி, அப்படியே செய்யத் துணிந்தான். ஆனால் ஆடையின்மையால் அவளுடைய ஆடையில் பாதி அறுத்து உடுத்திக் கொண்டு செல்ல எண்ணினன். அப்போது கலிபுருடன் நளனருகில் ஒரு வாளுருக் கொண்டு கிடந்தனன். அவ்வாள் கொண்டு நளன் அவ்வாடையின் ஒரு பகுதியை அறுத்து உடுத்திக் கொண்டு தமயந்தியைப் பிரியமாட்டாமற் பிரிந்து சென்றனன். அதன் பிறகு துயில் ஒழிந்து எழுந்த தமயந்தி நளனைக் காணாது வாடி அவனைத் தேடிச்செல்லும்போது ஒருபெரும் பாம்பின் வாய்ப்பட்டு வருந்தினள். அப்போது அவ்வழி வந்த வேடன் ஒருவன் பாம்பைக் கொன்று அவளைக் காப்பாற்றி அவள் மீது விருப்புற்றான். தன்மீது விருப்புறு

தலைத் தவிர்க்கும்படி என்ன கூறியும் கேளாத அம்மூடனைத் தமயந்தி தன் கற்பின் திறத்தால் எரித்துச் சென்றனள்.

பின்னர் அவள் வழிப்போக்கர்களாகிய சில வணிகர்களுடைய உதவியால் சேதி நகர் அடைந்து வேற்றுருக்கொண்டு அந்நகரின் அரசியிடம் சில நாளிருந்தனள். பிறகொரு நாள் நளதமயந்தியரைத் தேடி யழைத்து வருமாறு வீமராஜனால் அனுப்பப்பட்ட வேதியர்களில் ஒருவன் சேதி நகரடைந்து வேற்றுருக் கொண்டிருக்கும் தமயந்தியை இன்னளென்று அறிந்து அவளைப் பற்றி அந்நகர் அரசிக்கு அறிவித்தனன். தமயந்தியின் சிற்றன்னையாகிய அவ்வரசி அதைக் கேட்டு மனமிக வருந்தித் தமயந்தியை உபசரித்து அவள் தந்தையிடம் அனுப்பினாள். தமயந்தியைக் கண்ட அவள் தாய் தந்தையரும் மற்றவர்களும் உள்ளம் வருந்தினார்கள். தமயந்தியோ அல்லும் பகலும் நளனையே நினைத்து வருந்திக்கொண்டிருந்தாள்.

கலிநீங்குகாண்டம் :—பேயுங்கண்டு நடுங்கும் நள்ளிருளில் தமயந்தியை விட்டுப்பிரிந்து நளன் சிறிது தூரம் செல்லுகையில் கார்க்கோடகன் என்னும் ஒரு பாம்பு காட்டுத்தீயில் அகப்பட்டு வருந்துவதைக் கண்டான். உடனே அவன் இரக்கங்கொண்டு அந்தப் பாம்பை அத்தீயினின்றும் எடுத்துப் புறத்தே விடுத்தான். உடனே அத்தெய்வப் பாம்பு அவனை அவன் செய்த உதவிக்காக நறுக்கென்று கடித்தது. உடனே அவன் உருவம் மாறிற்று. அதுகண்ட நளன் மனம் வருந்தினான். உடனே அப்பாம்பு நளனைப் பார்த்து, "அரசரே! நீ செய்த உதவிக்கு நான் உனக்குத் தீமை செய்தேன் என்று எண்ணாதே. நீ உன் சுயஉருவோடு இருப்பின், அஃது உன் தற்கால நிலைமைக்கு இடையூறுகுமெனக் கருதியே நான் உன் உருவத்தை மாற்றினேன். உனக்கு நற்காலம் வரும்போது இந்த உடையை நீ உன்மீது போர்த்திக்கொண்டால் உனது பழைய உருவம் வரும்'' என்று கூறி அவனிடம் ஒரு பொற்றுகில் கொடுத்துப்போயிற்று. நளன் சந்தோஷத்

துடன் அவ்வாடையைப் பத்திரமாக வைத்துக்கொண்டு, வாகுகன் என்னும் பெயரோடு அயோத்தியா நகரமடைந்து, அங்கு அரசனாயிருந்த இருதுபன்னன் என்னும் அரசனுக்குத் தேர்ப்பாகன் ஆனான்.

பிறகு, நளனைத் தேடி வருமாறு தமயந்தியால் அனுப்பப்பட்ட புரோகிதர்களில் ஒருவன் அயோத்தி வந்து தேர்ப்பாகனாயிருக்கும் நளனை நளனென்று அவனுடைய வார்த்தைகளினால் அறிந்துகொண்டு அச் செய்தியைத் தமயந்தியிடம் சென்று அறிவித்தான். உடனே தமயந்தி நளனை வரவழைப்பதற்கு உபாயமாகத் தனக்கு இரண்டாம் சுயம்வரம் நடக்கப் போகிறதென்று இருது பன்னனிடம் கூறும்படி அப்புரோகிதனை அனுப்பினாள். அவ்வேதியன் அவள் கட்டளைப்படியே சென்று அவள் கூறியபடியே இருதுபன்னனிடம் சொல்லினன். அதை உண்மையென்று நம்பிய இருதுபன்னன், “இச்சுயம்வரத்தி லாவது நான் தமயந்தியை மணத்தல் வேண்டும்” எனக் கருதி, வாகுகனாகிய நளன் தேரோட்டக் குண்டினபுரம் போய்ச் சேர்ந்தான். குண்டினபுரத்துக்குச் செல்லுங்காலத் தில் இருதுபன்னன், தான் அறிந்துள்ள ‘அக்ஷயவிருதயம்’ என்னும் மந்திரத்தை வாகுகனுக்கு அறிவித்து, அவனுக்குத் தெரிந்துள்ள ‘அஸ்வ விருதயம்’ என்னும் வித்தையைத் தானறிந்துகொண்டான். அப்போழுதே கலிபுருடன் நளனை விட்டுப் பிரிந்தான்.

குண்டினபுரம் வந்தடைந்த வாகுகனைப் பலவாறு சோதித்து அவனை நளனென்று தமயந்தி ஐயமற அறிந்து கொண்டாள். அப்போது வாகுகனாயிருந்த நளன் கார்க்கோடகன் ஈந்த ஆடையைப் போர்த்துப் பழைய உருவையடைந்தனன். தேவர்கள் மலர்மாரி பெய்தார்கள். அப்போது கலிபுருடன் அங்குத் தோன்றித் தான்செய்த கொடுமையெல்லாம் பொறுத்துக்கொண்டு தன்னை மன்னிக்கு மாறு வேண்டி நளனுக்குப் பல வரங்களைக் கொடுத்துச் சென்றனன். பிறகு நளன், தன் மனைவிமக்களோடு மாவிந்த

நகரம் சென்று, அங்குக் கொடுங்கோலோச்சிக் கொண்டிருந்த புட்கரனோடு மறுபடியும் சூதாடி, எளிதாகத் தன்னுடு நகரங்களைத் திரும்பவுங் கைப்பற்றி, வெகுகாலம்வரையில் குடிகளைத் தன் உயிர்போல் காத்துச் செங்கோல் செலுத்தி வந்தான்.

இத்தகைய நளசரிதத்தை மிக அழகாகப் பாடிய புகழேந்தியாரின் புகழ் நாடெங்கும் பரவிக் குமாரகுலோத்துங்கன் காதுக்கும் விரைவில் எட்டியது.

## பதினைரும் அத்தியாயம்

### மீண்டும் நளவெண்பாவை அரங்கேற்றல்

"புகழேந்தியார் நளவெண்பாவைத் தேனினுமினிக்கும்படி பாடிச் சந்திரன்சுவர்க்கியின் அவைக்களத்தே அரங்கேற்றினார்" என்பதைப் பல்லோராலும் கேள்விப்பட்ட குமார குலோத்துங்கன் அப்பெரும் புலவரைத் தன் அவைக்களத்தே வரவழைத்து அவரைக் கொண்டே அந்நளவெண்பாவை மீண்டும் ஒரு முறை அரங்கேற்றச் சொல்லிக் கேட்க வேண்டும் என்னும் அவாக்கொண்டனன். இவ்விருப்பம் ஆற்றில் தோண்டிய ஊற்றுக் குழியில் நீர் சுரப்பது போல் அவன் மனத்தில் சுரந்து வளர்ந்தது. அக்கருத்தை அவன் ஒட்டக்கூத்தரிடம் ஒருவாறு கூறினன். அவர் அதற்குச் சம்மதிக்கவில்லை. அரசனே தன் எண்ணப்படியே நடக்கவேண்டுமென எண்ணினன். இதனால் பின்னும் சில தினங்களில் ஒட்டக்கூத்தர் அவனுடைய இஷ்டத்திற்கு உட்படவேண்டியதாயிற்று.

உடனே குமார குலோத்துங்கன் சந்திரன் சுவர்க்கிக்குப் புகழேந்தியாரைத் தன்னிடம் அனுப்பும்படி ஒரு திருமுகம் எழுதியனுப்பியதோடு, புகழேந்தியாருக்கும் தன்னிடம் வரும்படி தனித்தொரு நிருபம் போக்கினன்.

அவ்விரு நிருபங்களையும் கண்ட புகழேந்தியாரும் சந்திரன்சுவர்க்கியும் அவற்றிற் கண்டிருக்கும் விஷய சம்பந்தமாக ஒருவரோடொருவர் பேசலாயினர்.

கடைசியாகச் சோழ அரசனிடம் செல்லுவது தகுதி என்று சந்திரன்சுவர்க்கியும் புகழேந்தியாரும் தீர்மானித்தனர். அதனால் ஒரு நன்னாளில் புகழேந்தியார் பிரயாணப் பட்டு, சோழமண்டலத்திற்குச் சென்று குமார குலோத்துங் கனையும் ஒட்டக்கூத்தரையும் கண்டார்.

குமார குலோத்துங்கன் அவரைப் பெரிதும் அன்புடன் வரவேற்று உபசரித்தனன். ஒட்டக்கூத்தரும் உடன் நின்று உபசரித்தனர். அதனால்,

" கற்பிளவோ டொப்பர் கயவர் கடுஞ்சினத்துப்
பொற்பிளவோ டொப்பாரும் போல்வரோ—விற்பிடித்து
நீர்கழிய வெய்த வடுப்போல மாறுமே
சீரொழுகு சான்றோர் சினம்." (45)

என்ற பாட்டின் கருத்துப்படி குமார குலோத்துங்கன் மீது புகழேந்தியாருக்கு ஏற்பட்டிருந்த வருத்தம் அன்றோடு ஒழிந்தது.

புகழேந்தியார் சோழனிடம் வந்து சேர்ந்த பிறகு அவன் நளவெண்பாவை மீண்டும் ஒரு முறை அரங்கேற்ற வேண்டும் என்னும் தன் கருத்தை அவரிடம் கூறினன். நமது புலவர் பெருந்தகையாரும் அக்கருத்திற்கு இணங்கி அரசனைப் பார்த்து, "அரசரே! தங்கள் விருப்பத்தை நிறைவேற்ற நான் மனமகிழ்ச்சியோடு ஒப்புக்கொள்ளுகின்றேன். அரங்கேற்றம் செய்வதற்காக ஒரு நாளைக் குறிப்பிட்டு, அந்நாளில் கம்பர் ஔவையார் முதலிய பல பெரும் புலவர்களையும், சேரநாட்டரசர் பாண்டிநாட்டரசர் போன்ற மன்னர்களையும், சந்திரன்சுவர்க்கி போன்ற சிற்றரசர்களையும், இன்னும் பலரையும், அரங்கேற்ற மண்டபத்திற்கு வருமாறு நீங்கள் அழைத்தல்வேண்டும்" என்று கூறினர்.

அக்கருத்திற்குக் குமார குலோத்துங்கன் மனமகிழ்ச்சி யோடு உடன்பட்டான்; அரங்கேற்றத்திற்கென்று ஒரு நாளைக் குறிப்பிட்டான். அந்நாளில் அறிவுடைய பெரியோர் பலரும் அரசர்களும் தன் அவைக் களத்திற்கு வருமாறு அவர்களுக்கு அழைப்புக் கடிதம் அனுப்பினன்.

குறித்த நாள் வந்தது. அரசனுடைய அவைக்களம் அழகாக அலங்கரிக்கப்பட்டு மிக அற்புதமாக விளங்கியது. மணிமுடி சூடிய மன்னர்களும், அறிவாளர்களும், தமிழ் மூதாட்டியாகிய ஔவைப்பிராட்டியாரும், கவிச்சக்கரவர்த்தி யாராகிய கம்பரும் குமார குலோத்துங்கனின் அரங்கேற்று மண்டபத்து வந்தமர்ந்தார்கள். வந்தவர்களையெல்லாம் குமார குலோத்துங்கனும் அவன் மந்திரிமார்களும் உபசரித்தார் கள். புகழேந்தியாரிடத்தில் பெரிதும் மதிப்புள்ள ஔவை யாரும் கம்பரும் அவரை க்ஷேமம் விசாரித்துக் கௌரவப் படுத்தினர். பாண்டியன் வரகுணன், சந்திரன் சுவர்க்கி இவர்களைப்போன்ற அரசர்களும் புகழேந்தியாரோடு பேசி அவரைப் பெருமை படுத்தினர்.

கடைசியாக, அரங்கேற்றத்திற்குக் குறித்த நேரமும் வந்தது; புகழேந்தியாரும் தமக்கென்றேற்படுத்தி யிருந்த ஆசனத்தில் அமர்ந்து கம்பீரமாகச் சபையோரைப் பார்த்து,

"சுருங்கச் சொல்லல் விளங்க வைத்தல்
நவின்றோர்க் கினிமை நன்மொழி புணர்த்தல்
ஓசை யுடைமை யாழமுடைத் தாதல்
முறையின் வைப்பே யுலக மலையாமை
விழுமியது பயத்தல் விளங்குதா ரணத்த தாகுதல்" (46)

என்னும் பத்தழகும் தோன்றும்படி தாம் அமைத்த நள வெண்பாவை வெகு அழகுடன் பிரசங்கித்துக் கொண்டு வந்தார். ஒவ்வொரு வெண்பாவும் மிகவும் ருசித்த படியால் கல்விக் கடலாகிய கம்பரும், ஔவையாரும், வேறு பலரும் சந்தோஷத்தால் தலையசைத்துப் புகழேந்தியாரைப் பெரிதும் உற்சாகப் படுத்திக் கொண்டே வந்தனர். ஒட்டக்கூத்தர்

மட்டும், நளவெண்பாவில் ஏதேனும் குற்றங் காட்ட வேண்டு மென்று எதிர்ப்பார்த்திருந்தார்.

அச்சமயத்தில், 'வெண்மையான முடமல்லிகை அரும்பில் வண்டு மொய்த்துச் சங்கநாதம் செய்ய,' என்னும் கருத்தை முதலடியிற் கொண்ட,

"மல்லிகையே வெண்சங்கா வண்டூத வான்கருப்பு
வில்லி கணைதெரிந்து மெய்காப்ப—முல்லைமலர்
மென்மாலை தோளசைய மெல்ல நடந்ததே
புன்மாலை யந்திப் பொழுது" (47)

என்னும் பாடலைப் புகழேந்தியார் எடுத்துக் கூறி அதற்கு வியாக்கியானமும் செய்தார்.

இந்தப் பாடலைக் கேட்டதும் ஒட்டக்கூத்தர் புகழேந்தியாரின் கற்பனைத் திறத்திற்குச் சந்தோஷப்படாமல், குற்றங் கூறவேண்டும் என்னும் கருத்துடன், புகழேந்தியாரைப் பார்த்து, "புலவரே! நீர் இப்போது பாடிய பாட்டில் மல்லிகை அரும்பைச் சங்காகவும் வண்டைச் சங்கநாதம் செய்கிறவனாகவும் கற்பித்தது சிறப்பாகத் தானிருக்கிறது. ஆனால், சங்கூதுகிறவர்கள் சங்கின் பின்புறத்தையன்றோ வாயில் வைத்து ஊதுவார்கள்? அவ்வாறு வண்டுகள் மல்லிகை அரும்பின் பின் புறத்து ஊதுகிற தில்லையே? அரும்பின் மேற்புறத்திலன்றோ மொய்த்து ஒலிக்கின்றன? அதனால் இந்தப் பாட்டில் உம்முடைய வருணனை இயற்கைக்குப் பெரிதும் மாறுபாடுடையதாக இருக்கிறது" என்று கூறி ஆக்ஷேபித்தார். * அச்சம

* '"மல்லிகையே வெண்சங்கா வண்டூத," என்ற இக்கருத்து, "எல்லியம்போ திருஞ்சிறைவண் டெம்பெருமான் குணமபாடி, மல்லிகைவெண் சங்கூது மதிளரங்க மென்பதுவே," எனப் பெரியாழ்வார் திருமொழியிலும், "மல்லிகைப்போதின் வெண்சங்கம் வண்டூத" எனத் திருக்கோவையாரிலும் பயின்றிருப்பினும், ஒட்டக்கூத்தர் ஆக்ஷேபித்தது, அவர்க்குப் புகழேந்தியாரிடம் நெடுநாளாக வுள்ள விரோதத்தினாலென்றறிக. "எல்லாம், வெகுண்டார்முன்

யத்தில் சபையில் இருந்த கம்பர், "கட்டின வீட்டிற்குக் கருத்துச் சொல்கிறவர்களுக்கென்ன? வாய்க்குச் சுலபந் தானே? அப்படிச் சொல்லுகிறவர்கள் தாங்கள் கட்டிப் பார்த்தாலல்லவோ அந்த வருத்தம் தெரியவரும்? அதை நினையாமல் இந்த ஒட்டக்கூத்தர் புகழேந்திப்புலவர் விஷயத்தில் தமக்குள்ள விரோதத்தை முன்னிட்டு, 'அவலை நினைத்து உரலை இடிப்பது' போலக் குற்றமற்ற புகழேந்தியாரின் கற்பனையின்மேல் குற்றம் சுமத்த வேண்டுமென்று கங்கணங் கட்டிக்கொண்டு வீண்வாதம் புரிகிறார். முன் நான் இராமாயணம் அரங்கேற்றுகிற காலத்திலும் இவ் வொட்டக் கூத்தர் என்மீது பொறாமைகொண்டு குற்றமற்ற என் பாட்டுக்களில் பலவற்றிற்குக் குற்றங்கூறி வந்தார். * இப்படிப் பட்டவர் வாயைப் பொட்டென்று மூடும்படி வினையமாக உத்தரஞ் சொன்னால் நன்றாயிருக்கும்" என்று நினைத்துப் புகழேந்தியாரை நோக்கினார்.

அப்போது கம்பரின் முகத்தை நோக்கிய புகழேந்தியார், அவர் முகத் தோற்றத்தினால் அவர் உள்ளக் குறிப்பை உணர்ந்துகொண்டு உளமகிழ்ந்து, ஒட்டக்கூத்தரைப் பார்த்து, "சங்கூதுகிறவர்கள் சங்கின் பின்புறத்தில் வாயைவைத்து

---

தொன்றாக்கெடும்," "காய்வதன்கண் உற்றகுணம் தோன்றாதாகும்," என்பன மாந்தர் இயற்கையாதல் கண்டுகொள்க.;

* கவிச்சக்கர வர்த்தியாகிய கம்பரிடத்தில் ஒட்டக்கூத்தருக்கு மனத்திற்குள் அதிக மதிப்பிருந்த போதிலும் வெளிப்படையாக அவரைப் புகழ்வதில்லை. கம்பர் இறந்த போது ஒட்டக்கூத்தர்,

" இன்றைக்கோ கம்ப னிறந்தநாள்? இப்புவியில்
இன்றைக்கோ என்கவிதை யேற்றநாள்?—இன்றைக்கோ!
பூமடந்தை வாழப் பொறைமடந்தை வீற்றிருக்க
நாமடந்தை நூலிழந்த நாள்?" (48)

என்று பாடியதாகக் கூறும் இச் செய்யுளாலும் கம்பரிடத்தில் ஒட்டக்கூத்தருக்கு மனத்தில் நன்மதிப்பு ஏற்பட்டிருந்த தென்பது தெரிகிறது.

ஊதுகிறதுதான் வழக்கம். ஆனால் கட்குடியனுக்கு வாயென்றும் மற்றொன்றென்றும் தெரியுமா? அதைப்போல மலரில் உள்ள தேனையுண்டு மயங்கிக் கிடக்கும் வண்டுகளுக்கு என்ன தெரியும்? ஆகையால் நான் கூறிய கற்பனை எவ்வாற்றானும் பொருத்த முடையதே'' என்று கூறினான்.

அதைக் கேட்ட சபையோர், 'புகழேந்தியார் கூறியது மிகவும் பொருத்தமுடையதே' என்று சொல்லிக் கைகொட்டிச் சந்தோஷித்தனர். ஆயினும் ஒட்டக்கூத்தர் பின்னும் புகழேந்தியார் கூறிய வெண்பாக்களில் சிலவற்றிற்கு இடையிடையே குற்றங்கூறி வந்தார். ஆயினும், அவற்றிற்கெல்லாம், அறிவிற் சிறந்த புகழேந்தியார் ஏற்றபடி பதில் சொல்லி அவர் வாயை யடக்கிப் பின்னும் சில தினங்களுள் நளவெண்பாவை இடையூறின்றி அரங்கேற்றம் செய்து முடித்தார். கம்பர் முதலிய புலவர்களும், அரசர்களும் புகழேந்தியாரைப் போற்றி, ''வெண்பாப் பாடுவதில் புகழேந்தியாரை வெல்வாரில்லை'' என்று கூறிப் புகழ்ந்தார்கள். குமார குலோத்துங்கன் முதலிய அரசர்கள் புகழேந்தியாருக்கு அளவற்ற சன்மானங்களைச் செய்தார்கள். அன்றுமுதல் அவர் வெண்பாவிற் புகழேந்தி என்னும் சிறப்புப் பெற்றார்.

பின்னும் சில தினங்கள் சென்றன. அவரவர் குமார குலோத்துங்க னிடத்தும், புகழேந்தியாரிடத்தும் உத்தரவு பெற்றுக்கொண்டு தத்தம் நாடு சென்றனர். புகழேந்தியார் மட்டும் குமாரகுலோத்துங்கன் வேண்டுகோளின்மேல் அவனிடமே தங்கியிருந்தார்.

## பதினேழாம் அத்தியாயம்

### வெறுப்பு விருப்பாதல்

**பி**ன்னும் சில தினங்கள் ஆயின. ஒட்டக்கூத்தருக்கு என்னவோ புகழேந்தியார் தம்மினுஞ் சிறந்தவர் என்பது தெரிந்

திருந்தும் அவர்மீது அவருக்கு ஏற்பட்ட பொறுமை வளர் பிறைபோல் வளர்ந்து கொண்டேவந்தது. அதனால் அவர் சமயநேர்ந்த பொழுதெல்லாம் புகழேந்தியாருக்குத் தம்மால் முடிந்த தீமைகளைச் செய்துவந்தார்.

எதற்கும் ஓர் அளவு உண்டன்றோ? எவ்வளவு தான் அறிவிற் சிறந்த பெரியவர்களா யிருப்பினும் அவர்கள் பிறர் செய்யும் குற்றத்தை எவ்வளவு காலம் பொறுத்துக்கொண் டிருக்க முடியும்? காலமுழுதும் பொறுத்துக்கொண் டிருக்க முடியுமா? முடியாது. ஒட்டக்கூத்தர் தமக்கும் மற்றப் புல வர்களுக்கும் செய்துவரும் குற்றத்தைப் புகழேந்தியார் பொறுக்க முடியாதவராகி ஒட்டக்கூத்தரை யாது செய்யலா மென்று யோசித்தார். அந்த யோசனை ஒட்டக்கூத்தர் மேல் அவர் அதிக கோபங்கொள்ளுமாறு செய்துவிட்டது. புக ழேந்தியார் கோபத்திற்கு அடிமையாகி ஒட்டக்கூத்தரைக் கொன்றுவிடுவதே நலமெனத் தீர்மானித்தார். கோபத்தினால் அறிவுடையவர்களே இப்படிச் செய்யத் துணிவார்களானால் கோபத்தின் கொடுமையை என்னென்று சொல்லுவது?

ஒட்டக்கூத்தரைக் கொன்று விடவேண்டுமென்று புக ழேந்தியார் கொண்ட தீர்மானத்தை ஒரு சிறிதும் மாற்றாது அவர் உறுதிப்படுத்தினார். அதனால் அவர் தம்மை ஒருவரும் அறியாதபடி எப்படியோ ஒரு நாளிரவு ஒட்டக்கூத்தரின் படுக்கையறையில் கையில் ஒரு பெருங்கல்லோடு சென்று ஒளித்துக்கொண்டிருந்தனர்.

பொழுது சென்று வெகு நேரமானபிறகு ஒட்டக் கூத்தர் உணவருந்தாமல் கட்டிலில் வந்து படுத்தார். அப் போது அவர் எண்ணம் புகழேந்தியார் இயற்றிய நளவெண் பாவின் மீது சென்றுகொண்டிருந்தது.

அவர், "ஆ! அந்தப் புகழேந்தியாரின் அறிவுதா னென்ன! வெண்பாக்களையெல்லாம் சருக்கரைக் கட்டிகளைப் போலல்லவோ அமைத்து நளசரிதத்தை முடித்திருக்கின்றார்! நாம் இன்னும் நூறு வருட மிவ்வுலகில் இருந்து பாடினாலும்

வெண்பாவில் அவரை வெல்ல முடியுமா? முடியாது. நாம் ஆதியில் அவரை வெறுத்தபடியால் இப்போது புகழ முடியாமல் குறை கூறி வருகிறோம். மனசாட்சி என்னவோ நம்மை வருத்துகிறது. புகழேந்தியாரை வெண்பாவிற்கரசு என்று கூறினாலும் தகும்'' என்று தம் மனத்தில் எண்ணமிட்டுக்கொண் டிருந்தார்.

அப்போது அவர் மனைவியார் அங்கே வந்து, அவரை நோக்கி, "சாப்பிடாமல் என்ன ஆலோசித்துக்கொண்டிருக்கிறீர்கள்? நேரமாகிறது, சாப்பிடவாருங்கள்'' என்று அழைத்தார்.

நளவெண்பாவின் அருமை பெருமைகளைச் சிந்தித்து ஆனந்தப்பட்டுக்கொண்டிருந்த ஒட்டக்கூத்தர், அப்போது உண்பதற்கு மனமில்லாதவராய்த் தம் மனைவியாரைப் பார்த்து, 'எனக்கிப்பொழுது உணவு வேண்டா' என்று கூறினார்.

பின்னும் அவர் மனைவியார் அவரைப் பலவாறு உண்பதற்கு வேண்டி அழைத்தார். அதனால் ஒட்டக்கூத்தர் சிறிது கோபத்தோடு அவரைப் பார்த்து, "எனக்கு உணவு வேண்டவே வேண்டா'' என்று கூறினார். மறுபடியும் அவர் மனைவியார், "பாலும் பழமுமாவது கொண்டுவருகிறேன்; அவற்றையாவது உட்கொள்ளுகிறீர்களா?'' என்று கேட்டார்.

ஒட்டக்கூத்தர் அவரைப் பின்னும் சிறிது கோபத்தோடு பார்த்து, "நீ என்ன பயித்தியக்காரியாய் இருக்கிறாயே! புகழேந்திப்புலவர் பாடிய நளவெண்பாவில் உள்ள சாரத்தை நான் இப்பொழுது பருகிக் கொண்டிருக்கின்றேன். ஆதலின் தேவாமுதமெனினும் இப்போது யான் வேண்டேன்'' என்று கூறினார்.

கூறலும், அவர் மனைவியார் தம் கணவர் நளவெண்பாவின் நயத்தைக் கருதி ஆனந்தப் பட்டுக் கொண்டிருக்கி

ருர். ஆதலால் அவர் அப்போது சாப்பிட வரமாட்டார் என்பதை அறிந்து பின்னும் அவரை அழையாது போய் விட்டார்.

ஒட்டக்கூத்தருக்கும் அவர் மனைவியாருக்கும் நடந்த சம்பாஷணையைக் கட்டிலின் கீழிருந்து கவனித்துக்கொண்டிருந்த புகழேந்தியார், "ஆ! இப்பொழுது இவர் கூறியது உள்ளபடியா? அல்லது நான் இங்கு ஒளித்துக்கொண்டிருப்பது தெரிந்தா? இல்லை. நான் இங்கு ஒளித்திருப்பது இவருக்குத் தெரியாது. இவர் இப்போது சொல்லியது பொய்யன்று; மெய்தான். நம்முடைய கவியைப்பற்றி வாயினால் மாத்திரம் அவமதிப்பாகப் பேசினதாகத் தெரிகிறதே யொழிய மனத்திலே அப்படி நினைத்ததாகத் தெரியவில்லை. நம்மைப் பற்றியும், நம்முடைய நளவெண்பாவைப் பற்றியும் சிறப்பாகத்தான் எண்ணிக்கொண்டிருக்கிருர். நாம் இந்த உண்மையை அறியாமல் அநியாயமாய் இவர் தலை மீது இப் பெருங்கல்லைப் போட்டுக்கொல்ல எண்ணி இங்கு வந்தோமே! நாம் எண்ணியபடியே செய்திருப்போமாயின் பழிக்கும் பாவத்திற்கும் ஆளாகியிருப்போம் என்பது திண்ணம். உள்ளபடியே குற்றமற்ற இந்த ஒட்டக்கூத்தரை நாம் கொன்றுவிட்டிருந்தால் அதனால் ஏற்படும் பாவத்தை எத்தனை பிறவியெடுத்தாலும் தீர்க்கமுடியாது. இவ்வொட்டக்கூத்தரின் மனைவியார் கற்பிற் சிறந்தவராய் இருத்தல் வேண்டும். அதனால் தான் இவர் உயிர்தப்பினர். இவருடைய மனைவியாரும் மங்கிலிய பாக்கியத்தைப் பின்னும் பல நாள் அனுபவிக்கக் கொடுத்து வைத்தார். அப்புண்ணியவதியார் இவரைப் போஜன முண்ண அழைத்தபடியாலன்றோ நாம் கொலை பாதகத்திற்கும் இராஜதண்டனைக்கும் உட்படாது தப்பினேம்? இந்த ஒட்டக்கூத்தருக்கு வெளிப்படையாக நம்மை வெறுக்குங் குணமிருந்தாலும், கசடறக் கற்றுத் தேர்ந்தவ ராகையால் உள்ளுக்குள் நமது கல்வியின் அருமை பெருமைகளைப் பற்றி நினைத்துப் பெருமை பாராட்டுகிருர். 'மனத்தின்கண் மாசிலனாதல் அனைத்தறன்,—ஆகுல நீர பிற,'

என்னும் திருவாக்குப்படி இவர் உள்ளத்தில் தருமங் குடிகொண்டிருக்கிறது. அதனால் இவர் வெளிப்படையாக நம்மை என்னகுறை கூறினும் அவசியம் இல்லை; இவர் உத்தமரே'' என்று எண்ணிக்கொண்டு தாமிருந்த விடத்திலிருந்து பறவைபோல் பாய்ந்து ஒட்டக்கூத்தரைக் கட்டித்தழுவி அவரது நற்குணத்திற்காக ஆனந்தப்பட்டார்.

தாம் எதிர்ப்பாராத வண்ணம் நேர்ந்த சம்பவத்தைக் கண்டு ஒட்டக்கூத்தர் திடுக்கிட்டுப் புகழேந்தியாரைப் பார்த்து, "தாங்கள் இந்த இரவில் இங்கு எப்படி வந்திருந்தீர்கள்? அதன் காரணமென்ன?'' என்று கேட்டார்.

புகழேந்தியார், "நண்பரே! நான் உமது உள்ளத்தின் உண்மையை அறியாது உம்மைக் கொல்ல வந்தேன்'' என்று சொல்லித் தாம் கொண்டுவந்திருந்த கல்லையும் எடுத்துக் காட்டினார்.

புகழேந்தியார் கூறிய வார்த்தையைக் கேட்டு அவர் காட்டிய கல்லைக்கண்ட கூத்தர் புன்சிரிப்புக் கொண்டு, "நீர் எம்மைக் கொல்ல விரும்பியதற்குக் காரணம் யாது?'' என்று கேட்டார்.

புகழேந்தியார், "நீர் எப்போதும் என் சொல்லுக்குக் குறுக்குச் சொல்லி வந்தபடியாலும், என் பாடல்களை அவமதித்து வந்தபடியாலும் நான் உம்மைக் கொல்ல வந்தேன்'' என்றார்.

அதற்குக் கூத்தர், "அப்படியானால் நீர் எண்ணியபடி என்னைக் கொல்லாமல் ஓடிவந்து என்னைக் கட்டித் தழுவிக் கொள்ளவேண்டிய காரணம் என்ன?'' என்று கேட்டார்.

புகழேந்தியார் அவரைப் பார்த்து, "பெரியீர்! நீர் அரசனிடங் கூறி என்னைச் சிறைப்புகுத்தியதற்காக நான் வருந்தவில்லை. ஆனால் நீர் என் கல்வி சம்பந்தமாகச் சமயம் வாய்த்தபோதெல்லாம் என்னை இழிவு படுத்திக் கூறிவந்த சொற்களே என் மனத்தைப் புண்ணாக்கின. அதனால் நான்

உம்மைக் கொல்லத் தீர்மானித்து இங்கு வந்து ஒளிந்திருந்தேன். இப்போது நீர் உமது மனைவியாரிடம் எனது நளவெண்பாவைப்பற்றிப் புகழ்ந்து கூறிய வார்த்தைகளால் உமது உள்ளக்குறிப்பை உணர்ந்தேன். அவ் வார்த்தைகளால் முன்னர் உம்மால் என் மனத்தில் உண்டாயிருந்த புண் ஆறியது; என் வெறுப்பு விருப்பாயது. அதனால் நான் ஓடிவந்து உம்மை அளவற்ற ஆனந்தத்தோடு தழுவினேன்" என்று சொன்னார். ஒட்டக்கூத்தருக்கு அன்றுமுதல் புகழேந்தியாரின் மீது ஏற்பட்டிருந்த பொறாமை நீங்கியதாகக் கூறுவர்.

பொழுது விடிந்தவுடன் அரசனுக்கு இச்செய்தி இவ்விருவராலும் தெரிந்தது. புலவர் இருவரும் ஒரு மனப்பட்டனர் என்று அறிந்த குமார குலோத்துங்கன் மனமகிழ்ந்து, அவ்விருவரையும் ஒருங்கே சந்தித்து, "இருபெரும்புலவீர்! நீவிர் இருவரும் சாமானியரல்லரே! தமிழ்மொழியில் அகத்தியர், தொல்காப்பியர், அபிநயர் முதலானவர்களாலும், சங்கப்புலவர்களாலும் உண்டாக்கப் பட்டுத் தொன்று தொட்டு வழங்கிவரும் அரியபெரிய நூல்களாகிய இலக்கணங்களையும், பல இலக்கியங்களையும் கற்றுத் தேர்ந்தவர்களாகையால் நீங்கள் அறியாதது என்ன இருக்கப் போகின்றது? ஆதலின் நான் உங்களுக்குச் சொல்லத்தக்கது ஒன்றுமில்லை.

"நவலருந் தோல்கேள்வித் தன்மை யுடையார்
இகலில ரெஃகுடையார் தம்முட் குழீஇ
நகலி னினிதாயிற் காண்பா மகல்வானத்
தும்ப ருறைவார் பதி." (49)

என்னும் செய்யுளை நீவிர் அறியாதார் அல்லரே! ஆகையால் பெரும்புலவர்களாகிய நீங்கள் ஒருவரையொருவர் நேசித்து அளவளாவி ஆனந்திப்பதைவிட்டுப் பகைபாராட்டுவானேன்?

"பகையென்னும் பண்பி லதனை யொருவன்
நகையேயும் வேண்டற்பாற் றன்று." (50

என்னும் அரிய திருக்குறளின் கருத்தை நீங்கள் அறிந்த வர்கள் தாமே? கல்வியறிவின் வாசனையை ஒரு சிறிதும் அறியாத என்னைப் போன்றவன் கோபங்கொள்வதியல்பே. உங்களைப் போன்ற அறிவாளர் கோபத்தைப் பாராட்டுதல் தகுதியன்றே. இதுவரையில் நடந்தது போகட்டும்; இன்று முதல் என்மீது கருணை காட்டி நீங்கள் இருவரும் எக் காரணம் பற்றியும் மனங்கோணாது ஒருமனப்பட்டு இருக் கும்படியாக நான் உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்'' என்று பணிவுடன் சொன்னான்.

## பதினெட்டாம் அத்தியாயம்

### முடிவுரை

முன் அத்தியாயத்திற் கூறிய சம்பவங்களுக்குப் பிறகு ஒட்டக்கூத்தரும், புகழேந்தியாரும் ஒரு மனப்பட்டு வாழ்ந்து வந்தாரென்பர்.

ஒரு நாள், குமார குலோத்துங்கன் உறையூரில் அரச வீதிவழியே நடையாக உலாவிச் செல்லும் போது அவன் பின் புகழேந்தியாரும், புகழேந்தியாருக்குப் பின் சிறிது தூரத்தில் ஒட்டக்கூத்தரும் சென்று கொண்டிருந்தனர்.

* அப்போது அங்கொரு வீட்டுத் திண்ணையின் மீது தமது இருகால்களையும் நீட்டிக்கொண்டு அமர்ந்திருந்த கல் விக்கடலாகிய ஒளவைப் பிராட்டியார் குமார குலோத்துங் கனைக் கண்டதும் ஒரு காலை மடக்கிக்கொண்டார்; அவன் பின்னே சென்ற புகழேந்தியாரைக் கண்டதும் மற்றொரு காலையும் மடக்கிக்கொண்டார்; அவ்விருவருக்கும் பின் வந்த ஒட்டக்கூத்தரைக் கண்டதும் மடக்கிய கால்களிரண்டையும் நீட்டி விட்டார்.

* இது கர்ண பரம்பரையாக வழங்கி வருகிறது.

தம்மை அவமதித்து ஔவையார் இப்படிச்செய்ததைக் கண்ட ஒட்டக்கூத்தர் அவரைப் பார்த்து, "அம்மே' நீர் இப்படிப் பேதம் பாராட்டி என்னை அவமதிக்கக் காரணம் என்ன?" என்று கேட்டார். †

ஔவையார் அவரைப் பார்த்து, "ஒட்டக்கூத்தரே! நான் செய்த காரியம் நியாயமானதே. நியாயத்திற்கு விரோதமாக நான் ஒன்றும் செய்வதில்லை. குமார குலோத்துங்கன் அரசனுகையாலும், அரசனுக்கு மரியாதை செய்ய வேண்டியது அவசியமாதலாலும் அவனைக் கண்ட உடன் ஒரு காலை மடக்கினேன். புகழேந்தியாரோ கவிக்கரசர்; நன்றாகப் படித்துத் தேர்ந்தவர். அவருக்கு மரியாதை செய்ய் வேண்டியது அவசியமல்லவா? அதனால் அவரைக் கண்டதும் மற்றொரு காலையும் மடக்கிக் கொண்டேன். நீரோ படித்தும்,

"உலகத்தோ டொட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்." (51)

என்னும் குறளிற்கு இலக்காயிருக்கின்றீர். அன்றியும், நிறைந்த கல்வியில்லாமல் பெருமை பாராட்டுகின்றீர். அதனால் உம்மைக் கண்டவுடன் இரண்டு கால்களையும் நீட்டிவிட்டேன்; இதிலென்ன குற்றம்?" என்று சொன்னார்.

உடனே ஒட்டக்கூத்தர் மனம் வருந்தி ஔவையாரைப் பார்த்து, "இப்படி எளிதாக என்னைப்பற்றிக் குறை கூறுவது தகுதியன்று. நான் கல்வியில் தாழ்ந்தவன் என்பதைத் தாங்கள் எப்படி அறிந்தீர்கள்?" என்று கேட்டார்.

அதற்கு ஔவையார், "நல்லது, கூத்தரே! நீர் உண்மையிலேயே சிறந்த புலவராயின் சோழனையும், அவன் நாட்டையும் சிறப்பித்துச் **சந்திரன்** எனப் பொருள் படும் ஒரு

---

† சிலர் ஒட்டக்கூத்தரை அவமதிக்க வேண்டிய காரணம் என்னவென்று குமார குலோத்துங்கனே ஔவையாரைக் கேட்டதாகக் கூறுவர்.

பதத்தை ஒரு பாடலின் ஈற்றடியில் மூன்றிடங்களில் பிர யோகித்துப் பாடும்; பார்ப்போம்,'' என்று கூறினார்.

அதைக்கேட்ட ஒட்டக்கூத்தர், "ஆகா! அப்படியே பாடுகிறேன்; பாரும்,'' என்று கூறி,

"வெள்ளத் தடங்காச் சினவாளை வேலிக் கமுகின் மீதேறித்
துள்ளி முகிலைக் கிழித்துமழைத் துளியோ டிறங்குஞ் சோணாடா!
கள்ளக் குறும்பர் குலமறுத்த கண்டா வண்டர் கோபாலா!
பிள்ளை மதிகண் டிப்போதை பெரிய மதியு மிழந்தானே!'' (52)

என்று ஒரு பாட்டுப் பாடினார்.

அதில் கடைசி அடியில் சந்திரன் என்னும் பொருள் கொண்ட மதி என்னும் பதம் மூன்றிடத்தில் வாராமல் இரண் டிடத்தில் மட்டும் வந்தமையால் உடனே ஔவையார் ஒட் டக்கூத்தரை நோக்கி, 'உன் பாடலில் ஒரு சந்திரன் குறைந் ததே,' என்றும், 'உனக்கு அறிவு கெட்டதே,' என்றும் சிலேடையாகப் பொருள் படும்படி, 'ஒட்டா, ஒருமதி கெட் டாய்,' என்று கூறி அருகிலிருந்த புகழேந்தியாரைப் பார்த்து, "நான் ஒட்டக்கூத்தரைப் பாடச் சொன்னபடி நீர் பாடும் பார்ப்போம்'' என்று கூறினார்.

உடனே புகழேந்தியார், "தங்கள் கருத்துப்படியே பாடுகிறேன் அம்மா!'' என்று கூறி,

"பங்கப் பழனத் துழுமுழவர்
பலவின் கனியைப் பறித்ததென்று
சங்கிட் டெறியக் குரங்கிளநீர்
தனைக்கொண் டெறியுந் தமிழ்நாடா!
கொங்கர்க் கமரா வதியளித்த
கோவே! ராச குலதிலகா!
வெங்கட் பிறைக்குங் கரும்பிறைக்கு
மெலிந்தப் பிறைக்கும் விழிவேலே.'' (53)

என்று கடைசி அடியில் சந்திரன் என்னும் அருத்த முள்ள பிறை என்னும் சொல் மூன்று வரும்படி பாடினார்.

அதைக்கேட்ட ஔவையார் புகழேந்தியாரைப் பெரிதும் புகழ்ந்தார். அன்று முதல் ஒட்டக்கூத்தர் தம்முடைய செருக்கடங்கிப் பெரிதும் அமரிக்கையாக நடந்து வந்தனர் என்பர்.

பின்பு ஒரு நாள் குமார குலோத்துங்கன் ஒட்டக்கூத்தரையும் புகழேந்தியாரையும் பார்த்து, நீங்கள் இருவரும் இந்நாட்டிலுள்ள திருவையாற்றையடுத்த திருநெய்த்தானம் * என்னும் ஸ்தலத்தில் திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் நெய்யாடி ஈசரைக் குறித்து, 'நெய்த்தாடத்தானைச் சேவித்தே,' என்பது மகுடமாக வரும்படி சந்த விருத்தமாக ஒவ்வொரு பாட்டுப்பாடுங்கள்,'' என்றான்.

அதைக்கேட்ட ஒட்டக்கூத்தர், "அப்படியே பாடுகிறேன் என்று கூறி, "விக்கல் எடுத்து நடுக்கித் தேகத்தை விட்டுச் சீவனைது வெளிப்பட்டுப் போய் விட்டால் அதற்கு முன்னே நகமுஞ்சதையும் போல் பிரிவில்லாமல் பரிவுற்றிருந்த தாய், தந்தை, பெண்டு, பிள்ளை முதலிய உறவினர் எல்லோரும் அருமையாகப் பாராட்டிப்போற்றி வளர்த்த தேகத்தை மயானத்திற்குக் கொண்டு சென்று விறகின்மீது ஏற்றி நெருப்பிட்டுச் சாம்பலாக்கிவிட்டு அங்கொருவருந் தங்காமல் அந்தக்கணமே திரும்பித் தாம் இருந்த ஊருக்குள் வந்து சேர்ந்து, 'செத்தவன் வாயிலே மண்; இருந்தவன் வாயிலே சோறு,' என்னும் பழமொழிக் கேற்ப உண்டுடுத்துச் சந்தோஷிக்கின்றார்கள். இத்தகைய கேவல ஸ்திதியில் இருக்கின்ற இத்தேகத்தின்மீது இச்சைவைத்து இதைக் காப்பாற்று நிமித்தம் பொருளைச் சம்பாதித்துத் தருமம் செய்யாமல் வீட்டில் புதைத்து வைப்பவர்களே! சைவசித்தாந்தப்படி ஆன்மாக்களின் இளைப்பைத் தீர்க்கும் பொருட்டுச் சங்கார கிருத்தியஞ்செய்து சகல சராசரங்களும் மாய்ந்து ஒடுங்கிய மயானத்திலே என்பு மாலை அசையவும், பேய்கள் கூடியாடவும், சடைமுடியிலிருக்கும் கங்கை அலைவீசித்

* இவ்வூர் இப்போது தில்லைஸ்தானம் என்று வழங்குகிறது.

துளிக்கவும், வலது கையில் ஏந்திய மழு நெருப்பைக் கக்கவும், காதில் அணிந்திருக்கும் சர்ப்பாபரணங்கள் நெகிழ்ந்து ஆடவும் ஆடுகின்ற திருநெய்த்தானத்துப் பரமசிவனைத் துதித்து வணங்கி நெறி வழாது நிற்கக் கடவீர்கள்'' என்ற கருத்தை அமைத்து,

"விக்கா வுக்கா வித்தா விப்போய்
விடடார் ரட்டார் சுட்டூர் புக்கா
ரிச்கா யதநா சைப்பா ருப்பே
யிற்றே டிப்போய் வைப்பீர் நிற்பீ
ரக்கா டப்போ தொக்கா சீத்
புப்பா டத்தே வப்பா டப்பு
ணைக்கா க்கா வத்தா டப்போ
நெய்த்தா னத்தா னைச்சே வித்தே. (54)

என்னும் ஒரு பாடலைப்பாடினார்.

பிறகு புகழேந்திப்புலவர், "அகங்காரமுதலிய அவகுணங்களை மேற்கொண்டு உலகப்போராட்டத்திலகப்பட்டு ஒருவகையிலும் மரணத்தை ஜயிக்கும் உபாயத்தைக் காணாமல் காலனுக்கிரையாகும் மனிதர்களே! பின்பு பார்த்துக் கொள்ளலாமென்று உங்கள் வாழ்நாட்களில் ஒரு கணப்பொழுதையும் வீணாகக் கழித்து விடாதீர்கள். கடல்போலும் வற்றாதநெடிய நீரோடைகளிலுள்ள மச்சங்கள் வேகத்தோடெழும்பி, அருகில் மேகமண்டலத்தை அளாவி வளர்ந்திருக்கின்ற கமுக மரத்திற்றாவி, எதிர்ப்போய்ப் பாக்குக் குலைகளை உதிர்த்து, அங்கிருந்து திரும்பிக் கழனியில் விளைந்துள்ள நெல்லின் அடியில் விழுந்து, துள்ளித் துடித்து அந்நெற்கதிர்களைச் சிதறி, அவ்விடத்தைவிட்டு எழுந்து அதனருகில் கொப்பரையில் காய்ச்சப்படும் கரும்பின் இரசப்பாகிற்போய் உழவர்கள் வாய்க்கினிய உணவாகும்படி விழுகின்ற வளப்பம் பொருந்த திருநெய்த்தானத்தின் நெய்யாடிப்பிரானைத் துரிதமாக மந்திர முதலியன வழுவாமல் பூசைபுரிந்து, வலம் செய்து, மனமார நினைத்துத் தலைகுனிந்து வணங்கிப் பக்தி குறையாமல் நிற்பீர்களாக'' என்னும் பொருள்படும்

"தந்கோ லிப்பூ சந்பா சத்தே
தட்டா மந்ரா கைக்கே நீந்பீர்
ழந்கோ லிக்கோ லிப்பூ சித்தே
ழட்டா மந்சே வித்தே நீந்பீர்
மந்ற நெட்டோ டைப்பா ரைச்சேன்
டைப்பூ சந்தே றித்தா விப்போய்
நெந்ற ஞந்ற லைப்பா கிந்சேர்
"நெய்த்தா னத்தா னைச்சே வித்தே." (55)

என்னும் பாடலைப் பாடி முடித்தார்.

ஒட்டக்கூத்தர் பாடிய பாடலையும், புகழேந்தியார் பாடிய பாடலையும் உற்றுக் கவனித்துக் கொண்டிருந்த குமார குலோத்துங்கன் அவ்விருவர் பாடல்களும் ஒன்றுக்கொன்று உயர்வு தாழ்வு இல்லாமல் இருப்பதைக் கண்டு சந்தோஷித்து அவ்விருவருக்கும் ஏராளமான பரிசுகளை அளித்தான்.

பின்னும் சில நாட்கள் சென்றன. குமார குலோத்துங்கன் ஒரு நாள், "நாம் முன்னொரு நாள் புகழேந்தியாரையும், ஒட்டக்கூத்தரையும் திருநெய்த்தானத்துள்ள சிவபிரானைத் துதித்து அவர்மீது பாடும்படி சொல்லிப் பாடுவித்தோம். இப்போது ஸ்ரீமகாவிஷ்ணுவின்மீது பாடும்படி அவர்களுக்குக் கூறவேண்டும்," என்று நினைத்து அப்புலவர்களைச் சந்தித்து, "ஐயன்மீர்! நீங்கள் இருவரும் திருக்குறுங்குடியில் நம்பியென்று நாமஞ்சாற்றிக் கொண்டு எழுந்தருளியுள்ள பெருமாள்மீது இன்னார்க்கிடம் இன்னதென வல்லோசையில் தலைக்கு ஒரு பாட்டுப் பாடுங்கள்" என்று வினயமாகக் கூறினான்.

உடனே ஒட்டக்கூத்தர், "ஐராவதம், தாமரை வாமனம், குமுதம், அஞ்சனம், புஷ்பதந்தம், சார்வபௌமம், சுப்பிரதீபம் என்னும் பெயரினையுடைய அஷ்டதிக்குக் கஜங்களும் திடுக்கிட்டு வருந்தி அலறி நிலைபெயர்ந்தோடக் கறுத் கடலில் தைத்துருவும்படி அஸ்திரப்பிரயோகம் செய்த இரா

பிரானாக அவதரித்த திருமாலுக்கு வாசஸ்தானமாவது நெ-பருத்த மதுரமாகிய கரும்பு முதிர்ந்து கணுவெடித்து அதிலிருந்து முத்துத் தெறித்து, சிறந்த வண்ணமாயிருக்கின்ற கொக்கின் வாயில்விழ, அம் முத்தை அது விழுங்கி அரைக்கடி விக்கிக் கக்குகின்ற சோலைசூழ்ந்த சிறப்பினையுடையது திருக்குறுங்குடி யென்னும் திவ்விய தேசம்" என்னும் பொருளோடு,

"திக்குளெட் டுங்கயற் றாக்கமுற் றுத்திடுங் கிட்டமற
மைக்கடற் குட்டாந் தைத்தவிட் டோற்கிட மாக்குவா
இக்குமுற் றிக்கணுச் சற்றுவிட் டுததெறித் திட்ட முத்தைச்
சொக்குமொக் கக்கக்கி விக்குமச் சோலைக் குறுங் குடியே"

என்னும் பாடலைப்பாடி முடித்தார்.

பிறகு புகழேந்திப்புலவர், "ஏனைய மந்திரங்களைப்போலல்லாமல் பிரணவ சகிதமாய் ஏகாக்ஷரி, திரியாக்ஷரி, பஞ்சாக்ஷரி முதலியவைகளுமாயிருக்கின்ற அஷ்டாக்ஷரி என்னும் பெருமை தங்கிய மூலமந்திரத்தைக் குருவின் அருளால் பெற்று, அதைத் தங்கள் தங்கள் கருத்தில் வைத்து, எப்பொழுதும் முறை தவறாமல் அநுசரித்துத் தொழுதுஸ்தோத்திரம் செய்கின்ற பெரியோர்களுக்கு ஈடும் எடுப்புமில்லாத பெருஞ் சிறப்புண்டாகத் தம்முடைய அழகிய பாதங்களை அருளுகின்ற வட்ட வடிவமான நெடிய சேஷசயனத்தில் யோக நித்திரை செய்யும் நம்பி யெம் பெருமானுக்கு உறைவிடம் யாதெனில், ஆல்கொண்ட சங்கினங்கள் வயலிலிருக்கும் தாமரைப் பொகுட்டில் தங்கித் தவழ்ந்து ஏறி முத்துக்களைப் பெறுகின்ற வளப்பம் உடைய திருக்குறுங்குடியாகிய திவ்விய தேசமேயாம்," என்னும் கருத்துள்ள,

"எட்டெழுத் தைக்கருத் திற்குறித் திட்டுநித் தம்பரவும்
சிட்டர்கட் குத்திருப் பொற்பதத் தைச்சிறக் கத்தருமன்
வட்டநெட் டைப்பணி மெத்தையத் தற்கிடம் வாரிசப்பொ
குட்டினத் துக்குலந் தத்திமுத் தீனுங் குறுங்குடியே." (57)

என்னும் பாடலைப்பாடி முடித்தார்.

புகழேந்தியாரும் ஒட்டக்கூத்தரும் பாடிய இவ்விரு டல்களையுங் கேட்ட அரசன் அவ்விருவருக்கும் சமான —கச் சன்மானஞ் செய்து சந்தோஷித்து அவர்களோடு வெகுகாலம் வரையில் இன்புற்று வாழ்ந்திருந்தா னென்பர்.

முற்றிற்று

# செய்யுள் அரும்பத உரை

பாட்டு எண்.

1. கலைச்செல்வர்—கல்வியையுடைய செல்வர்கள்; நளன் மடை—நளனால் சமைக்கப்பட்ட சமையல், (நளபாகம்.); உளன்—மனம்; சீர்—சிறப்பு; யாத்த—செய்த; வியத்தகு—ஆச்சரியப்படத்தகுந்த.
2. மயிலை—திருமயிலாப்பூர்; கச்சி—காஞ்சிபுரம்.
3. வியன்—பெருமை; வீழா—அழியாத; கொடை—கொடுத்தல் (தருமம்); பண்பு—குணம்; வாய்மை—உண்மை; பொறை—பொறுமை; விழுக்குடி—சிறந்த குடும்பம்.
4. குலன்—உயர்குலம்; அருள்—கிருபை; தெய்வங் கொள்கை—கடவுள் உண்டென்னும் ஆஸ்திகத் தன்மை; கட்டுரை—கட்டிச்சொல்லுதல்: நிறைகோல்—தராசு கோல்; நிகர்—ஒத்த; மாட்சி—பெருமை; உலகியல்—உலகத்தின் இலக்கணம்; இனையவும்—இப்படிப்பட்டவை பிறவும்
5. அழல்—நெருப்பு; எத்திறத்து—எவ்வகையில்; ஆசான்—குரு; உவக்கும்—சந்தோஷிப்பான்.
6. முனியான்—ஆசிரியன்; பருகுவன் அன்ன—குடிப்பவனைப்போல்; ஆர்வம்—ஆசை; பாவை—பொம்மை செவி—காது; நெஞ்சு—மனம்; களன்—இடம்.
7. வழக்கு—உலகவழக்கு செய்யுள் வழக்காகிய இருவகை நடை; பாடம்போற்றல்—படித்த பாடங்களை மனனம் பண்ணுதல்; அமைவர—யாவும் பொருந்தும்படி; மாண்பு—குணம்; பயிறல்—பழகுதல்; வினாதல்—கேள்விகேட்டல்; விடுத்தல்—பதில் கூறுதல்; கடன்—கடமை.
8. ஈன்றபொழுதின்—பெற்ற காலத்தைவிட; உவக்கும்—சந்தோஷிப்பாள்; சான்றோன்—பெருமையை யுடையவன்.
9. நூல்—சாஸ்திரம்; கலை—கல்வி; செம்பியன்—பாண்டியன்; நெய்த்தானம்—ஒரு சிவதலம்; மால்—பெருமை; தற்கோலி—தற்புகழ்ச்சிக்காரன்; களந்தை—ஓர் ஊர்.

10. நாட்கவிதை—புதுமையானகவி; கழகம்—கல்விச்சபை, கவிராசன்—புலவர்களுக்கரசன்.
11. பொதிய—பொதியமலை; செந்தமிழ் முனிவன்—அகஸ்தியர்; தழைத்து—செழித்து.
12. மெய்—தேகம்; துஞ்சார்—உறங்கார்; செவ்வி—காலம்; கருமம்—காரியம்.
13. ஈசன்—கடவுள்,
14. தார்வேந்தன்—மலர்மாலையை யணிந்த அரசன்; மண்—பூமி; மண்டலம்—பூமியாகிய இடம்.
15. கடை—வாயில்; அகிலம்—உலகம்; நீடும்—பரவியுள்ள; பிரான்—தலைவன்.
16. நீணிலம்—பரந்த உலகம், விரிந்த உலகம்; பதாம்புயம்—பத + அம்புயம் = பாதங்களாகிய தாமரைமலர்கள்.
17. வலம்—வலப்பக்கம்; இடம்—இடப்பக்கம்; கனகம்—பொன்; தண்டி—பல்லக்கு.
18. கோரத்துக்கோப்போ என்னும் பாட்டு.
ஆர்—ஆத்திமாலை; வேம்பு—வேப்பம்பூ மாலை; ஆதித்தன்— சூரியன்; அம்புலி-சந்திரன்; மீனவன்—மீனக்கொடியையுடைய பாண்டியன்; உறந்தை—உறையூர்.
19. ஒருமுனிவனேரியிலோ என்னும் பாட்டு.
ஒரு முனிவன்—ஒப்பற்ற அகஸ்திய முனிவர்; நேரி—நேரிமலை; நெடுமால்—மகாவிஷ்ணு; செங்கதிர்—சிவந்த கிரணங்களையுடைய சூரியன்; கடிப்பகை—பேய்க்குப் பகையான வேப்பிலை; தாதகியம் கண்ணி—ஆத்திமாலை; பரவை—கடல்; பதம்—தாள்; பராக்கிரமம்—பெருமை; பகர்வரிது—சொல்லுதல் அருமை.
20. வென்றி — வெற்றி; விறல்வேந்தர் — வல்லமையுடைய அரசர்கள்; கவசம்—மேலணி; வளவன்—சோழன்; துன்றும்—பொருந்தும்.
21. வெறி—வாசனை; தொடை—மாலை; மீனவர்—பாண்டியர்; கோன்—அரசன்; புறம்—முதுகு.
22. வானம் பொய்யாது—மழை பெய்தல் தவறாது; வளம்—செல்வம்; கொற்றம்—வெற்றி; சிதையாது—அழியாது.
23. காவலன்—நவக்கிரகங்கள்; மாரி—மழை; வறங்கூரும்—குறையும்; மன்னுயிர்—உலகத்தில் நிலைபெறும் உயிர்கள்.

24. காவலன்—காத்தலில் வல்லவன், அரசன்; காக்குங் கால்—காக்கும்போது; இடையூறு—துன்பம்; பரிசனம்—சுற்றத்தார்; ஊனம்—துன்பம்; பகைத்திறந்தால்—பகையரசர்களின் வல்லமையால்; உயிர்—ஊர்வன, நடப்பன, பறப்பன. ஆகிய ஜந்துக்கள்; அறம்—தருமம், நீதி.

25. அரவிந்தம்—தாமரைப்பூ; கூம்ப—மூடிக்கொள்ள; குமுதம்—அல்லிமலர்; முகையவிழ்ப்ப—மொட்டு மலர; நிகழ்கால் நிழலைவீசும்; மதியம்—சந்திரன்; அழல்கால்—நெருப்பின் நிறத்தை வீசுகின்ற; அவிர்சடை—விளங்குகின்ற சடை; அந்திவண்ணன்—மாலையில் அஸ்தமிக்கும் சூரிய ஒளியைப்போன்ற நிறத்தையுடைய பரமசிவன்; கழல்—வீர சண்டை; கைதவன்—பாண்டியன்.

26. ஒவ்வுவரோ — ஒப்பாவரோ ; திங்கள்குலன்—சந்திர குலம்; எடெழுதார்—கற்சிலைகள்.

27. பூவேந்தர்—பூமியைக்காக்கும் அரசர்கள் ; புரப்பார்—காப்பாற்றுவார் ; பாவேந்தர் — கவிச்சக்கரவர்த்திகள் பான்மை—தன்மை; கா—சோலை; மாறன்—பாண்டியன்; வீறணை—பெருமை பொருந்திய சங்கப்பலகை.

28. நலனைப்புகழ்கின்ற என்னும் பாட்டு.

நாள்கவிதை—புதுமையான பாட்டு; தவளம்—முத்து; நகை—பல்; தென்னவன்—பாண்டியன்.

29. வில்லி—வில்லிபுத்தூராழ்வார்; கவிதை—பாட்டு; தெட்டுதல்—ஏமாற்றுதல்

30. ஈசற்கு—கடவுளுக்கு.

31. ஊழ்—முன்செய்தவினை.

32. உன்னார்—நினைக்கமாட்டார்கள் ; உறாவும்—உண்டாகும்; வெம்குறை—கொடியகுறையை; தீர்க்கிற்பார்—தீர்ப்பார்கள்; விழுமியோர்—சிறந்தபெரியோர்; திங்கள்—சந்திரன்; கறை—குற்றம்; கருதாது—நினைக்காமல்.

33. கான்—காடு; தழல்—நெருப்பு; கனைகடல்—ஒலி செய்கின்ற கடல்; சுறவம்—சுறாமீன்; கதிரோன்—சூரியன்.

34. தார்—பூமாலை.

35. மோனைமுத்தமிழ்--மோனையென்னுந்தொடையழகு நிரம்பிய இயல், இசை, நாடகம் என்னும் மூன்று தமிழ்; மும்மதம்—கன்னமதம், கபோலமதம், பீஜமதம் என்பன.